பக்கங்கள்:இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 20 திங்கட்கிழமை (04.01.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 039

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய கூட்டம் இன்றும் நாளையும்

## முடிவெடுக்கும் பொறுப்பு பெரும்பாலும் கட்சித் தலைவர்களிடம்

கொழும்பு, ஜனவரி 04

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன முடிவை எடுப்பது என்பது குறித்து ஆராய்வதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு இன்றும் நாளையும் முற்பகல் 10 மணிமுதல் நாடாளுமன்றத்தில் உள்ள தனது கட்சி அலு வலகத்தில் கூடி ஆராயவிருக்கின்றது.

எனினும், இவ்விடயத்தை ஒட்டி உடனடி முடிவு ஏதும் இக்கூட்டத்தில் எடுக்கப்படாமல் அந்தப் பொறுப்பைத் தமிழ்க் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களிடம் ஒப்படைக்கும் தீர்மானம் எட்டப்படலாம் என விடயமறிந்த வட்டாரங்களில் இருந்து அறியவந்தது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பாளர்களுடன் தேர்தல் ஆணையர் நாளை சந்திப்பு

கொழும்பு, ஜன. 04

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களுக்கும், தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்காவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நாளை இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்கள் 22 பேருடன் அரசியல் கட்சிகளின் செயலாளர்களும் இச்சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர்

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுத ஊழல் பற்றிய விவாதம்; சவாலை ஏற்றது ஜெனரல் தரப்பு

கொழும்பு, ஜன. 04

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளரான சரத் பொன்சேகாவுக்கு எதிராக அரசுத் தரப்பினர் முன்வைத்திருக்கும் ஆயுத ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பாக விவாதிப்பதற்கு சரத் பொன்சேகா எப்போதும் தயாராகவுள்ளார் என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டி இதனைத் தெரிவித்தார் ஜே.வி.பியின் (20ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் 12 ஆயிரம் பேர் இதுவரையில் மீளக் குடியேற்றம்

### முல்லைத்தீவு அரச அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 04

முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்று திங்கட்கிழமையும் நாளை மறுதினம் புதன்கிழமையும் 1,200 பேர் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர் என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இதுவரை 12 ஆயிரம் பேர் முல்லைத்தீவில் குடியமர்த்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாற -

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 12 ஆயிரம் பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். முகாம்களிலுள்ள ஏனையோரையும் கட்டம் கட்டமாகக் குடியேற்ற நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இன்று திங்கட்கிழமை ஏ - 9 வீதியின் மேற்குப் பக்கமாக ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பகுதியிலுள்ள கிராமங்களிலும் எதிர் வரும் புதன்கிழமை மாந்தை கிழக்கிலும் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## நேரடி விவாதத்தில் கலந்து கொள்வதற்கு ஜனாதிபதிக்கு போதியளவு நேரமில்லை

### அமைச்சர் நிமால் சிறிபால தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 04

நேரடி விவாதமொன்றில் கலந்து கொள்ளும் அளவிற்கு ஜனாதிபதிக்குப் போதியளவு கால அவகாசமில்லை - என்று அரசு அறிவித்துள்ளது.

தேர்தல் விவகாரங்கள் தொடர்பில் நேரடி விவாதமொன்றில் கலந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா விடுத்த கோரிக்கைக்கு அரசு பதிலளித்துள்ளது.

இராணுவத் தளபதியாக கடமையாற்றிய காலப்பகுதியில் (20ஆம் பக்கம் பார்க்க)

## வியாழக்கிழமை இங்கு வருகின்றது

## டெங்கு நோயைக் கட்டுப்படுத்த கொழும்பில் இருந்து மருத்துவக்குழு

யாழ்ப்பாணம், ஜன.04

வேகமாகப் பரவிவரும் 'டெங்கு' நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்துவதற்குக் கொழும்பிலிருந்து விசேட மருத்துவக்குழுவொன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை வருகைதரவுள்ள இந்த மருத்துவக் குழுவினர் இரண்டு தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பல்வேறு விதமான செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளனர் என்று யாழ். சுகாதாரத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் டெங்கு நோயின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## அரச - எதிரணி ஆதரவாளர்கள் கிரிபத்கொட பகுதியில் மோதல்!

### வாகனங்கள் பல சேதம்; போக்குவரத்தும் பாதிப்பு

கொழும்பு, ஜன. 04

கொழும்பு கிரிபத்கொடைப் பகுதியில் ஆளும் கட்சி - எதிர்க்கட்சி ஆதரவாளர்களிடையே நேற்று இடம்பெற்ற மோதல் காரணமாக வாகனங்கள் பல சேதமடைந்ததுடன் அங்கு பல மணி நேரம் போக்குவரத்தும் தடைப்பட்டது.

தேர்தல் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துக்கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி (20ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலைப் பகிஷ்கரிப்பதோ, தமிழ் வேட்பாளரை ஆதரிப்பதோ வேண்டவே வேண்டாம் எனத் தமிழ்ப் புத்திஜீவிகள் வலியுறுத்து

### புத்திசாதுரியத்துடன் செயற்பட தமிழ் அரசியல் தலைமைத்துவங்களிடம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 04

இந்த ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதோ அல்லது தனித் தமிழ் வேட்பாளர் என்ற கோஷத்திற்கு அடிபணிந்து தமிழர்களின் வாக்குகளை அரசியல் வலுவிழந்தவையாக்குவதோ தமிழ் மக்களின் அரசியல் மீட்சிக்கு உதவப் போவதில்லை என்பது தெளிவு. ஆகவே, அதிகாரத்துக்கு வரக்கூடிய தரப்போடு பேரம் பேசுவதற்கான நல்ல சந்தர்ப்பமாக இந்த வாய்ப்பைப் பயன்படுத்துவதுடன் அதனைப் புத்திசாதுரியத்துடன் அணுகி உரிய தெரிவைச் செய்யுமாறு தமிழ் மக்களை வழிநடத்துவது தமிழ் அரசியல் தலைமைத்துவங்களின் பொறுப்பாகும்.

- இவ்வாறு தமிழர் தரப்பில் மதத் தலைவர்கள், புத்திஜீவிகள் அடங்கிய குழு ஒன்று தமிழ் அரசியல் தலைமைத்துவங்களிடம் பகிரங்கமாகக் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

யாழ். ஆயர், நல்லை ஆதீனம், பேராசிரியர்கள் பொ.பால சுந்த[illegible] புத்திஜீவிகள் குழு இது தொடர்பாகப் பகிரங்க அறிவித்தல் ஒன்றை விடுத்திருக்கின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து முடிவு செய்வதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று கூடவிருக்கையில் இந்தப் பகிரங்க அறிவித்தல் வெளிவந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை மோகனநாதன்

(அதிபர்-தரம்I, அராலி இந்துக்கல்லூரி)



கலைநகர், வட்டு.வடக்கு, சித்தன் கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மோகனநாதன் (அதிபர், அராலி இந்துக்கல்லூரி) அவர்கள் நேற்று (03.01.2010) ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - கனகேஸ்வரி தம்பதியினரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான தங்கராசா - சாரதாம்பாள் தம்பதியினரின் மருமகனும், திலகராணியின் அன்புக்கணவரும், கோகுலன் (கணித புள்ளி விவரவியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்), திவாகரன் (வெளிவாரிப் பட்டப்பிரிவு மாணவன், யாழ்.பல்கலைக் கழகம்), சுவேதிகா (A/L, 2010, கலைப்பிரிவு மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகேஸ்வரதேவி, சச்சிதானந்தன், ஜெகயோதீஸ்வரதேவி, திருவருள்நாதன், சிவநாதன் (சுவிஸ்), தவநாதன் (ஆசிரியர், தி/ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி), குகனேசன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தனபாக்கியலட்சுமி கனகரத்தினம் (கொழும்பு), நித்தியானந்தம் (கணக்காளர், கொழும்பு), சச்சிதானந்தம் (அவுஸ்திரேலியா), தயானந்தன் (வவுனியா), தூயமணி கருணானந்தசிவம், முருகானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு. வடக்கு,
சித்தன்கேணி.
தொ. பே: 0213002666

(சி/563885)

தகவல் :
குடும்பத்தினர்.

### வைத்திலிங்கம் நவரத்தினம் (கோடாக்காரர்)



உடுவில் கிழக்கு, கற்பகப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் நவரத்தினம் 31.12.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - மீனாட்சி தம்பதியினரின் அன்பு மகனும் தங்கரத்தினத்தின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, மதியாபரணம் மற்றும் நகுலாவதி, மகாராஜா, லீலாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் செல்வநாயகம், பாஸ்கரன் (ஜேர்மனி), மனோகரன் (ஜேர்மனி), நவசீலன் (ஜேர்மனி), நாகேஸ்வரி, நாகேஸ் வரன் (ஜேர்மனி), நந்திரா, பிரபாலினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயகுமாரி மங்களேஸ்வரி, இராகினி (ஜேர்மனி), யோகேஸ்வரி (ஜேர்மனி), ஜெயகலா (ஜேர்மனி), உதயகுமார், றஜனி (ஜேர்மனி), சிறிசுகுமார், விக்கினேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் விஜிதா, சுகிர்தா, ராஜ்குமார், ரஜீவன் அருட்செல்வி, அருள்மதி, அருள்நிதி, மேகலா, சயந்தன், சயந்தினி, தனராஜ்லேகன், டர்சிகா, தினேஸ், ராகுலன், வேனுகா, டர்சிகா, விஸ்மன், விதுஜா, கௌசிகன், நவநீதன், நிதுஜா, நிம்ஜா, நிர்மலன், காண்டீபன், உஷாந்தினி, கிருசாந்தினி, சுபா ஜினி, கோவிந்தன், சபிதா, சபித்தன், விதுஜன், விவிதன் ஆகியோரின் அன்புப்பேரனும் நகிர்தனா, டிஷானன், நிகேதனன், ஹாரூஜன், தாரணிகா, மதுசாலினி ஆகியோரின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2010) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
உடுவில்கிழக்கு.
தொ.பே: 021 7901241

தகவல் :
குடும்பத்தினர்.
(சி/563887)

### திருமதி சதாசிவம் தெய்வானை (அன்னம்மா)

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி சதாசிவம் தெய்வானை நேற்று (03.01.2010) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் (தபால் ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும், கிருஷ்ணபிள்ளை, பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, கோகுலராஜா (அஞ்சலகம், சாவகச்சேரி), தயாளச்சந்திரா (கனடா), காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், தவமணி காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம், பாலசிங்கம் மற்றும் ஈஸ்வரிஅம்மா, யோகநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2010) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நுணாவில் காந்தாளம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணங்குணாய்,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(சி/563886)

தகவல்:
ச. கோகுலராஜா
(மகன்)

### திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன.04

வடமராட்சி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய ஏற்பாட்டில் திருவாசக முற்றோதல் நிகழ்வு தினமும் காலை 07மணியிலிருந்து இடம்பெற்று வருகின்றது.

இன்று திங்கட்கிழமை தம்பசிட்டி நாவலடி வீரபத்திரர் ஆலயத்திலும் நாளை செவ்வாய் பருத்தித்துறை மருதடி வைரவர் ஆலயத்திலும் நாளை மறுதினம் புதன் கிழமை தம்பசிட்டி சொக்கன் கலட்டி முத்துமாரி அம்மன் ஆலயத்திலும் திருவாசக முற்றோதல் இடம்பெறும்.

(ஒ-7)

### விவேகானந்தர் ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், ஜன.04

சுவாமி விவேகானந்தரின் 148ஆவது ஜெயந்தி விழா நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் 3மணியளவில் தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அந்த நிகழ்வின் ஓர் அம்சமாக டெங்கு ஒழிப்பு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவுள்ளது.

த.முருகானந்தா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வையொட்டி இன்று மாலை 4.30மணியளவில் தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி மண்டபத்தில் 'டெங்கு' ஒழிப்புக் கருத்தரங்கும், இன்று தொடக்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை தாவடி, இணுவில் பகுதிகளில் சிரமதானப்பணிகளும் இடம்பெறவுள்ளன.

ஜெயந்தி விழாவில் சமிதி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

(ஒ-16)


### உடன் தேவை

சாவகச்சேரி நகரில் செயற்படும் கல்விசார் நிறுவனமொன்றுக்கு கணனி அறிவுடைய பெண் தேவை :

தொடர்புகளுக்கு: 0773400375

### மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1982 இல் பிறந்த நட்சத்திரம் மூலம், கிரகபாவம் 22, கனடா P.R. உடைய மணமகனுக்கு அழகான படித்த மணமகளையும், இந்து கௌரவ குடும்பம் 1986 இல் பிறந்த நட்சத்திரம் அச்சுவினி, கிரகபாவம் 74, கனடா P.R. உடைய மணமகளுக்கு தகுந்த மணமகனையும் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு: 0115830801, 021 300 2982

### தவறிவிட்டது

கட்சன் வீதி, வட்டக்கச்சி என்னும் முகவரியுடைய சாந்தகுமார் சுசிலாதேவி என்பவரது தேசிய அடையாள அட்டை (768374384V) யாழ்.நகர்பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அ.இலட்சுமணன், ஊரி, களபூமி, காரைநகர் என்னும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

அதிஉயர் இன டோமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. பூச்சி நீக்கப்பட்டு, தடுப்பூசி போடப்பட்டுள்ளது. புத்தகம் உண்டு. நேரில் வரவும்.

குறிப்பு: ஓடர் தந்தவர்கள் உடன் வந்து உங்கள் நாய்க் குட்டிகளைப் பெற்றுக்கொள்ளவும். மற்றவர்கள் நேரில் வரவும்.

V.S.சற்குணன்,
T.P.: 021 222 7535 52, மாட்டின் ரோட், யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

சொந்தப் பாவனையில் உள்ள Ford Prefect 105E மொடல் கார் (5 கியர்) மிகவும் உன்னத நிலையில் உள்ளது. நம்பர் 4 Sri. உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: T.P.: 077 8689555, 077 6078809

### காணி விற்பனைக்கு/தனியார் நிறுவனங்களுக்கு குத்தகைக்கு உண்டு

மானிப்பாய்-யாழ்ப்பாணம் வீதியில் மானிப்பாய் மகளிர் பாடசாலைக்கு அருகில் 2 ½ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு/தனியார் நிறுவனங்களுக்கு குத்தகைக்கு.

உடன் [illegible]டர்பு கொள்ளவும்:
077 111703[illegible] [illegible]71 9236350, 021 222 7507

### வீடு விற்பனைக்கு

மந்திகை - வல்லிபுரக் கோவில், பிரதான வீதி அருகில் உபயகதிர்காமம், புலோலி தெற்கில் 8 பரப்பு 15 குளி காணியுடன் அமைந்த மிகப்பெரிய வீடு கிணறு, தண்ணீர்த்தாங்கி, மலசலகூடம், நவீனமல சலகூடம் என்பவற்[illegible]

தனியார் நிறுவனங்கள், பொது ஸ்தாபனங்கள் என்ப[illegible] கருதப்பட்டவர்களும் விண்ணப்பிக்கலாம். தரகர்கள் அவசியமில்லை. சகல தொடர்புகளுக்கும் 0213735292 கரவெட்டி.


## மரண அறிவித்தல்கள்

### முருகேசு சண்முகம்



மட்டுவில் வடக்கு, சந்திரபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சண்முகம் நேற்று (03.01.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், நல்லம்மாவின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை (வன்னிவிளாங்குளம்), செல்வநாயகி, சோதிமலர், வித்தியநாதன், செல்வராணி (லண்டன்), பரமானந்தம் (கொக்குவில்), காலஞ்சென்ற கௌரிதேவி, நகுலேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சரஸ்வதிதேவி (வன்னிவிளாங்குளம்), சண்முகசுந்தரம், நடராஜசுந்தரம், ஞானசொருபி, யோகநாதன் (லண்டன்), சிவசக்தி (ஆசிரியர், யா/மத்திய கல்லூரி), சாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரகலாதன் (ஆசிரியர்), காலஞ்சென்ற சுமங்கலி, தயாபரன் (முகாமைத்துவ உதவியாளர், வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி), தயாசீலன் (பிரான்ஸ்), தயாமோகன், தயாநீதன், பாகீசன், கிசாஜி, திருவேரகன் (லண்டன்), பிரகாஷ், வருண்ராஜ், அஜிந்தா, குருராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும், பிரவீனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2010) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மட்டுவில் உரிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு,
சந்திரபுரம்,
சாவகச்சேரி.

(சி/563881)

தகவல் :
ச. பரமானந்தம்
(மகன்).

### சின்னத்துரை பத்மரூபன்



குமரக்கோட்டம், ரயில் நிலைய வீதி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை பத்மரூபன் நேற்று முன்தினம் (02.01.2010) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் வல்லிபுரம் சின்னத்துரை - புஸ்பவதி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும், காந்தரூபன் (லண்டன்), நிரஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், மதியழகனின் ( ஆசிரியர், மல்லாகம் மகா வித்தியாலயம்) அன்பு மைத்துனரும், வன்னியசிங்கம், காலஞ்சென்ற இராசா மற்றும் துரைராசா, தனபாலசிங்கம், (டென்மார்க்), செல்லம்மா, இரத்தினம், பத்மாவதி ஆகியோரின் அன்புப் பெறாமகனும், இராசலட்சுமி, காலஞ்சென்ற திலகவதி மற்றும் இந்திராணி, பொன்னுத்துரை, இராசரத்தினம், குணரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகனும், மாதுளாவின் அ[illegible] மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2010) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"குமரக்கோட்டம்"
ரயில் நிலைய வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(93360)

தகவல் :
குடும்பத்தினர்.
T.P.No : 021 2240013

### திருமதி அன்னலட்சுமி இராசரத்தினம்

கட்டுடை, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொட்டடி, வில்லூன்றி மற்றும் நல்லூரை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி இராசரத்தினம் அவர்கள் நேற்று (03.01.2010) ஞாயிற்றுக் கிழமை காலை இமைப்பொழுதும் தன்நெஞ்சில் நீங்காதான் திருக்கழலில் நீங்காதிருக்கும் பெரும்பேறு பெற்றார்.

அன்னார் கட்டுடை அமரர்கள் வைரமுத்து - மீனாட்சி தம்பதியினரின் இளைய மகளும், அமரர் சோமசுந்தரம் இராசரத்தினம் (முன்னாள் யாழ். மாநகர சபை பஜார் வட்டார அங்கத்தவரும், உபநகர பிதாவும், வில்லூன்றி தேவஸ்தான சிவதருமப் பணியாளரும்) அவர்களது துணைவியும், அமரர் பண்டிதமணி பரமேஸ்வரி இளமுருகனார் (ஈழத்துச் சிதம்பர புராண உரையாசிரியை) அவர்களின் அருமைச் சகோதரியும், அமரர் பராசக்தி இரத்தினகோபால், பேராசிரியர் குமாரவடிவேல் (யாழ் பல்கலைக் கழகம்), தையல்நாயகி (இளைப்பாறிய ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் இரத்தினகோபால், திருமதி இராஜினி குமாரவடிவேல் (முன்னாள் ஆசிரியை), த.சுப்பிரமணியம் (இளைப்பாறிய முகாமையாளர், அரச வர்த்தக கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அமரர் சக்திபாலன், கு.பிரணவன் (பட்டப்பின் படிப்பு மாணவன், Suny, New york, USA), கு.குருபரன் (கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பட்டதாரி), கு.நிருத்தன் (யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன்), சு.நித்தியசொரூபன், சு.எழில்குமரன் (UNDSS,வவுனியா), செல்வி சு.அருட்சுதா (பொறியியல்பீட மாணவி, பேராதனைப் பல்கலைக்கழகம்), சு.தெய்வமைந்தன் (மாணவன் சென். ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (03.01.2010) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் இல 350/1, பருத்தித்துறை வீதி, நல்லூர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வண்ணை கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல 350/1, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(93352)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தேர்தல் நடவடிக்கைகள் நீதியாக இடம்பெறுவதை உறுதி செய்க!

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அரங்கேறும் விடயங்கள் நடுநிலைப் பார்வையாளர்கள், நோக்கர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி வருகின்றன என்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

இந்தத் தேர்தலை நீதியாகவும், நியாயமாகவும், தேர்தல் விதிமுறைக்கு அமைவாகவும் நடத்துவதில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்துக்கு உள்ள தகுதி, திறமை ஆகியன இப்போதே கேள்விக்குள்ளாகியிருக்கின்றமை குறித்துப் பல தரப்புகளில் இருந்தும் ஏற்கனவே முணுமுணுப்புகள், அதிருப்திகள், ஆட்சேபங்கள் பரவலாக வெளிப்படத் தொடங்கிவிட்டன.

கண்ணுக்கு முன்னால் நடக்கும் தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு லாயக்கற்றவராக - வகையற்றவராக - தேர்தல்கள் ஆணையாளர் இருக்கின்றார் என்பது வெளிப்படையாகவே ஊர்ஜிதமாகின்ற - உறுதியாகின்ற - நிலைமை படிப்படியாக ஏற்பட்டு வருகின்றமை கண்கூடு. இந்தத் தேர்தலை நீதியாக நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளரின் செயற்போக்குக் கடும் கேள்விக்குள்ளாகியிருப்பது மறுக்கப்பட முடியாததொன்று.

அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தின்படி புதிய தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் ஒருவரைத் தெரிவுசெய்து நியமிக்கும் அதிகாரமும் பொறுப்பும், அந்த அரசமைப்புத் திருத்தத்திற்கு அமைய நிறுவப்படும் அரசமைப்புக் கவுன்ஸிலினால் இதற்கென நியமிக்கப்படும் சுதந்திரத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உரியதாகும்.

ஆனால் தம்மிடம் இருக்கும் பல அதிகாரங்கள் அரசமைப்புக் கவுன்ஸில் மூலம் பறிபோய்விடும் எனக் கருதும் ஜனாதிபதி, அதன் காரணமாக அரசமைப்புக் கவுன்ஸிலை ஸ்தாபிக்காமல் பல ஆண்டுகளாக இழுத்தடித்து வருகின்றார். அரசமைப்புக் கவுன்ஸில் ஸ்தாபிக்கப்படாததால் சுதந்திர தேர்தல் ஆணைக்குழுவும் அமைக்கப்படவில்லை.

அதனால், தற்போதைய தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸாநாயக்கா, ஓய்வுபெறும் வயதைத் தாண்டி பல ஆண்டுகள் கடந்தும் - அவருக்குப் பதிலாகப் புதிய ஒருவரை நியமிப்பதற்கான ஏற்பாடுகள் இல்லாத நிலையில் - தொடர்ந்தும் இந்தப்பதவியில் நீடிக்க வேண்டியவராக அவர் இருக்கின்றார்.

தம்மை ஓய்வு பெற அனுமதித்து, மாற்று ஒருவரிடம் தமது தேர்தல்கள் ஆணையாளர் பொறுப்பை ஒப்படைப்பதற்கு வழி செய்யுமாறு கோரி அவர் உயர்நீதிமன்றத்திடம் முறையிட்டும் பலன் இல்லை.

அவருக்குப் பதிலாகப் புதிய ஒருவரை, அரசமைப்புக் கவுன்ஸில் உருவாக்குகின்ற சுதந்திர தேர்தல் ஆணைக்குழுவே நியமிக்க முடியும் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள உயர்நீதிமன்றம், அரசமைப்புக் கவுன்ஸிலை ஸ்தாபிக்காமல் இழுத்தடித்து வருகின்றமைக்காக ஜனாதிபதிக்கு எதிராக நீதிமன்றம் உத்தரவிட முடியாது என்று தனது இயலாமையைக் குறிப்பிட்டு தயானந்த திஸாநாயக்காவின் முறைப்பாடு தொடர்பில் நிவாரணம் தர முடியாமல் கைவிரித்து விட்டது.

அதனால் ஓய்வுபெறும் வயதைத் தாண்டியும் பதவியை விட்டு விலக முடியாமல் பல ஆண்டுகளாக இழுபடுகின்றார் தற்போதைய தேர்தல்கள் ஆணையாளர் நாயகம். ஆனால், அதற்காகத் தேர்தல்கள் விடயத்தில் அவர் நீதி, நியாயத்தை நிலை நிறுத்துவதில் தளர்வு காட்ட முடியாது; தளர்வு காட்டவும் கூடாது.

தேர்தல் பிரசார விடயங்களில் அரச சொத்துகள் அநீதியான முறையில் துஷ்பிரயோகம் செய்யப்படுவது வெளிப்படையாக நடந்தேறுகின்றது.

சுவரொட்டிகள், பனர்கள், பெரிய பெரிய 'கட்- அவுட்'கள் துலாம்பரமாக - வெளிப்படையாக - நகரங்கள் எங்கும் அலங்கரிக்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமை மாதிரித் தெரியவில்லை.

அரச வாகனங்கள் மற்றும் சொத்துக்கள் மிக மோசமாகத் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன. அரச கட்டுப்பாட்டில் இயங்கும் ஊடகங்கள் ஆட்சியில் இருக்கும் ஜனாதிபதியின் தேர்தல் பிரசாரத்துக்கான முழு ஊதுகுழல்களாகிவிட்டன. அவற்றைத் தகுதிவாய்ந்த அதிகாரிகள் மூலம் கட்டுப்படுத்தும் தேர்தல் ஆணையாளரின் ஆரவார அறிவிப்பு புஸ்வாணமாகிப் போய்விட்டது.

வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கை அரசின் இராஜதந்திரிகளே சம்பள விடுப்பில் இலங்கைக்கு வந்து, நட்சத்திர ஹோட்டல்களில் தங்கியிருந்து ஜனாதிபதிக்காகத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்பதை அம்பலப்படுத்தும் அளவுக்குச் செய்திகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

'நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரமன்றி, நிலைநாட்டப்படுவது போலக் காட்டப்படவும் வேண்டும்.' - என்பது அறமொழி.

'தேர்தல்கள் நீதியாக நடத்தப்படுவது மாத்திரமன்றி நீதியாக நடத்தப்படுகின்றமை மாதிரிக் காட்டப்படவும் வேண்டும்' - என்பதைத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்துக்கும் அவரது பணியாள் தொகுதியினருக்கும் நினைவூட்டிச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இனியாவது, இவ்விடயங்களை ஓரளவேனும் ஒழுங்குக்குள் கொண்டுவரும் விதத்தில் காத்திரமான - ஆக்கபூர்வமான - பயன்தரத்தக்க - நடவடிக்கை எடுக்கப்படுமா?

# பிரசார மோதல் சூடு பிடித்து விட்டது கட்சி மாறல் அதிகரிக்கும் அறிகுறி

**நேற்று 03.01.2010 திகதி 'சண்டே ரைம்ஸ்' வெளியிட்டிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.**

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கான திகதி நெருங்கி வந்துகொண்டிருக்கும் இந்த வேளையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஓய்வு பெற்ற ஜெனரல் சரத் பொன்சேகா ஆகிய இருவரதும் தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன.

ஜனாதிபதி மகிந்தர் சார்பில் ஏராளமான பிரசார மேடைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இடையில் சிறிய அளவிலான குழுவினருக்கு அலரி மாளிகையில் விருந்துபசார நிகழ்வுகளையும் ஏற்படுத்தி ஜனாதிபதி உரை நிகழ்த்தியுள்ளார். இந்த விருந்து உபசரிப்புகள் கடந்தவாரம் அனுராதபுரத்துக்கும் விஸ்தரிக்கப்பட்டிருந்தது. ஐக்கிய மக்கள் விடுதலை கூட்டமைப்பின் கூட்டங்களும் பிரசாரங்களும் படிப்படியாக அதிகரித்துவருகின்றன. இருந்தாலும் முக்கிய விடயங்களில் கருத்து ஒருங்கிணைப்பு இன்னமும் குறைபாடாகவே காணப்படுகின்றது. இதன் காரணமாக ஜெனரல் பொன்சேகாவின் சார்பில் குறிப்பிடத்தக்க அளவு சாதகமான அலை வீசத் தொடங்கியிருக்கிறது.

**பொது வேட்பாளர் மீது கடும் தாக்குதல்**

அரசு உடைமையான ஊடகங்கள் குறிப்பாக தொலைக்காட்சி வலை அமைப்புகளில் எதிர்க்கட்சிப் பொது வேட்பாளர் மீதான தனிப்பட்ட முறையிலான தாக்குதல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் தொடங்கியதுடன் இந்த நிலை மேலும் அதிகரிப்பதற்கு வாய்ப்பு ஏற்படலாம். அவரது நடத்தை தொடர்பான குற்றச்சாட்டுக்கள்கொண்ட அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜெனரல் பொன்சேகா இரு தடவைகள் புலிகளின் தாக்குதலில் இருந்து தப்பிப் பிழைத்து இராணுவத்தை வெற்றியை நோக்கி வழிநடத்தியதற்கு நெடுநாள்களுக்கு முந்திய காலத்தில் அவர் செயல்பட்ட விதம் குறித்த சில அறிக்கைகள் முன்வைக்கப்படலாம் என்று தெரிகின்றது. மற்றவைகளில் ஒன்று அவரது குடும்ப உறுப்பினர் ஒருவர் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் உட்பட இராணுவத்தளபாடக் கொள்வனவுகள் தொடர்பான அறிக்கைகளாக இருக்கலாம் என்று தெரிகின்றது. இந்த விதமான குற்றச்சாட்டுக்கள் பற்றிய புலனாய்வுகளில் இரகசியப் பொலிஸார் ஏற்கனவே இறங்கி விட்டனர்.

அவரது குடும்ப உறுப்பினரின் ஸ்தாபனத்தில் கணக்காளராகப் பணியாற்றிய ஒருவர் பொய்யான கணக்குகளை சமர்ப்பித்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்படவிருக்கிறார் என்று பொலிஸ் வட்டாரங்களில் இருந்து தெரிய வந்தது. சம்பந்தப்பட்டவர் குற்றச்சாட்டுக்களை பலமாக மறுத்திருக்கின்றார். அவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார் என்று பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

ஊடகங்களில் நடத்தப்படும் பிரசாரம் ஒருபுறமிருக்க புதியவகையிலான (இணையத்தளம்) ஊடகத் தொடர்புகளையும் ராஜபக்ஷ சார்பான பிரசாரகர்கள் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். 2010 ஆம் ஆண்டு ஆரம்பமான கடந்த வெள்ளிக்கிழமை யன்று புதிய வகையிலான பிரசாரங்களை அவர்கள் ஆரம்பித்தார்கள். அன்றைய தினம் கையடக்கத் தொலைபேசி உரிமை யாளர் ஒவ்வொருவருக்கும் அவர் களின் தொலைபேசியில் ஜனாதிபதி யின் குரலில் பின்வரும் தகவல் தரப்பட்டது.

"வாக்குக் கொடுத்தது போலவே உங்களுக்கு சுதந்திரமான இறைமை யுள்ள ஒரு நாட்டை பெற்றுக் கொடுத் துள்ளேன். எதிர்காலம் எல்லா வகையிலுமே அதிர்ஷ்டகரமாக அமையட்டும். மகிழ்ச்சி கரமாக புதியவருடம் அமையட்டும்- மகிந்த ராஜபக்ஷ"

வேறு எந்த ஒரு வேட்பாளருக்கும் இந்த வசதி கிடைக்கவில்லை. பாவனையாளர்கள் எவரும் அதற்கு பதில் தந்ததாகவும் தெரியவில்லை.

சகல வலையமைப்பு இயக்குநர்களும் இந்த குறுகிய செய்தியை உரியவர்களுக்கு அனுப்ப வேண்டும் என்று பணிக்கப்பட்டிருந்தார்கள். இந்த செயற்பாட்டின் மூலம் தேர்தல் சட்டம் மீறப்பட்டுள்ளதா என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

**மக்கள் சுமைகளைக் குறைக்க செயற்பாடு**

கடந்த செவ்வாய்க்கிழமை பெற்றோலின் விலை 15 ரூபாவால் குறைக்கப்பட்டது. அடுத்தநாள் விவசாயிகளுக்கான விவசாயகடன் திட்டத்தில் கடன் வட்டி விகிதாசாரம் குறைக்கப் பட்டது. அரச வங்கிகளில் தம் கணக்குகளின் மீது கடன் பெற்றிருக்கும் இராணுவத்தினருக்கு அவர்களின் சம்பளத்தில் 85 வீதம் ஓய்வூதியத்தில் சேர்க்கப்படும் என்று அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இவ்வாறு இன்னும் பொதுமக்களின் மீதான சுமைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட விருப்பதாகவும் அது பற்றி அரசு ஆலோசித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

**பொன்சேகாவின் கூட்டங்களில் மக்கள் கூட்டம்**

கடந்தவாரம் முழுவதும் பொன்சேகா கலந்துகொண்ட கூட்டங்களில் எல்லாம் மக்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டார்கள்.

இந்தக் கூட்டங்களில் அவர் பேசிய போது சம்பள உயர்வு வழங்குவார் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தினார். முதலில் அரச ஊழியர்களின் சம்பளம் 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப் படும் என்று கூறினார். கடந்த வாரம் ஹட்டனில் ஒரு கூட்டத்தில் பேசிய

## கைத்தொலைபேசி மூலமும் மகிந்தவுக்குப் பிரசார

போது தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் 10,125 ரூபா வரை அதிகரிக்கப் படும் என்று அறிவித்தார்.

ஜெனரல் பொன்சேகாவின் குறைந்தபட்ச பொதுக் கொள்கைத்திட்டம் அடுத்த வாரம் வெளியிடப்படவிருக் கிறது. இதில் அவரது கொள்கை நோக்கங்கள் விரிவாக விளக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்க்கட்சிகளுடன் கலந்தாலோசித்து பொதுவேலைத் திட்டத்தை அறிவிக்காத நிலையில் சம்பள உயர்வை வழங்குவார் என்று பொன் சேகா அறிவித் துள்ளார்.

இதனை அவர் எவ்வாறு நிறைவேற்றுவார் என்று கேள்வி எழுந்துள்ளது. இதற்கு பொன்சேகாவின் பிரசாரக் குழுவினரால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் பதில் தரப்பட்டுள்ளது.

பல்வேறு வகையில் அரச நடவடிக்கைகளால் அரசுக்கு ஏற்பட்டு வரும் நஷ்டங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அவ்வறிக்கையில் உள்ள மேலும் சில விடயங்கள் வருமாறு:

* பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளால் ஏற்பட்டு வரும் நட்ஷம் ரூபா 230 பில்லியன்.
* 2007 தொடக்கம் 2008 வரை இலங்கை விமான சேவைத்துறைக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 10 பில்லியன்
* அதே காலப் பகுதியில் மிகின் விமான சேவைக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 4 பில்லியன்
* மிக் 27 ரக ஜெட் விமானங்கள் உக்ரேனிலிருந்து கொள்முதல் செய்த வகையில் விளம்பரம் செய்யப்பட்டதை விட ரூபா 400 மில்லியன் அதிகமாக விருந்தமை.
* வற் ஊழல் - நட்டம்ரூபா3 5பில்லியன்.
* யால தேசிய பூங்கா மூடப்பட்டிருந்த சமயம் அம்பாந்தோட்டையில் உருவாக்கப்பட்ட சபாரி பூங்கா ரூபா 1-6 பில்லியன்

இவ்வாறு வீணடிக்கப்பட்ட அல்லது கொள்ளையடிக்கப்பட்ட தொகை ரூபா 430.3 பில்லியன் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணத்தைக் கொண்டு நாம் என்ன செய்யப் போகின்றோம்? என்று அறிக்கையில் கேள்வி எழுப்பப்பட்டு பதில் அளிக்கப் பட்டுள்ளது. அரச ஊழியர்களின் ஒரு வருட சம்பள உயர்வு, கோல்ட கீ, சக்வித்தி வைப்பாளர்களுக்கு வைப்புப் பணத்தை வழங்குதல், ஓய்வூதியத்தை இரட்டிப் பாக்கல், பால்மா வின் விலையைக் குறைத்தல், சமுர்த்தி பயனாளிகளுக்கு ஒருவருடத்திற்கு 2000 ஆயிரம் ரூபா வழங்குதல், விவசாயிகளுக்கு உரமான்யம் வழங்குதல் இவைகளுக்கு மொத்தம் ரூ 290.2 பில்லியன் மட்டுமே செலவாகும். பின்னர் ரூ 140.1 பில்லியன் மிச்சமும் இருக்கும். ஆனால் இதில் விடையளிக்கப் படாத ஒரு விடயம் என்னவென்றால் இவ்வாறு மோசடி செய்யப்பட்ட அல்லது வீணடிக்கப்பட்ட பணத்தில் பெருமளவிலான தொகையை மீளப் பெறுவதென்பது கடினமான காரியம்.

**இ.தொ.காவில் பிளவு**

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கிய இருதலைவர்கள் கடந்த வாரம் அந்தக் கட்சியில் இருந்து வெளியேறி ஐ.தே.க வில் சேர்ந்து கொண்டார்கள். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சரத்பொன்சேகாவை ஆதரிப்பதாகவும் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இ.தொ.காவின் தேசிய அமைப்பாளர் ராமையா யோகராஜன், பிரதிக் கல்வி அமைச்சர் முருகன் சச்சிதானந்தன் ஆகிய இருவருமே இ.தொ.காவிலிருந்து விலகியவர்கள். பெருந்தோட்டத் தொழிற்றுறையில் உள்ள பிரதான தொழிலாளர் இயக்கம் பிளவுபட்டிருப்பதையே இது காட்டுகின்றது. மேலும் பலர் இ.தொ.கா விலிருந்து விலகவிருக்கிறார்கள் என்று யோகராஜன் கூறியிருக்கிறார். அவர் இ.தொ.கா தலை வரை கடுமையாக விமர்சித்துள்ளார். தோட்டத் தொழிலாளர்களுக்காக அவர் எதனையுமே வென்றெடுக்கவில்லை. அவர் உல்லாச வாகனங்களில் ஆயுததாரிகளின் பாதுகாப்புடன் சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டு வருகின்றார். அதே வேளை தோட்டத்தொழிலா ளர்கள் மைல் கணக்கில் நடந்து செல்கி றார்கள். அவர்களுக்கென்று அவர் ஒன்றுமே சாதிக்கவில்லை என்றார் யோகராஜன்.

இ.தொ.கா மலையகத்தில் தன் செல்வாக்கை இழந்து வருகிறது. கடந்த சப்ரகமுவ மாகாணசபைத் தேர்தலில் இ. தொ. காவிலிருந்துஒருவருமே தெரிவு செய்யப்படவில்லையென்றார் யோகராஜன்.

இதொ.காவின் தற்போதைய தலைவர்கள் தோட்டத் தொழிலாளர் களுக்கு எதனையும் கேட்டுப் பெறுவ தில்லை. அவர்கள் தங்களின் உல்லாச வாழ்வுக்கு வேண்டியவற்றையே கேட்டு பெற்றுக் கொள்கிறார்கள் என்றார்.

தமது மக்களுக்காக அரசாங்கத்திடம் எதனையும் கேட்கும் அளவுக்கு தொண்டமானுக்கு துணிச்சல் கிடையாது. ஜெனரல் பொன்சேகாவால் தாம் கவரப்பட்டிருப்பதாகவும், அரசாங்கம் நிறைவேற்றத் தயங்கும் தமிழ் மக்களின் குறைபாடுகளை அவர் தீர்த்து வைப்பார் என்றும் தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி (NUA) யின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் கட்சி மாறுவது பற்றி சிந்தித்து வருவதாகக் கூறப்படுகின்றது. அவர்கள் ரவூப்ஹக்கீமின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைவதற்கு பேச்சுக்கள் நடத்திவருவதாக அறியவந்துள்ளது.

இவர்களில் ஒருவர் திருகோணமலையைச் சேர்ந்தவர் என்றும் மற்றவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என்றும் கூறப்படுகின்றது.

யோகராஜன் இ.தொ.காவிலிருந்து விலகியமைக்கு தொண்டமானுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடே காரணம் என்று கூறப்படுகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி (மகாஜன பிரிவு) தலைவர் மங்கள சமரவீரவின் இணையத்தள அங்குரார்ப்பண விழாவில் அழைப்பின் மீது யோகராஜன் கலந்து கொண்டதாகவும் அதன் மீது தொண்டமான் ஒழுக்க விசாரணை ஒன்றை நடத்தியதாகவும் தனிப்பட்ட முறையிலேயே தாம் கலந்து கொண்டதாக யோகராஜன் தெரிவித்ததாகவும் கூறப்படுகின்றது. இந்தச் சம்பவத்தையடுத்தே யோகராஜனும் பிரதி அமைச்சர் சச்சிதானந்தனும் கட்சிமாற முடிவு செய்ததாக அறிய வந்துள்ளது. முன்னதாக சுகாதார அமைச்சர் சிறிபால டிசில்வா இவர்களின் கட்சி மாறல் நடைபெற விருப் பது பற்றி கேள்விப்பட்டு யோகராஜனின் சகாவான சச்சிதானந்தனின் பண்டாரவளையில் உள்ள இல்லத்திற்கு சென்று அவர்களை கட்சி மாறாமல் இருக்க செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டதாகவும் ஆனால் அதனால் எதுவித பயனும் ஏற்பட வில்லை யென்றும்கூறப்படுகின்றது. (ப)

## நாளை

மார்கழி: 21 05.01.2010

செவ்வாய்க்கிழமை

திதி: பஞ்சமி பி.ப 2.47 வரை

நட்சத்திரம்: பூரம் பி. இ 12.40

சுபநேரம்: 11.01-12.31

ராகுகாலம்: 03.31-05.01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி.கிழக்குப் பிரதேச சபை, புத்தூர்

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

28.12.2009 ஆம் திகதி நடைபெற்ற ஊழியர் நலன்புரிச்சங்க அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற இலக்கங்கள் விபரம் வருமாறு:-

முதலாம் பரிசு - 2297, இரண்டாம் பரிசு - 1356, மூன்றாம்பரிசு - 2107

ஆறுதல் பரிசுகள்

4 ஆம்பரிசு - 193 5 ஆம்பரிசு - 1281 6 ஆம்பரிசு - 580

7 ஆம் பரிசு - 1754 8 ஆம் பரிசு - 4014 9 ஆம்பரிசு - 2026

10 ஆம் பரிசு - 2130

இப்பரிசில்களுக்குரிய அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களுடன் 15.01.2010 இற்கு முன்னதாக வலி.கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நேரடியாக வருகைதந்து பரிசில்களை பெற்றுக்கொள்ளவும்.

ஒத்துழைப்பிற்கு நன்றி

வலி.கிழக்குப் பிரதேச சபை ஊழியர் நலன்புரிச்சங்கம். (இ/563884)



## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 530

திகதி 2010/01/02

சுப்பர் இலக்கம் 06

வெல்லப்பட்ட இலக்கங்கள் 01 20 37 64

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | [illegible] | ரூ. 20,919,241.60 வீதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000,000.00 வீதம் | 01 |
| இரண்டாம் பரிசு | [illegible] | ரூ. 50,000.00 வீதம் | 11 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 வீதம் | 230 |
| நான்காம் பரிசு | [illegible] | ரூ. 1,000.00 வீதம் | 480 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 வீதம் | 11,540 |
| ஆறாம் பரிசு | [illegible] | ரூ. 40.00 வீதம் | 6,724 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீதம் | 167,054 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீதம் | 26,792 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 8,097,480.00

சூப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மிகுதி தொகை பணமாக

அடுத்தவாரம் இரண்டு முதல் பரிசுகள் ரூ 21,137,376.00

தேசிய லொத்தர் சபை
www.nlb.lk


## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 08 ★ 05 ★ 1952



ஆண்டவன் அடியில் 02 ★ 01 ★ 2002

### அமரர் பொன்னையா கணேசலிங்கம்

(முன்னாள் மக்கள்வங்கி முகாமையாளர் - பருத்தித்துறை)

B.Sc. Estate Management)

திதி: 04.01.2010

வையத்துள் எமையெல்லாம் வாழ வைத்துப்
பையவே அன்புமொழி, அறிவுரைகள் கூறி
நேயமுடன் கனிவாகக் கல்வி புகட்டி
மாயஉலகின் கடமைகளை எமக்குணர்த்தி
இன்று ஓடி ஒளித்தீரோ, எமை விட்டுப் பிரிந்தீரோ?
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்

திகிரி, புலோலி வடகிழக்கு,
பருத்தித்துறை. (இ/563877) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி யோசப்பின் சூசன் சூசைப்பிள்ளை



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோசப்பின் சூசன் சூசைப்பிள்ளை 01.01.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிறகறி சூசைப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் P.W.D) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி லூக்காஸ்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கிறகறி தம்பதியரின் அன்பு மருமகளும், Dr. திருமதி பற்றிமா பிலோமினா (பொதுவைத்தியசாலை, கொழும்பு), கிறகறி இமானுவேல் (U.K), வின்சன்றலூக்கஸ் (விவசாயத் திணைக்களம், யாழ்ப்பாணம்), மறினற்யூலியற் (U.K) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயக்குமார் ஹெரன்ஸ்மன் (கணக்காளர்), லில்லிபெனடிற்றா வனஜா (U.K), றோஸ்வத்சலா (ஆசிரியை, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), அன்ரன் (U.K) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.01.2010) செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து நல்லடக்க ஆராதனைக்காக இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் அன்னம்மாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'திரேசா வாசா', பிரதானவீதி,
இளவாலை.
தொ.பே: 0778051724, 0213206122 (93351)

தகவல் : குடும்பத்தினர்.

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நீரிழிவு சிகிச்சைப் பிரிவு திறப்பு

யாழ்ப்பாணம், ஜன. 4

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஐக்கிய இராச்சிய தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையுடன் நீரிழிவு சிகிச்சை நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

வைத்தியக் கலாநிதி க.தயாளன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஐக்கிய இராச்சியத்தின் தென்மராட்சி அபிவிருத்திக் கழக செயற்குழு உறுப்பினர் வைத்திய கலாநிதி திருமதி சிவகுமாரி சித்திராபதி, யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.


**O/L** பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கீழ்வரும் கணனிக் கற்கைநெறிகள் மானிப்பாயில் ஆரம்பம் !!!

- ✓ Beginners Diploma in ICT (GIT - Syllabus )
- ✓ Diploma in Ms Office
- ✓ Diploma in Hardware Engineering
- ✓ Diploma in Desktop Publishing

11/01/2010 அன்று வகுப்புக்கள் ஆரம்பம்!!

அனுமதி விண்ணப்பபடிவங்களை எமது நிறுவனத்தில் பெற்று எதிர்வரும் 09/01/2010ற்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்க்கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு :-

UNI TECHNOLOGY
ICT Education Trainers
Jaffna Road, Manipay.
Tel :- 021 - 7429325
(மானிப்பாய் பிரதேச சபை முன்பாக)



அவர் தனது 40 வருட ஜனநாயக அரசியல் வாழ்வில் எந்தவொரு இனத்தின் மனங்களையும் புண்படுத்தியதில்லை. இந்த நாட்டின் சகல மக்களின் மொழி, மதம், கல்சாரம் என்பவற்றை மிகவும் மதித்தே வந்துள்ளார் என்பதை நாம் அறிவோம்.



இந்த நாடு நம் எல்லோரினதும் நாடு. இங்கு வாழும் அனைவருக்கும் சகல உரிமைகளும் உண்டு என்பதை அவர் திரும்பத் திரும்ப கூறிவருகிறார்.

இவரின் எதிர்வரும் ஆட்சியில் நிரந்தர சமாதானம் ஏற்படும் வகையிலும், சகல இன மக்களினதும் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும், தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காணப்படும்

எதிர்வரும் 2010 ஜனவரி 26ம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கே வாக்களித்து அவரின் கரங்களைப் பலப்படுத்துவோம்

விடிவுச் சூரியனின் ஒளிக்கற்றைகள் பரவட்டும்

அமைதி
அபிவிருத்தி
சமத்துவம்
சுதந்திரம்

மஹிந்த ராஜபக்ஷ



எங்கள் தெரிவு

(இ/563724)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இந்து கலாசார முன்னாள் அமைச்சர் தி.மகேஸ்வரன் நினைவாக சந்நிதியான் ஆச்சிரமத்தில் அமைக்கப்பட்ட வைத்தியசாலை மண்டபத் திறப்பு விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

மகேஸ்வரனின் மூத்த மகள் பவதாரணி மண்டபத்தின் நினைவுப் பலகையைத் திறந்து வைப்பதையும் வைத்தியசாலை மண்டபத்தை தொழிலதிபர் எஸ்.இராஜநாயகம் திறந்து வைப்பதையும் அருகில் அமரர் மகேஸ்வரனின் பிள்ளைகளான பவதாரணி, பவித்திரா, பிரணவன் ஆகிய மூவரும் நிற்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

ஆச்சிரமத்தில் வசிப்பவர்களுக்கு வல்வை அப்பண்ணா உடுபுடைவைகளை வழங்குவதையும் அருகில் சந்நி தியான் ஆச்சிரம ஸ்தாபகர் மோகனதாஸ் சுவாமிகள் நிற்பதையும் நான்காவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களை இறுதியிரண்டு படங்களிலும் காணலாம். *(படங்கள்:- சுந்தா)*

## 'சனச' இயக்கத் தலைவருடனான கலந்துரையாடல் நாளை காலை வீரசிங்கம் மண்டபத்தில்

யாழ்ப்பாணம், ஜன.4

'சனச' இயக்கத் தலைவர் கலாநிதி பி.ஏ.கிரிவந் தெனியாவுக்கும் கூட்டுறவாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நாளை முற்பகல் 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டுறவாளர் சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'சனச' அபிவிருத்தி வங்கியின் அறிமுகம், 'சனச' அபிவிருத்தி வங்கிக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இடையேயான தொடர்புகள், கூட்டுறவு அமைப்புக்களும் தற்போதைய நிலைப்பாடுகளும், எதிர்கால அபிவிருத்திக்கான உபாயங்களும் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளன.

கலாநிதி பி.ஏ.கிரிவந்தெனியா கடந்த காலத்தில் இலங்கைத் தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவராக இருந்ததோடு சர்வதேசக் கூட்டுறவு அமைப்புக்களுடனும் தொடர்புடைய கூட்டுறவு சார்ந்த புலமை மிக்க ஒருவர் என்பதால் கூட்டுறவாளர்கள் இதில் கலந்துகொண்டு இவரது அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், பணியாளர்கள் மற்றும் ஆர்வமுள்ள கூட்டுறவாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (04-16)

## காய்ச்சலால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை குடாநாட்டில் அண்மைக் காலமாக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.4

குடாநாட்டில் காய்ச்சலால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது.

இதனால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் விடுதிகளில் தங்கியிருந்து சிசிக்சை பெறுவோரின் எண்ணிக்கையும் வெளி நோயாளர்களின் பிரிவில் சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் விடுதிகளில் இடப்பற்றாக் குறை நிலவும் அதேவேளை மக்கள் பல அசௌகரியங்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையும் நுளம்புகளின் தாக்கமுமே காய்ச்சல் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமைக்கு காரணமாகும். எனவே மக்கள் கொதித்தாறிய நீரைப் பருகுதல், சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருத்தல் என்பவற்றின் மூலம் தம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (04-224)

## 'மக்கள் மருத்துவன்' சஞ்சிகை வெளியீடும் ஜனாதிபதியின் செயலாளருடனான கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், ஜன.4

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி மாணவர் மன்றத்தின் ''மக்கள் மருத்துவன்'' சஞ்சிகை வெளியீடும் ஜனாதிபதியின் செயலாளர் டாக்டர் ஜெயம்பதி டபிள்யூ.திசநாயக்கேயுடான கலந்துரையாடலும் இன்று நடைபெறவுள்ளது.

இன்று முற்பகல் 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவும், சிறப்பு விருந்தினராக மாநகரசபை கௌரவ உறுப்பினர்களும் மற்றும் கல்லூரிச் சமூகத்தினரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சஞ்சிகையின் வெளியீட்டுரையை வைத்தியகலாநிதி கணேஸ் சிறிதரன் வழங்குவார். தொடர்ந்து ஜனாதிபதியின் செயலாளருடனான கலந்துரையாடல் இடம் பெறும்.

இதில் கல்லூரி சார்ந்த நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (04-16)

## பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,ஜன.4

வேலையற்ற பட்டதாரிகள் இன்றைய தினம் வவுனியாவிற்கு செல்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பயண ஒழுங்குகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக வேலையற்ற பட்டதாரிகள் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக விவரங்கள் யாவும் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (04-16)

## டெங்குநோய் தொடர்பாக இன்று அவசர கலந்துரையாடல்

வடமராட்சி, ஜன.4

டெங்குக் காய்ச்சல் பரம்பல் அபாயம் தொடர்பாக வடமராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு புலோலி மெ.மி.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது. இதில் அனைஷெஷெஷெத்துப் பாட சாலை அதிபர்களையும் கலந்துகொள்ளு மாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப் பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை ஒவ்வொரு பாடசாலையிலும் காலை ஒன்று கூடலில் டெங்கு நோய் பற்றி சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொதுச் சுகாதர பிரிசோதகர்கள் மாணவர்களுக்காக விழிப்புணர்வுக் கருத்துரை வழங்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்த வேண்டும் எனவும் பாடசாலையிலும், பாடசாலைச் சுற்றாடலிலும் சிரமதானப் பணிகளை வைத்திய அதிகாரி அல்லது சுகாதார பரிசோதகரின் வழிகாட்டலில் மேற்கொள்ள வேண்டும் எனவும் காய்ச்சல் அறிகுறி தென்படும் மாணவர்களை நோய் குணமாகும் வரை வீட்டில் ஓய்வெடுப்பதை உறுதிசெய்ய வேண்டுமெனவும் அவர்




### மீண்டும் விளம்பர ஒலிபரப்புச் சேவை

யாழ்ப்பாணம், ஜன.4

யாழ்.நவீன சந்தை, பஸ்நிலைய வளாகத்தில் மீண்டும் விளம்பர ஒலிபரப்புச் சேவை ஆரம்பமாகியுள்ளது.

சுமார் 10ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் விளம்பர ஒலிபரப்புச் சேவையை ஆரம்பிக்க எம்.ரி.எம்.நிறுவனத்துக்கு யாழ். மாநகர சபை அனுமதி வழங்கியுள்ளது. (04-236)

## விளையாட்டு, இசை, நடனம் போன்ற துறைகளில் தமது பிள்ளைகள் ஈடுபட பெற்றோர்கள் அனுமதிப்பதில்லை

### பரிசளிப்பு நிகழ்வில் விஞ்ஞான பீடாதிபதி தெரிவிப்பு



வலி.வடக்கு, ஜன.4

இன்று பெற்றோர்கள் பிள்ளைகளை விளையாட்டு, இசை, நடனம், போன்றவற்றில் கலந்து கொள்ள அனுமதிக்காத நிலைமையே காணப்படுகிறது.

காலையும், மாலையும் தனியார் கல்வி நிலையங்களில் தனிப்பட்ட வகுப்புக்கள், பகல் பொழுதில் பாடசாலைக் கல்வி என்ற நிலைமையே தொடர்கிறது. இத்தகைய செயற்பாட்டின் மூலம் மாணவர்கள் மனம்சலித்துபோய் நாம் இதற்குத்தானா பிறந்தோம் என வெறுப் புடன் சிந்திக்கும் போக்கே இன்று காணப்படுகிறது.

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பெருவிளையாட்டு, தடகள போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசுத்தின நிகழ்வு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் யாழ்.கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றியபோதே பீடாதி பதி இ.குமாரவடிவேல் இவ்வாறு தெரிவித் தார். இதன்போது அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு:

விளையாட்டு என்னும் சொல் தமிழில் சில நேரத்தில் பிழையான அர்த்தத்தைக் கொடுக்கின்றது. விளையாட்டுப்பிள்ளை, விளையாட்டுப் பெடியன் என சில சந்தர்ப்பங்களில் சில செயல்களின்போது கூறுவார்கள்.

ஆங்கிலத்தில் 'ஸ்போட்ஸ்' என்னும் சொல் உண்மையில் சாதாரணமாகச் சொல்லும் விளையாட்டின் அர்த்தத்தை குறிப்பது அல்ல.

ஒரு மனிதனுடைய வாழ்க்கை பூரணத்துவமாக அமைய வேண்டும் எனில் அவனுடைய உள்ளம், உடல் இவையாவும் சரியான முறையில் கட்டுப்படுத்தப்பட்டு வழிநடத்தப்படல் வேண்டும்.

ஒரு புதிய வாகனம் எந்த நிலையிலும் எந்த சூழ்நிலையிலும் ஓடக்கூடியதாக இருக்கும். ஆனால் காலம் செல்லச் செல்ல அந்த வாகனம் பிரச்சினை கொடுக்கத் தொடங்கிவிடும்.

அதேபோன்று எமது உடம்பும் அதனை சரியாக வழி நடத்தாவிட்டால் அது பிற் காலத்தில் பெரிய துன்பங்களையும் இடையூறுகளையும் ஏற்படுத்தும் ஒன்றாக மாறி விடும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

ஆகவே மனமும் உடலும் சமகாலத்தில் பயிற்றுவிக்கப்பட வேண்டும். அந்த நிலையில் இந்த மனதை ஒருமுகப்படுத்தி அதற்கு ஒரு அமைதியை-ஆனந்தத்தை கொடுக்கவல்லவை இசை, நடனம், விளையாட்டுப் போன்றவைதான். விளையாட்டுத் துறையில் ஈடுபடுவதனால் [illegible]வர்கள் தங்களுடைய வழமை[illegible] செயற்பாடுகளை முன்னரை விட [illegible] நல்ல முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியும்.

சில மாணவர்க[illegible] பெற்றோர்கள் முறையான கற்றலில் மட்டுமே அவர்கள் கரிசனை செலுத்த வேண்டும் என்பதற்காக ஏனைய புறநிலைச் செயற்பாடுகளில் ஈடுபட அனுமதிப்பதில்லை. இத்தகைய மனோநிலைகளில் மாற்றங்களைப் பெற்றோர்கள் கொண்டுவரவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் கல்விவலய கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் உரையாற்றியதுடன் பரிசில்களையும் திருமதி இராஜினி குமாரவடிவேல் வழங்கிக் கௌரவித்தார். (04-86)

## துப்பாக்கி ஏந்திநின்ற படையினரின் கரங்களில் இப்போது புல்லுவெட்டிகள்!

### -எல்லாம் 'டெங்கு' படுத்தும்பாடு-

யாழ்ப்பாணம், ஜன.4

வன்னிப் பகுதியில் இதுநாள்வரையிலும் துப்பாக்கி ஏந்தி நின்ற இராணுவ வீரர்கள் தற்போது ஏ-9 வீதி நெடுகிலும் புல் வெட்டும் கத்தியுடன் காணப்படுகிறார்கள்.

கடந்தமாதம் பெய்த மழையினால் நுளம்பின் தாக்கமும் டெங்கு நோயின் தாக்கமும் அதிகரித்துக் காணப்படும் நிலையைத் தொடர்ந்தே படையினர் புற்களை வெட்டும் நடவடிக்கையில் வன்னிப்பகுதியில் ஈடுபடத் தொடங்கியுள்ளார்கள்.

ஏ-9 வீதியின் இரு மருங்கிலும் காவல் அரண்கள் அமைத்து நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் தமது சுற்றாடலில் காணப்படும் பற்றைகள், புற்கள், புற்களை வெட்டி அழிக்கும் செயற்பாட்டில் நாளாந்தம் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இவ்வாறு ஏ-9 பாதையின் இரு புறங்களிலும் உள்ள சுமார் நூறு மீற்றர் தூரம் வரையான பகுதிகளில் படையினரால் வெட்டித் துப்புரவாக்கப்பட்டுள்ளதால் இப் பகுதியில் டெங்குவின் தாக்கம் குறைவடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (04-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் 'லகுஸ்ரீ சக்ர பூஜா' நூல் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பத்ததி ஆக்கியோன் சிவஸ்ரீ ஐ.கைலாசநாதக் குருக்களின் திருவுருவப் படம் ஊர்வலமாக எடுத்துவரப்படுவதை முதலாவது படத்திலும், கிழக்குப் பல்கலைக்கழக சமஸ்கிருத விரிவுரையாளர் ம.பாலகைலாசநாதசர்மா வெளியீட்டுரை நிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும், மேடையில் தொழிலதிபர் சேரன்குமார், பேராசிரியர் வி.சிவசாமி, இந்துமத பீடாதிபதி சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள், ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் ஆ.தியாகராஜா, கோப்பாய் சிவம், யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதன் ஆகியோர் அமர்த்திருப்பதை இறுதிப் படத்திலும் காணலாம்.

# வன்னிப் பகுதியிலுள்ள பெரும்பாலான பாடசாலைகளை இன்று முதல் இயக்குவதற்கு நடவடிக்கை

## அதிபர், ஆசிரியர்கள் தமது கடமைகளை உடன் பொறுப்பேற்குமாறு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

வன்னிப் பகுதிக் கல்வி வலயங்களில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளை இன்று திங்கட்கிழமை முதல் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் தற்காலிக இணைப்பைப் பெற்றுள்ள வன்னிப்பகுதி அதிபர்கள், ஆசிரியர்கள் நிரந்தரப் பாடசாலையில் தமது கடமைகளைத் தாமதமின்றிப் பொறுப்பேற்குமாறும் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

முதலாம் தவணை முதல் இயங்கவுள்ள பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களின் தைமாதச் சம்பளம் அவர்களது நிரந்தர வலயங்களிலேயே வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இன்று திங்கட்கிழமை முதல் இயங்கவுள்ள பாடசாலைகளின் விபரம் வலய ரீதியாக வருமாறு:

மடுவலயம்

அடம்பன் எம்.எம்.வி, அலிகார் எம்.எம்.வி, பெரியமடு எம்.வி, ஆண்டான்குளம் ஆர்.சி.ரி.எம்.எஸ், இலுப்பைக்கடவை ஜி.ரி.எம்.எஸ், கருன்கண்டல் ஆர்.சி.ரி.எம்.வி., பரப்பன்கண்டல் ஆர்.சி.ரி.எம்.எஸ்., வட்டக்கண்டல் ஜி.ரி.எம்.எஸ், , தூயயேசப் வாஸ் எம்.வி., அடம்பன் ஆர்.சி.ரி.எம்.எஸ்., ஆதிமோட்டை ஜி.ரி.எம்.எஸ், கல்லியடி ஜி.ரி.எம்.எஸ்., கோயில் குளம் ஜி.ரி.எம்.எஸ், தேவன்பிட்டி ஆர்.சி.ரி.எம்.எஸ்., பரப்புக்கடந்தான் ஜி.ரி.எம்.எஸ், பாப்பாமோட்டை ஆர்.சி.ரி.எம்.எஸ், பாலைக்குழி ஆர்.சி.ரி.எம்.எஸ்., பாலையடி புதுக்குளம் ஆர்.சி.ரி.எம்.எஸ்., மாரதி கண்ணாட்டி ஆர்.சி.ரி.எம்.எஸ்., வேலன்குளம் ஜி.ரி.எம்.எஸ், மருதோண்டுவன் வேலன்குளம் ஜி.எம்.எஸ்., வேலன் குழி ஜி.எம்.எம்.எஸ், சோமபுரி ஜி.எம்.எம்.எஸ், மினுக்கன் ஜி.எம்.எம்.எஸ், கோறை ஜி.ரி.எம்.எஸ்., மூன்றாம்பிட்டி ஜி.ரி.எம்.எஸ், காக்கையன் குளம் முஸ்லிம் வித்தி, பெரியகுஞ்சுக்குளம் ஆர்.சி.ரி.எம்.எஸ்., பெரியமுறிப்பு ஜி.ரி.எம்.எஸ், இரணை இலுப்பைக்குளம் ஜி.ரி.எம்.எஸ், சின்னவளையன் காடு ஜி.ரி.எம்.எஸ், விளாத்திக்குளம் ஜி.ரி.எம்.எஸ், சின்ன பண்டிவிரிச்சான் ஜி.ரி.எம்.எஸ், பெரிய பண்டிவிரிச்சான் எம்.வி, தச்சனா மருதமடு ஜி.ரி.எம்.எஸ், நாவற்குளம் ஆர்.சி.ரி.எம்.எஸ், கட்டையடம்பன் ஆர்.சி.ரி. எம்.எஸ், திருக்கேதீஸ்வரம் எச்.பி.ரி.எம்.எஸ், பாலம்பிட்டி ஜி.ரி.எம்.எஸ், கீரிசுட்டான் ஜி.ரி.எம்.எஸ், முள்ளிக்குளம் ஜி.ரி.எம்.எஸ், சிங்கள எம்.வி.,

துணுக்காய் கோட்டம்

ஆலங்குளம் ஜி.ரி.எம்.எஸ், அமைதிபுரம் ரி.வி, அம்பலப்பெருமாள்குளம் ஜி.ரி.எம்.எஸ்., அனிச்சயன்குளம் ரி.எம்.வி, ஆரோக்கியபுரம் ரி.வி., இளையங்கன்குளம் ஜி.ரி.எம்.எஸ், கல்விளான்குளம் ஜி.ரி. எம்.எஸ், கோட்டை கட்டிய குளம் ஜி.ரி. எம்.எஸ், மல்லாவி மத்திய கல்லூரி, முத்தயன்கட்டு ஆர்.வி.ஜி.ரி.எம்.எஸ்., பழைய முறுகண்டி ஜி.ரி.எம்.எஸ், பனிக்கன் குளம் ஜி.ரி.எம்.எஸ், புழுமச்சிநாதகுளம் ஜி.ரி.எம்.எஸ், குத்துவெட்டுவான் ஜி.ரி.எம்.எஸ், தெனியன் குளம் ஜி.ரி.எம்.எஸ், தறங்கண்டல் ஜி.ரி.எம்.எஸ், துணுக்காய் ஜி.ரி.எம்.எஸ், உயிலங்குளம் ஜி.ரி.எம்.எஸ், வவுனிக் குளம் யூனிற் 4 ஜி.ரி.எம்.எஸ், யோகபுரம் எம்.வி,

மாந்தை கிழக்குக் கோட்டம்

அம்பாள்புரம் ரி.வி., கல்விளான் குளம் ஜி.ரி.எம்.எஸ், போதிமூலை ரி.வி., மூன்று முறிப்பு ஜி.ரி.எம்.எஸ், நட்டன்கண்டல் ஜி.ரி. எம்.எஸ், பழைபனி ரி.வி., பாலிநகர் எம்.வி., பன். பூவரசங்குளம் ஜி.ரி.எம்.எஸ்., பனங்காமம் மூன்று முறிப்பு ஜி.ரி.எம்.எஸ்., பாண்டியன் குளம் எம்.வி, சீரட்டிகுளம் ஜி.ரி.எம்.எஸ், வன்னிவிளாங்குளம் ஜி.ரி.எம்.எஸ்., வவுனிக் குளம் மத்திய சுலுசு, விநாயகபுரம் ஜி.ரி.எம்.எஸ்.,

கிளிநொச்சிவலயம் - பூநகரிக்கோட்டம்

இரணைதீவு ஆர்.சி.ரி.எம்.எஸ்., முழங்காவில் எம்.வி, நாச்சிக்குடா ஜி.ரி.எம். எஸ், குமுழமுனை ஜி.ரி.எம்.எஸ், கிராஞ்சி ஜி.ரி.எம்.எஸ்., ஜெயபுரம் எம்.வி, வலப்பாடு ஆர்.சி.ரி.எம்.எஸ், வேரவில் இ.ம.வி., பூநகரி எம்.வி, பூநகரி நல்லூர் எம்.வி., பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா, கரியாலை நாகபடுவான் இல.3 பாடசாலை, கரியாலை நாக படுவான் இல.2 பாடசாலை, மட்டுவில் நாடு ஜி.ரி.எம்.எஸ்., பரமன் கிராய் ஜி.ரி.எம்.எஸ், சுன்னாவில் ஜி.ரி.எம்.எஸ், முற்கொம்பன் ஜி.ரி.எம்.எஸ், சாமிபுலம் ஜி.ரி.எம். எஸ்., கறுக்காய்த் தீவு எம்.வி, ஞானிமடம் ஜி.ரி.எம்.எஸ்., செம்பன்குன்று ஜி.ரி. எம்.எஸ், பல்லவராயன்கட்டு ஜி.ரி.எம்.எஸ்.,, கௌதாரிமுனை ஜி.ரி.எம்.எஸ்,

கரைச்சிக்கோட்டம்

இந்துக் கல்லூரி, இந்து ஆரம்பப் பாடசாலை, பற்றிமா ஆர்.சி.ரி.எம்.எஸ்., கனகபுரம் எம்.வி, புதுமுறிப்பு ஜி.ரி.எம்.எஸ்.,

நெடுங்கேணிக் கோட்டம்

கனகராயன்குளம் ம.வி., புளியங்குளம் இ.க., சின்னடம்பன் பாரதி வித்தி., ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தி., புதுக்குளம் பண்டிதமணி வித்தி, மன்னகுளம் அ.த.க.பா., பழைய வாடி அ.த.க.பா., பெரியபுலம் அ.த.க.பா., விஞ்ஞானகுளம் நவரத்தினம் வித்தி, குறிசுட்டகுளம் அ.த.க.பா, கரப்புக்குத்தி அ.த.க.பா, புதுவிளான்குளம் அ.த.க.பா., பண்டாரவன்னியன் வித்தி., புதூர் அ.த.க. பாடசாலை, இராமானூர் தனிநாயகம் அடிகளார், வ/பெரியடிம்பன் ஸ்ரீ கணேஷா வித்தி, ஆலங்குளம் முருகானந்தா வித்தி.,

ஓமந்தைக் கோட்டம்

தவசியர்குளம் ஜி.ரி.எம்.எஸ்., கிடைச்சுக்குறி ஜி.ரி.எம்.எஸ்., கல்மடு ஜி.ரி.எம்.எஸ்., நொச்சிமோட்டை ஜி.ரி.எம்.எஸ்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.11.1986

* 'சார்க்' உச்சி மகாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆருக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.ஆரின் கொடும்பாவியை எரிக்கத் திட்டமிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் பெங்களூரில் பொலிஸாரால் கைது.
* இலங்கைத் தமிழ்ப் போராளிகள் குழுக்களின் தலைவர்களை வீட்டுக்காவலில் வைத்து அவர்களுக்கும் போடப்பட்டிருந்த பொலிஸ் காவல் விலக்கப்பட்டது.
* பெங்களூர் சென்றடைந்த ஜே.ஆரும் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியும் விமான நிலைய அறையில் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு யோசனைகள் குறித்து ஆராய்வு.

17.11.1986

* இலங்கை, இந்திய-தமிழக அரசாங்க மட்டத்தில் பல கட்டங்களாக இடம்பெற்ற இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான பேச்சுக்களில் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரும் கலந்து கொண்டு போராளிகள் தரப் புக்களின் நிலைப்பாடுகளை விளக்கினார்.
* அரச படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் இடம் பெற்றுவரும் மோதல்களில் சிக்கி சாதாரண பொதுமக்கள் உயிரிழப்பதைத் தடுத்து நிறுத்த தம்மால் எதுவும் செய்ய இயலாதுள்ளதாக ஜனாதிபதி ஜே.ஆர்.தெரிவிப்பு.
* சார்க் மகாநாட்டில் உரையாற்றி முடித்த ஜனாதிபதி ஜே.ஆர். பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு,மகாநாட்டு மண்டபத்தின் பின்வாசல் வழியாக வெளியேறிச் சென்றார்.

18.11.1986

* இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக, கிழக்கு மாகாணத்துக்கு மூன்று மாகாண சபைகளை உருவாக்கும் தனது திட்டத்தை இலங்கை அரசு இந்தியப் பிரதமரிடம் சமர்ப்பித்தது.
* தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் அனைவரையும் நாம் தற்போதும் அகதிகளாகவே கருதுகிறோம் என இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவிப்பு.
* பெங்களூர் பேச்சுக்கள் தோல்விகண்டால் வடக்கில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப் படுமென இலங்கைப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்திருப்பதால் யாழ். நகர வர்த்தகர்களை தமது வியாபார உடைமைகளைப் பாதுகாப்பான இடத்துக்கு அகற்றுமாறு விடுதலைப் புலிகள் அமைப்பு அறிவிப்பு.

19.11.1986

* இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான இலங்கை அரசு பெங்களூரில் சமர்ப்பித்த யோசனைகளை விடுதலைப் புலிகள் இயக்கம் நிராகரிப்பு.
* பெங்களூர் பேச்சுக்கள் பற்றிய விவரங்களை அரசு வெளியிட வேண்டுமென சுதந்திரக்கட்சி எம்.பிக்கள் நாடாளுமன்றத்தில் கோரிக்கை.
* கிழக்கு மாகாணத்துத் தமிழர்களில் பெரும்பாலானோர் மட்டக்களப்பு மாவட்டத்தில் வசிப்பதால் அம்மாவட்டத்தை தமிழருக்கான மாகாணசபையாக உருவாக்க அரசு தீர்மானம்.

20.11.1986

* கிழக்கு மாகாணத்தில் மூன்று மாகாணசபைகளை உருவாக்குவதென்ற அரசின் யோசனை முஸ்லிம் மக்களை கிழக்கில் [illegible]க்கடாக்கள் ஆக்கும் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் சீற்றம்.
* வெளிநாடுகளில் குற்றவாளிகளாகக் காணப்பட்டு அந்நாடுகளால் தண்டனை விதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகளை இலங்கைக்கு நாடு கடத்தும் உடன்படிக்கைகளை அந்நாடுகளுடன் செய்து கொள்ள வழி வகை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ஜே.ஆர் , சட்டமா அதிபருக்குப் பணிப்பு.
* வெளிநாடுகளிடமிருந்து எந்த வித உதவிகளையும் நேரடியாகக் கோர எக்காரணம் கொண்டும் மாகாண சபைகளுக்கு அரசு அனுமதி வழங்காது என தேசிய பாதுகாப்பு அமைச்சர் அதுலத்முதலி தெரிவிப்பு.

21.11.1986

* இனப்பிரச்சினைக்குரிய தீர்வைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு விடுதலைப் புலிகள் அமைப்புக்கே உரியதென்றும் அதில் தமது தரப்பு தலையிடுவது நியாயமற்றதெனவும் அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.
* தமது பெங்களூர் விஜயத்தின் போது பிரபாகரனை இரகசியமாகச் சந்தித்துப் பேச ஜே.ஆர் முயன்றார் எனவும் அதனைப் பிரபாகரன் ஏற்க மறுத்து விட்டதாகவும் சென்னைப் பத்திரிகைகள் தகவல் தெரிவிப்பு.
* நாட்டிலுள்ள பௌத்த பிக்குமாரின் 95 சத விகிதத்தினர் மாகாணசபைகள் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பு.

22.11.1986

* கிழக்கு மாகாணத்துக்கே மூன்று மாகாணசபைகளை உருவாக்குவதென்ற அரசின் யோசனை திருமலை, அம்பாறையைச் சிங்கள மயமாக்குவதற்கான திட்டமே என விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் கருத்து.
* முல்லைத்தீவில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் காணாமல்போன இராணுவச் சிப்பாய்களைத் தேடிக்கண்டு பிடிக்க அங்கு ஊரடங்குச் சட்டம் அறிவிப்பு.
* தமிழர் தாயகம் கோட்பாட்டில் தமிழர் அமைப்புக்கள் உறுதியாக நிற்பதால் அமைச்சர் ஏ.சீ.எஸ்.ஹமீதுக்கும் இந்திய அமைச்சர் திவாரிக்கும் இடையிலான பேச்சில் முடக்க நிலை.

23.11.1986

* தமிழ்ப் பொது மக்கள் மீதான இராணுவ நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்ளுமாறு இந்திய அரசு இலங்கை அரசுக்கு அறிவுறுத்தல்.
* தம்மீதான பொலிஸ் கண்காணிப்பு அகற்றப்படவேண்டும் என்பது உட்பட இரு கோரிக்கைகளை முன்வைத்து [illegible]னையில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கினார்.
* தமிழகத்தில் இலங்கைத் தமிழ்ப் போராளிகள் குழுக்களின் தொலைத் தொடர்புச் சாதனங்களை தமிழ் நாடு பொலிஸார் பறிமுதல் செய்தமை குறித்து இந்திய மத்திய அரசு அதிர்ச்சியும் கவலையும் தெரிவிப்பு.

24.11.1986

* உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடுமாறு சென்னைப் பொலிஸ் தரப்பினரால் கேட்கப்பட்ட போதிலும் தம்மீதான கண்காணிப்பு விலக்கிக் கொள்ளப் படும் வரை தாம் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் அறிவிப்பு.
* பிரதமர் ராஜீவ்காந்தி தலையிட்டு பிரபாகரனின் உண்ணாவிரதத்தைக் கைவிடச் செய்ய வேண்டுமென பல இலங்கை, இந்தியத்தரப்புக்கள் ராஜீவ் காந்திக்கு நெருக்குதல்.

25.11.1986

* திடீரென கொழும்பு வந்த இரு இந்திய மத்திய அமைச்சர்கள் குழு இனப் பிரச்சினைத் தீர்வு யோசனைகள் குறித்து ஜனாதிபதி ஜே.ஆருடன் பேசிவிட்டு உடனடியாக இந்தியா திரும்பினர்.
* ஆயுதம் தாங்கிய போராளிகள் அகிம்சை வழிப் போராட்டத்தில் ஈடுபட்டமைக்கு வரலாற்றில் உதாரணங்கள் உண்டு என விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் தமது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்ட வேளை தெரிவிப்பு.
* இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இந்திய அரசின் நடவடிக்கைகளின் பின்னணியில் உள்ள மர்மம் புரிவதாக இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் அநுரா பண்டாரநாயகா நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

26.11.1986

* அடுத்த சில நாள்களில் கொழும்பில் குண்டுகள் வெடிக்கும் என தேசிய பாதுகாப்பு அமைச்சர் அதுலத் முதலி ஊகம் தெரிவிப்பு.
* கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகள் ஒன்றாக இணைக்கப்பட்டே முஸ்லிம் மாகாணசபை அமைய வேண்டும் என முன்னாள் கல்வி அமைச்சர் பதியுதீன் மஹ்மூத் தெரிவிப்பு.
* வடமாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்ப் பகுதிகளை இணைத்துக் கொடுக்கலாம் என்ற இந்திய அரசின் புதிய யோசனைக்கு இலங்கை அரசு எதிர்ப்புத் தெரிவிப்பு.

27.11.1986

* தமிழர் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி ஜனாதிபதி ஜே.ஆருக்கு கவன ஈர்ப்புக் கடிதம் அனுப்பி வைப்பு.
* இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான இலங்கை அரசின் பிந்திய யோசனைகளுக்கான விடுதலைப் புலிகளின் பதில் அர்த்தம் நிறைந்ததாக அமைவதாக 'புரொண்ட்லைன்' சஞ்சிகை மதிப்பீடு.
* இன்னமும் சில தினங்களில் கொழும்பில் குண்டுகள் வெடிக்கும் என்ற அமைச்சர் அதுலத்முதலியின் ஊகம் தெரிவிப்புச் செய்தியால் கொழும்பு வாழ் பொதுமக்கள் மத்தியில் பரபரப்பு.

28.11.1986

* புத்தளத்தில் நிறுவுவதற்கு முதலில் அனுமதித்துப் பின்னர் மறுத்த அரசு, வொய்ஸ் ஒவ் அமெரிக்கா வானொலி நிலையத்தை ஆனமடுவ என்ற இடத்தில் அமைக்க அனுமதி வழங்க உடன்பாடு தெரிவித்துள்ளது.
* இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இந்தியாவின் புதிய யோசனைகளுக்கு இலங்கை அரசு தெரிவிக்கும் பதில் இந்தியாவுக்குத் திருப்தியளித்தால் மாத்திரமே அவை தமிழர் அமைப்புக்களிடம் சமர்ப்பிக்கப்படும் என இந்திய ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிப்பு.

29.11.1986

* பல்கலைக்கழக மாணவன் விஜிதரனின் மர்ம மறைவையடுத்து பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் பத்து நாள்களின் பின்னர் கைவிடப்பட்டது.
* நத்தாருக்கு முன்னர் இனப்பிரச்சினைக்கு நல்ல தீர்வொன்று காணப்படமுடியுமென இலங்கை அரசு நம்புவதாக அந்த வட்டாரங்கள் தெரிவிப்பு.
* இஸ்ரேலில் பயிற்சி பெற்ற எமது இராணுவ அணியினரால் கூட விடுதலைப் புலிகளிடம் சிறைப்பட்டுள்ள இரு இராணுவ வீரர்களை மீட்கமுடியாதுள்ளதே? என எதிர்க்கட்சித் தலைவர் அநுரா பண்டாரநாயகா நாடாளுமன்றத்தில் கிண்டல்.

30.11.1986

* தொண்டைமானாறு இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களில் வல்வெட்டித்துறை நகரசபையின் முன்னாள் நகர பிதா மரணம்.
* யாழ்.கோட்டையில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினரின் சினைப்பர் தாக்குதல்களிலிருந்து பொது மக்களைப் பாதுகாக்க விடுதலைப்புலிகள் பிரதான வீதியின் குறுக்கே பாதுகாப்புச்சுவர் நிர்மாணிப்பு.
* இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பான இலங்கை இந்திய தமிழர் அமைப்புக்களுக்கிடையேயான பேச்சுக்களில் கலந்து கொள்ள முஸ்லிம் காங்கிரசுக்கும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை.

# டெங்குக்காய்ச்சல் எனச் சந்தேகம் ஏற்பட்டால் பாடசாலைக்கோ, வேலைக்கோ செல்வதை தவிருங்கள்!

## இவ்வாறு அறிவுறுத்துகிறார் சுகாதாரப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜன.4

டெங்குக் காய்ச்சல் எனச் சந்தேகித்தால் காய்ச்சல் முற்றாக மாறும்வரை பாடசாலைக்கு அல்லது வேலைக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன் மேற்கண்டவாறு அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது : -

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய் தற்போது தீவிரமாகப் பரவி வருகின்றது. டிசெம்பர் மாதத்தில் 6 இறப்புக்களும் 308 நோயாளிகளும் இனங்காணப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம், மானிப்பாய், சண்டிலிப்பாய், சுன்னாகம், கொக்குவில் ஆகிய பிரதேசங்களில் இந்நோயின் பரம்பல் அதிகமாகக் காணப்படுவதுடன் மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றது.

தற்போது தென்பகுதியுடனான சுதந்திரமான போக்குவரத்து நடைபெறுகின்றமையால் தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தெற்கிலிருந்து குடாநாட்டிற்கும் குடாநாட்டிலிருந்து தெற்கிற்கும் பயணம் செய்த வண்ணமுள்ளனர்.

எனவே இந்நோய் மேலும் தீவிரமாகப் பரவி மேலும் பலத்த இழப்புக்களை ஏற்படுத்தலாம். எனவே அந்நோயைக் கட்டுப்படுத்த அனைவரது ஒத்துழைப்பும் பங்களிப்பும் மிக அவசியம்.

* டெங்குக் காய்ச்சல் என சந்தேகித்தால் காய்ச்சல் முற்றாக மாறும்வரை பாடசாலைக்கு அல்லது வேலைக்குச் செல்ல வேண்டாம். காய்ச்சலுடன் பாடசா லைக்கு அல்லது வேலைக்குச் செல்வதனால் மேலும் பலருக்கு இந்நோய் பரவலாம்.
* பூரணமாக படுக்கையில் ஓய்வெடுத்தல் வேண்டும்.
* போதியளவு நீராகாரங்களை அருந்துதல் வேண்டும். டெங்கு காய்ச்சல் ஏற்படும்போது உடலில் நீர்த்தன்மை குறைந்து டெங்கு அதிர்ச்சிநிலை ஏற்படும். இதனால் இறப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. அதனைத் தவிர்க்க போதியளவு நீராகாரங்களை அருந்துதல் வேண்டும்.
* காய்ச்சல் உள்ளபோது 'பரசிற்றமோல்' வில்லைகளைப் பாவிக்கலாம். அஸ்பிரின் ரக வில்லைகளை எக்காரணம் கொண்டும் பாவித்தல் கூடாது.
* டெங்குக் காய்ச்சல் என சந்தேகித்தால் தகுந்த வைத்திய ஆலோசனையைப் பெற வேண்டும். தகுதியற்ற வைத்திய சிகிச்சையின் பின்னர் இறுதிநேரத்தில் மோசமான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போது இறப்புக்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாததாகி விடும் எனவே உரிய நேரத்தில் தகுந்த வைத்திய ஆலோசனையைப்பெறுமாறு வலியுறுத்துகின்றேன்.
* டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய சிறிய நீர்த்தேக்கங்களையும், கொள்கலன்களையும் அழிப்பதுடன் தங்களது சுற்றாடல்களை நுளம்புகள் பெருகாதவாறு சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். நிறுவனத்தலைவர்கள் தத்தமது நிறுவனங்களிலும் பாடசாலை அதிபர்கள் தத்தமது பாடசாலைகளிலும் உள்ளூராட்சி மன்றங்கள், பொது இடங்களிலும் வீட்டு உரிமையாளர்கள், குடியிருப்பாளர்கள் தங்களது வீடுகளிலும் இதனைக்கடைப் பிடிக்க வேண்டும்.
* உள்ளூராட்சி மன்றங்கள் திண்மக் கழிவு முகாமைத்துவத்தை சீரான முறையில் மேற்கொள்ள வேண்டும்.
* கழிவுநீர் வடிகால்கள் கிரமமான முறையில் நீர்தேங்காதவாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களினால் துப்புரவு செய்யப்படல் வேண்டும்.
* பொது இடங்களிலும் நிறுவனங்களிலும் பாடசாலைகளிலும் இதற்கான சிரமதானப் பணிகள் ஏற்பாடு செய்யப்படு தல் வேண்டும்.

சுகாதாரத் திணைக்களத்தினால் மட்டும் டெங்குநோயை கட்டுப்படுத்த முடியாது. சம்பந்தப்பட்ட அனைத்து திணைக்களங்கள், பொதுமக்களும் ஒத்துழைப்பினை வழங்கினால் மட்டுமே இந்நோயின் பரம்பலை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரமுடியும். எனவே இந்நிலையின் தார்ப்பரியத்தை உணர்ந்து அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டிநிற்கின்றோம் - என்றுள்ளது. (ஒ-1)

# இடம்பெயர்ந்தவர்கள் வாக்களிக்க விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 4

இடம்பெயர்ந்த சகல வாக்காளர்களும் வாக்களிப்பதற்கு வசதியாக தேர்தல்கள் தலைமையகம் விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இடம் பெயர்ந்தவர்கள் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வெளியாகும் செய்திகளில் உண்மை இல்லையென்றும் தேர்தல் தலைமையகம் தெரிவித்தது.

யுத்தத்தினால் உள்ளக இடம் பெயர்வுக்கு உள்ளானவர்களும், தேர்தல் தொகுதிக்கு வெளியில் இடம்பெயர்ந்தவர்களும் வாக்களிக்க வென வெவ்வேறான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஷாநாயக்க தெரிவித்தார்.

நலன்புரி முகாம்களிலிருந்து சொந்தக் கிராமங்களில் மீளக்குடியமர்ந்தவர்கள் தாம் வாழும் பகுதியில் வாக்களிப்பதற்கு வசதியாக வாக்குச்சாவடி அமைக்கப்படுவதுடன், ஏனையுவர்களுக்குக் கொத்தணி வாக்குச்சாவடிகள் அமைக்கப்படுமென்றும் ஆணையாளர் கூறினார்.

தேர்தல் தொகுதிகளுக்கு வெளியில் கொழும்பு, புத்தளம், அனுராதபுரம், களுத்துறை உள்ளிட்ட இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ள வாக்காளர்கள், வாக்களிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் அவர்கள் தமது பெயர்களைப் பதிவு செய்திருக்க வேண்டுமென்று ஆணையாளர் குறிப்பிட்டார்.

வன்னிப் பிரதேசத்தின் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட வாக்காளர்களுக்குத் தனியாகவும், யாழ். குடாநாட்டில் இடம்பெயர்ந்த வர்களுக்குத் தனியாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சியில் மீளக்குடியமர்ந்தவர்கள் அங்கேயே வாக்களிக்க முடியும்.

இந்நிலையில் இடம்பெயர்ந்தவர்களுள் பெரும்பாலானவர்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்கும் வாய்ப்பை இழப்பதாகப் பத்திரிகைகளில் வெளியாகும் தகவல்கள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதென்று தேர்தல்கள் ஆணையாளர் குறிப் பிட்டார் என ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (1)

# நவாலி கொத்துக்கட்டிப் பகுதியில் குவிந்திருந்த திண்மக் கழிவுகள் அகற்றப்பட்டன!

யாழ்ப்பாணம்.ஜன.04

நவாலி கொத்துக்கட்டி பகுதியில் கொட்டப்பட்டிருந்த 'திண்மக் கழிவுகள்-மலக்கழிவுகளின் பெரும்பகுதி உடனடியாக அகற்றப்பட்டுள்ளன.

இதனால் மக்களுக்கு ஏற்படவிருந்த மலேரியா-டெங்கு அபாயம் குறைக்கப்பட்டுள்ளது.

வலி .தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைச் செயலாளர் திருமதி .பு.சிவலிங்கம் அவர்களின் உத்தரவின் பேரில் சுகாதார தொழிலாளர்களால் மேற்படிகழிவுகள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக நவாலி தெற்கு கொத்துக்கட்டிக் கேணிப் பகுதி திண்மக்கழிவுகள்- மலக்கழிவுகள், சிகையலங்கார கழிவுகள், போத்தல் ,ஓடுகள், மற்றும் தகரத்திலான பேணிகள், கொள்கலக் கழிவுகள் என்பனவற்றால் நிரம்பி வழிந்திருந்தது. இதனால் இப்பகுதியில் டெங்கு நோய்பரவும் அபாயநிலை தோன்றியிருந்தது.

இதனையடுத்து பிரதேசசபைச் செயலாளர் திருமதி.பு.சிவலிங்கம் எடுத்த அவசர நடவடிக்கைத் தொடர்ந்து தற்போது 70 வீதமான கழிவுகள் அகற்றப்பட்டுள்ளதாகவும், விரைவில் மிகுதிக் கழிவுகள் அகற்றப்பட்ட பின்னர் இருமருங்கிலும் உள்ள பற்றைகள் முழுமையாக வெட்டப்பட்டு துப்புரவு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை-

நவாலி தெற்கு கொத்துக்கட்டி பகுதியில் திண்மக்கழிவுகள் போடுபவர்கள் எவரேனும் கண்டுபிடிக்கப்பட்டால் சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கவும் பிரதேச சபைச முன்வந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பிறந்திருக்கும் 2010 உங்களுக்கு எப்படி

## வித்யா தருவதைப் படியுங்கள்...

### கடகம்

சுத்தம் சோறுபோடும் என்பதை அறிந்த நீங்கள், சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வீர்கள். மனோபலம் அதிகமுள்ள நீங்கள், தோல்வி கண்டு துவளமாட்டீர்கள்.

ராஜயோகம் தரும் வீடான 3ஆம் வீட்டில் சனிபகவான் அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் திடீர் யோகங்களை அனுபவிப்பீர்கள். உங்களின் நட்புவட்டம் இனிமேல் அதிகமாகும். வெளிநாட்டிலிருப்பவர்கள், வெளிமாநிலத்தவர்களுடன் சேர்ந்து தொழில் செய்யும் யோகம் உண்டாகும். குருபகவான் 8ஆம் வீட்டில் 03.05.2010 வரை மறைந்து நிற்பதால் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். ஆனாலும் உங்களின் 2ஆம் வீட்டை குரு பார்ப்பதால் எதிர்பார்த்த வகையில் பணம் வரும். குடும்பத்தில் நிலவி வந்த கூச்சல் குழப்பங்களெல்லாம் நீங்கிச் சந்தோஷம் குடிகொள்ளும். கணவன் -மனைவிக்குள்ளான வீண் சந்தேகம் தீரும். நெருக்கம் அதிகரிக்கும்.



கடகம்

மனைவிவழி உறவினர்களில் இருந்து வந்த தர்மசங்கடங்கள் தீர்ந்து நல்லது நடக்கும்.

குரு உங்கள் சுகஸ்தானத்தை பார்ப்பதால் உடற்சோர்வு, வீண் அலைச்சல், பதற்றம் விலகும். தாயிடம் இருந்து வந்த மனஸ்தாபங்கள் நீங்கும். அவர் வழிச் சொத்து கைக்கு வரும். பணம் எவ்வளவு வந்தாலும் தங்கவில்லையே எனப் புலம்பினீர்களே! 04.05.2010 முதல் 06.11.2010 வரை குருபகவான் 9ஆம் வீட்டில் ஆட்சி பெற்று அமர்வதால் சேமிக்கும் அளவிற்கு வருவாய் அதிகரிக்கும். குடும்பத்தினர் விரும்பிய பொருள்களை வாங்கித்தந்து மகிழ்வீர்கள். பழுதான சாதனங்களை மாற்றுவீர்கள். அடிப்படை வசதிகள் பெருகும். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். பழைய வாகனத்தை மாற்றுவீர்கள். மே மாதம் வரை உங்கள் யோகாதிபதி செவ்வாய் நீசமாகி ராசிக்குள்ளேயே நிற்பதால் திடீர்ச் செலவுகளும், பயணங்களும் அதிகரிக்கும். ரத்தம் சம்பந்தப்பட்ட நோய் வரும். ஆரம்பக்கட்டத்திலேயே மருத்துவரை சந்திப்பது நல்லது. சகோதர வகையில் கொஞ்சம் மனக்கசப்புகள் வந்துபோகும்.

6ஆம் வீட்டில் ராகு சாதகமாக இருப்பதால் பிரபலங்களின் அறிமுகம் கிடைக்கும். புதிய முயற்சிகள் வெற்றிஅடையும். வழக்குகள் இதோ அதோ என்று இழுத்தடித்துக் கொண்டிருந்ததே! இனிச் சாதகமாக முடியும். பழைய சொந்தங்கள் தேடி வருவார்கள். பங்குகள் மூலம் பணம் வரும். போட்டி, பந்தயங்களில் வெற்றி பெறுவீர்கள். 12இல் கேது நிற்பதால் வெளிமாநில புண்ணிய தலங்களுக் கெல்லாம் சென்று வருவீர்கள். சொந்த ஊர்க்கோயில் திருவிழாவை சொந்தச் செலவில் நடத்துவீர்கள். அக்கம்பக்கம் வீட்டார் அடிக்கடி உங்களைக் குறை கூறினார்களே! இனிச் சமாதானக்கொடி பறக்கும். அவர்கள் வீட்டுக் கல்யாணத்தை முன்னின்று நடத்தி வைப்பீர்கள்.

வியாபாரிகளே! பக்கத்து கடைக்காரருடன் தகராறு, புடைவைப் பொருள்கள் தேங்கியதால் நஷ்டம் என தொடர் சிக்கல்களைச் சந்தித்தீர்கள் அந்தநிலை மாறும். சனி 3இல் சாதகமாக இருப்பதால் அரசியல்வாதிகளின் உதவியால் கடையை விரிவுபடுத்துவீர்கள். புடைவை, மருந்து, உணவு வகைகளால் ஆதாயமடைவீர்கள். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்களின் கொட்டம் அடங்கும். அவர்கள் உங்களின் ஆலோசனைக்குத் தலையசைப்பார்கள். மே, ஜூன், செப்ரெம்பர் மாதங்களில் புது ஒப்பந்தங்கள் கூடி வரும். உத்யோகஸ்தர்களே! வீண்பழியால் மன உளைச்சலுக்குள்ளாகி தூக்கமிழந்தீர்கள் மற்றவர்களின் வேலைகளைச் சேர்த்துப் பார்த்தும் நல்ல பெயர் கிடைக்கவில்லையே! இனி அந்த அவலநிலை மாறும். நெடுநாள்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த பதவி உயர்வு, சம்பள உயர்வு தடையில்லாமல் கிடைக்கும். விரும்பிய இடத்திற்கு மாற்றல் வாங்கிக் கொண்டு வருவீர்கள்.

கன்னிப் பெண்களே! காதல் விவகாரத்தால் உயர்கல்வியில் மதிப்பெண்களை இழந்தீர்கள் இனி போலியாகப் பழகியவர்களிடமிருந்து ஒதுங்குவீர்கள். வேலை கிடைக்கும். கண்ணுக்கு அழகான கணவர் வந்தமைவார். வெளிநாடும் செல்வீர்கள். மாணவர்களே! பள்ளியில் அரட்டை, வீட்டில் விடிந்தும் குறட்டை என நேரத்தை வீணடித்தீர்களே! இனி படிப்பில் ஆர்வம் பிறக்கும். விளையாட்டிலும் பதக்கம் கிடைக்கும்.

அரசியல்வாதிகளே! வெறும் அறிக்கை மட்டும் போதாது, மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறை காட்டுங்கள். கலைத்துறையினரே! வருமென எதிர்பார்த்த வாய்ப்புகள்கூட நூலிழையில் தவறியதே! இனிப் பெரிய நிறுவனங்கள் உங்களை அழைத்துப் பேசும். விவசாயிகளே! வண்டுக்கடி, பூச்சிக்கடியிலிருந்து பயிரைக் காப்பாற்றுவீர்கள். விளைச்சல் இரட்டிப்பாகும்.

ஆகமொத்தம் இந்தப் புத்தாண்டு உங்களின் நீண்டகால ஆசைகளை நிறைவேற்றுவதுடன் சமூகத்தில் வணக்கத்துக்கு உரியவர்களாகவும் வளர வைக்கும். ★

### சிங்கம்

உலகிற்கே ஒளிதரும் சூரியனின் ராசியில் பிறந்த நீங்கள், பாகுபாடு பார்க்காமல் உதவுபவர்கள். முன்வைத்த காலை பின் வைக்காத நீங்கள், செய்நன்றி மறவாதவர்கள்.

உங்களின் பூர்வ புண்யாதிபதி குருபகவான் 7ஆம் வீட்டில் அமர்ந்திருக்கும் வேளையில் இந்தப்புத்தாண்டு பிறப்பதால் குழப்பம், தடுமாற்றம், தயக்கம் நீங்கி தெள்ளத் தெளிவாக பெரிய முடிவுகளை எடுப்பீர்கள். குரு உங்கள் ராசியை நேருக்கு நேர் பார்ப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். வீட்டிலிருப்பவர்கள் இனி உங்களின் அறிவுரையைக் கேட்டு நடப்பார்கள். பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேருவீர்கள். கொஞ்சி மகிழ வீட்டில் ஒரு பிள்ளை இல்லையே என்று வருந்தினீர்களே! இந்த ஆண்டு உங்களுக்கு குழந்தை பாக்கியமும் கிடைக்கும்.

வீட்டில் தடைபட்ட கல்யாணம், கிரகப் பிரவேசம் நல்லவிதத்தில் நடக்கும். எந்த வேலையும் முதல் முயற்சியிலேயே முடியாமல் போனதே! இனி மனபலத்தால் சாதிப்பீர்கள். வரவேண்டிய பணம் கைக்கு வரும்.



சிங்கம்

மகளுக்கு நல்ல இடத்தில் வரன் அமையும். உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டை குரு பார்ப்பதால் வருங்காலத் திட்டங்கள் பூர்த்தியாகும். கௌரவப் பொறுப்புகள் தேடிவரும். சொந்த ஊரில் மதிக்கப்படு வீர்கள். கோயில் திருவிழாவை முன் னின்று நடத்துவீர்கள். உங்கள் ராசிக்கு லாப ராசியில் சந்திரன் நிற்கும் போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் வருமா னம் உயரும். மூத்த சகோதர, சகோதரிக ளுடன் இருந்த மனத்தாங்கல் நீங்கும்.

வருடம் முழுக்க ராசிக்கு 5ஆம் வீட்டில் ராகு நிற்பதால் சில நேரங்களில் முன்கோபம் தலைதூக்கும். பிள்ளை அவர்கள் விரும்பும் பாடப்பிரிவி போராடிச் சேர்ப்பீர்கள். மகளுக் மணமகன் தேடும் விஷயத்தில் அலட்சியம் வேண்டாம். நிச்சயத்திற்கும் கல்யாணத்திற்கும் இடையே அதிக கால இடைவெளியில்லாமல் உடனே திருமணத்தை நடத்துவது நல்லது. கேது 11இல் நிற்பதால் நட்பு வட்டம் விரியும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். அரைகுறையாக நின்றுபோன வீடு கட்டும் வேலையை இனி விரைந்து முடிப்பீர்கள். சிலர் இருக்கும் வீட்டை விரிவுபடுத்திக் கட்டுவீர்கள். தூரத்து உறவினர்கள் தக்க சமயத்தில் உதவுவார்கள். வெளியூர் பயணங்கள் அதிகரிக்கும். சனி பகவான் ராசிக்கு 2ஆம் வீட்டில் பாதகச்சனியாக நிற்பதால் கணவன் மனைவிக்குள் அவ்வப்போது வாக்குவாதங்களும் கருத்து வேறுபாடுகளும் சந்தேகங்களும் வரும். பொது இடங்களில் யாரையும் தாக்கிப் பேசவேண்டாம். கண்வலி, பல்வலி வந்துபோகும். காலில் அவ்வப்போது அடிபடும்.

குரு உங்களின் லாப வீட்டை பார்ப்பதால் பங்குகளால் பணம் வரும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். அண்ணனுக்குத் திருமணம் சிறப்பாக முடியும். தம்பியுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். விலையுயர்ந்த தங்க ஆபரணம் வாங்குவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். 04.05.2010 முதல் 06.11.2010 வரை குரு வக்ரமாகி 8இல் மறைவதால் குடும்பத்தில் வீண் செலவுகளும், அவச்சொல்லும் வரும். என்றாலும் வளர்ச்சி தடைப் படாது.

வியாபாரிகளே! பொறுப்பாகச் செயல்பட்டு லாபத்தை பெருக்கப் பாருங்கள். பக்கத்து கடைக்காரரை பார்த்து பெரிய முதலீடுகளைப் போட்டு சிக்கிக் கொள்ளாதீர்கள். வேலையாள்களிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. பங்கு தாரர்களிடையே இருந்து வந்த பிணக்கு நீங்கும். அரிசி, எண்ணெய் கடைகள் மூலம் லாபம் உண்டு. மே, ஜூன் மாதங்களில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். பழைய வாடிக்கையாளர்கள் மீண்டும் வருவார்கள். உத்தியோகஸ்தர்களே! மேலதிகாரி எதற்கெடுத்தாலும் குறைபட்டுக் கொண்டாரே! இனி அவர் கோபம் குறையும். சக ஊழியர்கள் உங்களிடம் நேசமாகப் பழகுவார்கள். மார்ச், ஏப்ரல், நவெம்பர், டிசெம்பர் மாதங்களில் சம்பளம் கூடும். புது வாய்ப்புகளும் வரும்.

கன்னிப் பெண்களே! பொய்க் காதலை நினைத்து வருந்தாதீர்கள். உங்களின் படிப்புக்கும், தகுதிக்கும் ஏற்றாற்போல நல்ல மணமகன் அமைவார். மாணவர்களே! தேர்வில் வெற்றி பெற வேண்டுமென்ற எண்ணமிருந்தால் மட்டும் போதாது, ஓயாது படிப்பதோடு, விடைகளை எழுதிப் பாருங்கள்.அரசியல்வாதிகளே! எதிர்க்கட்சியினரின் கேள்விக்கு இடமளிக்காமல் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றப் பாருங்கள். கலைஞர்களே! அரசால் பாராட்டப்படுவீர்கள். மூத்த கலைஞர்கள் ஆதரவாக இருப்பார்கள். விவசாயிகளே! விளைச்சலை நம்பிப் பெரிய அளவில் கடன் வாங்கி மாட்டிக் கொண்டீர்களே! இப்பொழுது அதனைத் திருப்பிக் கொடுக் கும் அளவுக்கு அறுவடை பெருகும்.

ஆகமொத்தம் இந்தப் புத்தாண்டு ஏழரைச்சனியின் தாக்குதலைத் தாக்குப் பிடிக்க வைப்பதுடன் மெல்ல உங்களின் வளர்ச்சிக்கு வழி வகுக்கும். ★

### கன்னி

எது நடந்தாலும் எல்லாம் நன்மைக்கே என்று நினைக்கும் நீங்கள், எந்த சூழ் நிலையிலும் சுயமரியாதையை விட்டுக் கொடுக்க மாட்டீர்கள். உங்கள் 10ஆவது ராசியில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் கடின உழைப்பால் சாதிப்பீர்கள்.

குருபகவான் குடும்ப ஸ்தானத்தை பார்ப்பதால் மனப்போராட்டங்கள் ஓயும். சமயோசிதமான பேச்சால் தடைபட்ட வேலைகளை முடிப்பீர்கள். நீண்ட நாள்க ளாக எதிர்பார்த்து காத்திருந்த பணம் கைக்கு வரும். கணவன்-மனைவிக்குள் காரண காரியமே இல்லாமல் காரசாரமான விவாதங்களெல்லாம் வந்ததே! இனி அந்த நிலை மாறும். தம்பதியருக்குள் நெருக்கம் அதிகரிக்கும். உங்களுக்குள் கலகம் செய்து பிரச்சினை ஏற்படுத்தியவர் களை இனி ஓரங்கட்டுவீர்கள். பழைய கடனை எவ்வாறு அடைக்கப்போகி றோமோ என்று முழி பிதுங்கி நின்றீர் களே! இனி அதற்கான வழி வகைகள் கிட்டும். பிள்ளைகளிடம் அவ்வப்போது கோபப்பட்டீர்களே! இனி அரவணைத் துப்போவீர்கள். மகனுக்கு திருமணம் தள்ளிக் கொண்டே போனதே! இப்பொழுது கூடி வரும்.

04.05.2010 முதல் 06.11.2010 வரை குருபகவான் 7ஆம் வீட்டில் அமர்ந்து உங்கள் ராசியைப் பார்க்க இருப்பதால் பணவரவும், குடும்பத்தில் மகிழ்ச்சியும், எதிலும் வெற்றியும் உண்டாகும். வெளி வட்டாரத்தில் உங்களின் புகழ், கௌரவம் உயரும். நீதிமன்ற வழக்கில் நல்ல தீர்ப்பு கிடைக்கும். முதுகுவலி, சர்க்கரை நோயின் தாக்கம் குறையும். ஆனால், சனிபகவான் ராசிக்குள் ஜென்மச்சனியாக அமர்ந்திருப் பதால் உடல் நலத்தில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். அலட்சியமாக இருக் காதீர்கள். வறுத்த, பொரித்த, அசைவ உணவுகளை தவிர்த்து விடுவது நல்லது. வாயுக் கோளாறால் நெஞ்சு வலி, சமிபாட்டுக் கோளாறு வரும். நாக்கை கொஞ்சம் கட்டுங்கள். மனைவி வழியில் கொஞ்சம் அலைச்சலும், செலவும் இருக்கும். நீங்கள் பெருந்தன்மையாக நடந்து கொண்டாலும் சிலர் உங்களை குறை கூறுவார்கள்.

குரு 10ஆம் வீட்டைப் பார்ப்பதால் தகுதிக்கேற்ப நல்ல வேலை அமையும். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உங்களை வாழ்த்தும். சாதுக்கள் உதவு வார்கள். நாடாளுபவர்கள் அறிமுகமா வார்கள். சொந்த ஊரில் இழந்த செல் வாக்கை மீண்டும் பெறுவீர்கள். அதிக சம்பளத்துடன் புதிய வேலை கிடைக்கும். ராசிக்கு 4இல் ராகுவும் 10இல் கேதுவும் நிற்பதால் தாய்க்கு ரத்த அழுத்தம் அதிகமாகும். நரம்புக் கோளாறு வரும். தாய்வழி உறவினர்களால் அலைச்சலும், செலவீனங்களும் வந்துபோகும். வேலைச்சுமை வாட்டியெடுக்கும். ஆனா ஆன்மிகத்தில் மனம் லயிக்கும். அரசாங்க விஷயங்களில் அலட்சியம் வேண்டாம். செலுத்த வேண்டிய வரித் தொகைகளை உடனுக்குடன் செலுத்துவது நல்லது. வாகனத்தில் அடிக்கடி உதிரிப்பாகங்களை மாற்ற வேண்டி வரும்.

வியாபாரிகளே! சரக்குகளை நிரப்பி வைத்தும் வாங்குவார் யாருமில்லை என்ற நிலை மாறும். இனி சந்தை நிலவரங் களை விரல் நுனியில் வைத்துக்கொண்டு அதற்கேற்ப முதலீடு செய்வீர்கள். தளபாடங்கள், மருந்து, இரும்பு வகைகளால் ஆதாயம் உண்டு. வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்த புது சலுகைகளை அறிவிப்பீர்கள். வேலையாள்கள் மற்றும் பங்குதாரர்கள் சில சமயங்களில் குடைச்சல் தந்தாலும் அசரமாட்டீர்கள். மார்ச், ஏப்ரல், ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் வியாபாரம் சூடு



கன்னி

பிடிக்கும். உத்தியோகத்தர்களே! பழைய பிரச்சினைகளைக் கிளறிவிட்டு சிலர் வேடிக்கை பார்த்தார்களே! அந்த அவல நிலையெல்லாம் இனி மாறும். என்றாலும் ஏப்ரல் மாதம் வரை முக்கிய ஆவணங்களை கவனமாக கையாளுங்கள். ஜூன் மாதத் திலிருந்து அலுவலகச் சூழ்நிலை அமைதி தருவதாக இருக்கும். பதவி உயர்வையும் எதிர்பார்க்கலாம்.

கன்னிப் பெண்களே! மனக்குழப்பம், தாழ்வு மனப்பான்மை நீங்கும். உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை உணருவீர்கள். விட்ட பாடத்தை மீண்டும் எழுதி வெற்றி பெறுவீர்கள். மாண வர்களே! உங்களுடன் சும்மா சுற்றித் திரிந்த நண்பர்கள் நல்ல மதிப்பெண் பெற்று வெற்றி பெற்றுவிடுவார்கள். எனவே விதண்டாவாதம் பேசிக் கொண்டிருக்காமல் படிப்பில் அக்கறை செலுத்துங்கள். அரசியல்வாதிகளே! கட்சி அறிவிக்கும் போராட்டங்களில் பங்கேற்று தலைமையின் நன்மதிப்பை பெறுவீர்கள். என்றாலும் கட்சிக்குள் உங் களுக்கு எதிராக சில சதி வேலைகளும் நடக்கும். கலைத்துறையினரே! வாய்ப்பு தானாகக் கிடைக்கும் என காலம் கடத்திக் கொண்டிருந்தீர்களே! இனி பொறுப்பாக செயல்பட்டு சின்ன வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். விவசாயி களே! நவீனரக உரங்களால் விளைச்சலை அதிகப்படுத்துவீர்கள்.

இந்தப் புத்தாண்டு பிரபலங்களை பயன்படுத்திக்கொண்டு முன்னேற வைப்பதுடன், புதிய பாதையில் சென்று வெற்றி பெறவும் வைக்கும். (வளரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்.குடாநாட்டில் தற்போது நிலவும் மந்தமான காலநிலையால் நெற்பயிரில் இலைச்சுருட்டிப் புழுவின் தாக்கம்

யாழ். குடாநாட்டில் இக்காலபோகத்தில் 10 513 ஹெக்ரேயரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது கதிர்தொடக்க வடிவம் தோன்றும் பருவம், குடலைப்பருவம், பூத்தல்பருவம், பாற்பருவம் என பல வளர்ச்சி நிலையில் நெற்பயிர் காணப்படுகின்றது. இந்நிலையில் இலைச்சுருட்டிப் புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளது.

செம்மணி வெளி, மானிப்பாய் மேற்கு, நவாலி வயல்வெளிகள், மறவன்புலவு, தனங்கிளப்பு, சோனப்பு, கேவளை, கப்புதூ வெளி, கெருடாவில் தெற்கு, இருபாலை கிழக்கு, நெடுந்தீவு வயல்வெளிகள் ஆகிய இடங்களிலுள்ள நெல்வயல்களில் இதன் தாக்கம் அதிகமாகக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவுகின்ற மப்பு மந்தாரமானதும், சாரீரப் பதன் கூடியதுமான இக்காலநிலை இப்பூச்சியின் குடித்தொகைப் பெருக்கத்திற்கு சாதகமாகவுள்ளது.

இலைச் சுருட்டி புழுவின் வளர்ச்சிப் பருவம்




இறக்கைகளின் விளிம்பில் கருங்கபிலக் கரையினையும் அலைபோன்ற குறுக்குக் கோடுகளையும் உடைய பொன்னிறமான 8-10 மி.மீற்றர் நீளமான நிறைவுடலிகள் மாலைவேளைகளில் நடமாடுவதை அவதானிக்கலாம். இவற்றினால் இலை மேற்பரபப்பில் இடப்படும் முட்டைகள் பொரித்து மஞ்சட் பச்சை, நிறமான குடம்பிகள் வெளிவரும். இக்குடம்பிகள் இளம் இலைகளின் மேற்புறத்தைச் சுரண்டி உண்டு சேதம் செய்யும். இரண்டாவது கவசம் கழற்றலின்போது இவை இலைகளின் விளிம்புகளை இணைத்து அதனுள் இருந்து கொண்டு சுரண்டி உண்ணும். இதனால் ஒளித்தொகுப்பு பாதிக்கப்பட்டு விளைவில் இழப்பு ஏற்படும்.

முகாமைத்துவ முறைகள்:

* இதன் தாக்கம் வயலில் நிழல்விழும் இடங்களில் ஆரம்பித்து பரவிச் செல்லும். ஆகையால் வயலுக்கு அண்மையில் பற்றைகள் இருப்பின் வெட்டி அகற்றுவதுடன் அண்மையில் உள்ள மரங்களின் கிளைகளையும் வெட்டி விடவும்.




* இதன் தாக்கம் காணப்படும் வயல்களில் கொக்குகள் நின்று இப்புழுக்கைளைப் பொறுக்கி உண்பதைக் காணலாம். கொக்குகள், பறவைகள் தங்கியிருப்பதற்கு தென்னம் மட்டைகளை அடிப்பாகம் மேற்புறம் இருக்கக்கூடியவாறு வயல்களில் நாட்டிவிடவும்.
* வயல் வரம்புகளில் உள்ள புற்களை தாள் கத்தியினால் வெட்டி துப்புரவாக வைத்திருக்கவும்.
* தாக்கம் அதிகமான நிலையில் உள்ள வயல்களுக்கு உடனடியாக கீழ் குறிப்பிடப்படும் பூச்சிநாசினிகளில்ஒன்றை காலநிலையை அனுசரித்து விசிறவும்.

முக்கிய குறிப்பு:

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் நிலவிய காலநிலை இலைச் சுருட்டிக்கு மிகவும் சாதகமாக இருந்ததன் காரணமாக வெகுவிரைவில் பரவி தாக்கத்தை ஏற்படுத்தியது. இப்பூச்சிப் பீடையானது கடந்த 18 ஆம் திகதிக்கு பின்னர் பெய்த மழையின் பின் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இலைச் சுருட்டிப்புழு தாக்கிய அறிகுறிகள் இலைகளில் தொடர்ந்தும் காணப்படும்.

ஒரு வயலில் இலைச்சுருட்டி தொடர்ந்தும் தாக்கியனால் முதற்பயிரில் புதிதாக வெளிவரும் இலைகள் தொடர்ந்தும் தாக்கப்படும். இப்படியான வயல்களில் புதிதாக தாக்கப்பட்ட இலைகளை பிடுங்கி விரித்துப்பார்த்தால் புழுக்களை அவதானிக்கலாம்.

எனவே விவசாயிகள் வயல்களில் ஆங்காங்கு இறங்கி புதிதாக தாக்கப்பட்ட இலைகளைப் பிடுங்கி பார்த்து புழுக்களை அவதானித்தால் மட்டுமே நாசினிகளை விசிறவேண்டும்.

தற்போது பல நெல்வயல்கள் பூக்கும் பருவத்தில் காணப்படுவதால் பிற்பகலில் (3 மணிக்கு பின்) நாசினி விசிறுவது உகந்தது.

க.தனபாலசிங்கம்
பாடவிதான உத்தியோகத்தர் (பயிர்பாதுகாப்பு),
பிரதி விவசாயப்பணிப்பாளர் (விரி)அலுவலகம், யாழ்ப்பாணம்.

| இரசாயனப் பெயர் | வர்த்தகப் பெயர் | கலவை அளவு | 16 லீற்றர் தாங்கிக்கு தேவையான நாசினி அளவு |
|---|---|---|---|
| குறோமோ பெனோ சைட் 50கி/லீ/எஸ்.சி | மற்றிக் 5% எஸ்.சி | 10மி.லீ- 10லீ | 16மி.லீ |
| பிப்றோனில் 50கி/லீ/எஸ்.சி | றீஜென்ற் 50 எஸ்.சி | 12மி.லீ- 10லீ | 19மி.லீ |
| ரெபியூ பெனோ சைட் 200கி/லீ/எஸ்.சி | மிமிக் 20 எவ் | 20மி.லீ- 10லீ | 32மி.லீ |
| மெதொக்சி பெனோ சைட் 240கி/லீ/எஸ்.சி | றண்ணர் | 10மி.லீ- 10லீ | 16மி.லீ |
| குளோர் பைறிபொஸ் 200கி/லீ/ஈ.சி | கொமாண்டோ, குளோர் பைறிபொஸ், குளோர்பான், சைறன் 20, டேரஸ்பான், பின்(F)பொஸ்20, மக்(F)பொஸ் பைறினெக்ஸ் 20ஈ.சி | 14மி.லீ- 10லீ | 64மி.லீ |
| குளோர் பைறிபொஸ் 400கி/லீ/ஈ.சி | குளோறிபொஸ் 400, அமிக்குளோர், சீபொஸ் 40 ஈ.சி, சி.ஜி றைடர், சிகரா, குளோர்பான் பிளஸ், குளோர்பைறிபொஸ் 40%, கொமாண்டோ, சைறன் 40, டடாஸ், டிறக்கன், எம்பொஸ் 40 ஈ.சி, பின்(F)பொஸ் 40, கார்குரோன், இன்சிபான், யூடோ 40 ஈ.சி, லீடோ பான், லோஸ்பான் 40 ஈ.சி, மொறிபொஸ் 40, நொக்கியா, ஒறுகா 400, பட்டாஸ், பெஸ்ற்பான் சுப்பர், பைறிபான், பைறிமெக், பைறினெக்ஸ் 400, றம்போ, சான்டோ, ரைகர் 400, யூனிபொஸ் 400, விற்றாசீல்ட் 40 ஈ.சி | 20மி.லீ- 10லீ | 32மி.லீ |
| நவலுறோன் 100கி/லீ/ஈ.சி | நவலுறோன் 10% ஈ.சி | 10மி.லீ- 10லீ | 16மி.லீ |
| குளோர் புளுசரோன் 50கி/லீ/ஈ.சி | அற்றபுரோன் 5 ஈ.சி | 10மி.லீ-10 லீ | 12மி.லீ |
| அசடிறக்ரின் 10கி/லீ/ஈ.சி | நீம் அசால் ரி/எஸ் | 50 மி.லீ -10லீ | 80மி.லீ |
| பென்தியோன் 500கி/லீ/ஈ.சி | லெபேசிட் ஈ.சி. 50 | 50 மி.லீ -10லீ | 80மி.லீ |
| அசிபேற் 75% க.தூ. | அசினெஸ், அசிற்ரோல், அப்பினோ, அக்ஷன்-ஆர், அக்ஸ்ரார் அசிபேற், சீ -பேற், கார்தீன், லான்சர், ஓ-பேற், ஓர்தீன், சுப்பதீன், சறண்டெர். | 15 கிராம்-10லீ | 24 கிராம் |

# நோயற்ற வாழ்வுக்கு நமக்குத் தேவை இரசாயனக் கலப்பற்ற மரக்கறிகளே!

-மருதன்-

யாழ்ப்பாண மாவட்டத்தில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்துச் செல்வதாக ஊடகச் செய்திகள் எமக்குக் கிடைக்கின்றன.

பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் சமூகசேவைப் பகுதி மூலம் புற்றுநோய் உதவி பெறுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரிப்பதாக தகவல்கள் கிடைக்கின்றன.

புற்றுநோய் தொடர்பாக மருத்துவனாகவோ, மருத்துவத்துறை சார்ந்தோ நான் கருத்துக்கள் எதனையும் இங்கு முன்வைக்கவில்லை.

சில அவதானிப்புக்கள் மூலமாக என் பட்டறிவுக்கு எட்டிய வகையில் கருத்துக்களை இங்கு முன் வைக்கின்றேன்.

புற்றுநோய் வருமுன் காக்க வேண்டிய ஒரு நோய் எனவும், ஒருவரிலிருந்து மற்றையவருக்கு தொற்றாத ஒரு நோய் எனவும் மருத்துவர்களால் கூறப்படுகின்றது.

எமது குடாநாட்டில் மரக்கறி, பழப் பயிர்ச்செய்கை உற்பத்திகளின் போது அளவுக்கு மிஞ்சியதாக உரப்பாவனை, கிருமி நாசினிப்பாவனை என்பவை இடம்பெறுவதாகவும் இதனால் மரக்கறிகள் நிலத்தடி நீர் நஞ்சாகின்றது. அதன் மூலம் புற்று நோய்க்குரிய ஏதுக்கள் உருவாகுவதாகவும் மருத்துவர்கள் கூறுகின்றனர்.


விவசாயத்துறையில் இன்று பழைமைக்குத் திரும்பிப் போதல் என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. விவசாயத்திணைக்களம் புதிய 2010 ஆம் ஆண்டில் உரப்பாவனையை 25% ஆல் குறைத்து இயற்கை பசளைப்பாவனையை கூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது.

பிரதேச செயலகங்களில் உதவிஅரசாங்க அதிபர் பிரிவுகளில் புற்று நோயாளர்களின் விவரங்களை கிராம சேவகர் பிரிவுகள் ரீதியாகப் பகுத்து ஆராய்கின்றபோது விவசாய முயற்சிகள் அதிகம் இடம்பெறும் பகுதிகளில் புற்றுநோயின் தாக்கம் கூடுதலாயிருப்பதை பொதுப் படையாகக் காணமுடிகின்றது.

இரசாயனம் பாவிக்காமல் மரக்கறிகளை உற்பத்தி ஆக்க முடியுமா என்ற வினா எம்முள் எழுகின்றது. ஆம் அது முடியுமென்ற முயற்சி ஒன்றும் எமது பிரதேசத்தில் நடந்தது.

ஆனால் உற்பத்திகளை வெற்றிகரமாகச் சந்தைப்படுத்த முடியாத நிலை காரணமாக திட்டம் தோல்வியில் தான் முடிந்தது.

சர்வதேச தன்னார்வத்தொண்டு நிறுவனமொன்று 05 வருடங்களுக்கு முன்பாக இரசாயனங்கள் பாவிக்காமல் மரக்கறிகளை உற்பத்தி செய்யும் திட்டமொன்றுக்கு விவசாயிகளுக்கு நிதியளித்தது. மரக்கறிகள் உற்பத்தி செய்யப்பட்டன. திருநெல்வேலிச் சந்தையில் இம் மரக்கறிகளை விற்பனை செய்யவென் இடமும் பெறப்பட்டது. இரசாயனம் பாவிக்கப்படாமல் விளைவிக்கப்பட்ட மரக்கறிகள் இங்கே விற்கப்படுகின்றது என்ற அறிவித்தல் பலகையும் போடப்பட்டது.



இரசாயனம் பாவிக்கப்பட்டு விளைவிக்கப்பட்ட மரக்கறிகளை விட இம் மரக்கறிகளின் விலை சற்றுக் கூடதலாயிருந்தது. இதனால் மரக்கறிகளை வாங்குவோர் இவர்களை விடுத்து ஏனைய விற்பனையாளர்களிடமிருந்து மரக்கறிகளை வாங்கினர்.

இரசாயனம் உபயோகிக்கப்படாத மரக்கறிகள் விற்கப்படுவது மிக்க குறைவாயிருந்தது. மிக விரைவிலேயே இவ் விற்பனைக் கூடம் மூடுவிழாக்கண்டது.

மூடுவிழாக் கண்ட மரக்கறி விற்பனைக் கடையில் பிழை இருப்பதாக எனக்குப் படவில்லை. இம்முயற்சியை முன்னெடுத்த அந்த சர்வதேசத் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில்தான் பிழை உள்ளது. ஏனெனில் அவர்கள் [illegible] நடைமுறைப்படுத்தும் அடி நிலையில் (Bottom level) அது வெற்றியடைய என்ன செய்யலாம் என சிந்திக்கவில்லை. நடைமுறைச் சாத்தியமாக்கும் போது அதன் நெளிவு சுழிவுகள் என்ன உள்ளதென்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவுமில்லை. அதனை சீர்திருத்த முற்படவுமில்லை.

திருநெல்வேலிச் சந்தையில் இரசாயனம் பாவிக்கப் படாத மரக்கறிகளின் விற்பனை நிலையமொன்றை திறந்தபோது அதன் சமூக நோக்கம் என்ன என்பதை சந்தைக்கு வரும் மக்கள் அறிந்து உணரக்கூடிய விழிப்புணர்வு எதனையுமே வழங்கவில்லை.

அருகாமையில் இருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்விசார், கல்விசாரா ஊழியர்கள் என குறைந்தது ஆயிரம் பேராவது இருந்திருப்பார்கள். அவர்களுக்கு இத்திட்டத்தின் நோக்கத்தைச் சமூக நன்மையை விளங்கப்படுத்தியிருந்தால் வருமான மட்டம் உயர்வான அவர்கள் இதற்கு நிச்சயம் கைகொடுத்திருப்பார்கள். திட்டம் வெற்றிபெற்றிருக்கும். காலப்போக்கில் ஒரு கடை, இரண்டு மூன்று நான்காகப் பெருகியிருக்கும்.

நாளடைவில் இத்திட்டம் மேன்மேலும் பல பிரதேசங்களுக்கும் பரவி விரவியிருக்கும்.

திட்டமிடல் மேல் மட்ட முகாமையினரால் அடிமட்டத்திலிருந்து பெறப்பட்ட கருத்துக்கள் மூலம் உள்வாங்கப்பட்டு செய்யப்படுமாக விருந்தால் வெற்றி கிடைத்திருக்கும். திட்டத்தின் நடைமுறைச் சாத்தியம் எவ்விதத்தில் உருவாக்கப்படலாம் என்ற கருத்து பெறப்பட்டால்தான் வெற்றியும் திட்டத்தின் நிலைத்திருக்கும் தன்மையும் உறுதிப்படுத்தப்படும்.

நடைமுறைச் சாத்தியங்கள் பற்றி எம்மில் பலரும் சிந்திக்காத தன்மை தான் எமது நாட்டின் அபிவிருத்தி பின்னடைவுகளுக்கும் காரணமெனலாம். திட்டங்களுக்கு நிதி செலவிடப்படுவது மட்டும் போதாது. அதை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கு உரிய வழிகள் நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும். அப்போதுதான் செய்யப்படும் திட்டங்கள் நிலைத்திருந்து வாழ்க்கைத் தர உயர்வையும் நாட்டின் அபிவிருத்தியையும் பெற்றுத்தரும்.

★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக J/185, J/186 பிரிவுகளின் கிராம அலுவலர் திரு. சி. சாந்தநாயகம் அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி ஆச்சிமுத்து சிங்கநாயகம்**

அவர்களது மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(93222)

நலன்புரிச்சங்கம், பிரதேசசெயலகம், வலி. தெற்கு, உடுவில்.

பிரதேச செயலரும் அனைத்து அலுவலர்களும்.


## நெடுந்தீவுக்கான சேவையை அதிகரிக்குமாறு கோரிக்கை

நெடுந்தீவுக்கான அரசபடகுச்சேவையை தினசரி மூன்று தடவைகள் நடத்துமாறு நெடுந்தீவு மக்கள் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரிடம் கோரியுள்ளனர். இது தொடர்பாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் என். திருலிங்கநாதன் உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என பொது மக்களிடம் தெரிவித்தார். (1-111)

## தேர்தல் அதிகாரிகளுக்கு பயிற்சி வகுப்பு

ஜனாதிபதித் தேர்தலில் கடமையாற்றவுள்ள கனிஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகஸ்தர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் நாளை செவ்வாய்க்கிழமை யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் 4 கட்டங்களாக நடைபெறுமென யாழ். அரசஅதிபர் கணேஷ் அறிவித்துள்ளார். (1-207)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 13.12.1925

மறைவு: 27.12.2007

**அமரர் நல்லதம்பி சுப்பிரமணியம்**

திதி: சங்கடகர சதுர்த்தி (04.01.2010)

எங்கள் நெஞ்சங்களில் அணையாத
தீபமாய் ஒளிர்ந்து கொண்டிருக்கும்
எங்கள் அன்புத் தந்தையே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

இணுவில் மேற்கு, இணுவில். (93219) குடும்பத்தினர்.



மஹஜன சம்பத
மஹஜன சம்பத
Mahajana Sampatha

01.01.2010

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2194

வெற்றி எழுத்து: U வெற்றி எண்கள்: 7 5 5 2 0 4

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | U | 7 | 5 | 5 | 2 | 0 | 4 | ரூபா. 11,529,936/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 7 | 5 | 5 | 2 | 0 | 4 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | | 5 | 5 | 2 | 0 | 4 | ரூபா. 100,000/= | பரிசுகள் 13 |
| 3 பரிசுகள் | | | | 5 | 2 | 0 | 4 | ரூபா. 10,000/= | பரிசுகள் 131 |
| 4 பரிசுகள் | | | | | 2 | 0 | 4 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1382 |
| 5 பரிசுகள் | | | | | | 0 | 4 | ரூபா. 100/= | பரிசுகள் 13562 |
| 6 பரிசுகள் | | | | | | | 4 | ரூபா. 20/= | பரிசுகள் 133795 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 7 | 5 | 5 | 2 | 0 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 17 |
| 8 பரிசுகள் | | 7 | 5 | 5 | 2 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 135 |
| 9 பரிசுகள் | | 7 | 5 | 5 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1347 |
| 10 பரிசுகள் | | 7 | 5 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13397 |
| 11 பரிசுகள் | U | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 53621 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 14,206,070.00

அடுத்த சீட்டிழுப்பிலான சுப்பர் பரிசு Rs. 11,789,886.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
23/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk



## பதவி வெற்றிடம் /Vacancy

**1. Office Staff**

*(Qualification : G.C.E. (O/L) & A/L, Computer Knowledge)*

**2. Office Boy** (சுத்தப்படுத்துபவர்/ உதவியாளர்)

நேர்முகத் தேர்விற்கு 5 ஆம் திகதி நேரில் வரவும்
நேரம் : 11.00 a.m - 3.00 p.m வரை.

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
*No. 15, second floor, Sirambiyadi Lane,*
*(off Stanly Road)* (கொசி ஹோட்டலுக்கு மேல்)
*Jaffna.*
*Tel No : 021 2224550*



# நீங்கா நினைவில் ஆண்டு ஒன்று




## அமரர் நல்லையா தவகுலசிங்கம் (தவம்)

(முன்னாள் ஊழியர், சிமெந்துக் கூட்டுத்தாபனம், இயந்திரப் பராமரிப்புப் பகுதி
உரிமையாளர் - தவம் அக்ரோ இயந்திரவியல் தொழிலகம், கோண்டாவில்)

திதி; அபரபக்க சதுர்த்தசி (04.01.2010)

வையக வாழ்வை நீத்து வானுறை தெய்வமாகி
பையவே ஆண்டு ஒன்று பாரினில் கழிந்ததப்பா!
கையறு நிலைமை எய்திக் கடுந்துயர் அடைந்தபோதும்
செய்திடும் அறங்கள் ஆற்றித் தினம் தினம்
நினைவு கூர்வோம்.

வருடம் ஒன்று சென்றது அப்பா
ஆறவில்லை எம்துயரம்
அன்புடன் எம்மைக் காத்து அறிவுரைகள் பல கூறி
பண்புடன் எமை வளர்த்து பாரினில் உயரவைத்தீர்
ஆயிரம் உறவுகள் இருந்தும் என்ன
அப்பா உங்கள் அன்பைப் போல் வருமா?
கண்ணீரில் நாம் தோய எமைப்பிரிந்தெங்கு சென்றீர்
எந்நாளும் உங்கள் நினைவை இதயத்தில்
சுமந்திருப்போம்.

மாசியப்புல வீதி,
ஏழாலை வடக்கு, ஏழாலை.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீராத விளையாட்டு திவாரி......!

**ஆந்திர முதல்வராகவிருந்த என்.டி.திவாரியின் பாலியல்கள் லீலைகள் பற்றிய விவகாரம் ஆந்திரத்தை ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருக்கின்றது. அது பற்றிய ஓர் அலசல் இது...**

'தீராத விளையாட்டு திவாரி!' என்று ஆரம்பிப்பதுதான் இந்தக் கட்டுரைக்கு மெத்தப் பொருத்தமாக இருக்கும்.அந்த அளவுக்கு தன் அஜால் குஜால் வேலைகளால் ஆந்திராவை அலற விட்டிருக்கிறார் அந்த மாநில ஆளுநர் என்.டி.திவாரி. 'எண்பத்தாறு வயதிலேயே மனிதர் இந்தப் போடு போட்டிருக்கிறாரே? இருபத்தாறு வயதில் இவர் எப்படி இருந்திருப்பார்?'என்ற ஆச்சரியத்தால் திறந்த வாயை இன்னும் மூடவில்லை பலர்.

தெலுங்கானா பிரச்சினையில் ஆந்திரா ஏற்கெனவே அமளிதுமளிப்பட்டுக் கொண்டிருக்கும் நேரம், 'ஒரு த்ரில்லர் திரைப்படத்தில் ஆக்க்ஷன், அடிதடி மட்டுமே இருந்தால் எப்படி? ஒரு சேஞ்சுக்கு சில 'ஒருமாதிரி' காட்சிகளும் வேண்டாமா?' என விதி நினைத்ததோ என்னவோ, என்.டி.திவாரியின் இன்ப லீலை காட்சிகள் வெளிவந்து ஆந்திரா இப்போது சிரிப்பாய்ச் சிரித்துக் கொண்டிருக்கிறது.

கடந்த 25ஆம்தேதி! கிறிஸ்மஸ் நாளும் அதுவுமாக, 'அமோதா பிராட்காஸ்டிங் நெட்ஒர்க்' என்பதன் சுருக்கமான 'ஏ.பி.என்.ஆந்திரஜோதி' என்ற தொலைக்காட்சி நிறுவனம், ஆளுநர் திவாரி பல பெண்களுடன் கில்மா பண்ணும் காட்சிகளை ஆதாரத்தோடு வெளியிட்டு அவரது சுயரூபத்தை தோலுரித்துக் காட்டிவிட்டது. உலகத் தொலைக் காட்சி வரலாற்றில், ஆளுநர் ஒருவரின் உல்லாச சல்லாபக் காட்சிகள் இப்படி ஒரு மணிநேரம் ஒளிபரப்பப்பட்டது, இதுவே முதல்முறை. அந்த டி.வி. சேனலுக்குச் சொந்தமான ஆந்திர ஜோதி காலை நாளிதழிலும் அந்தக் கண்கொள்ளாக் காட்சிகள் வெளிவந்ததுதான் விசேஷம்.

உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த பழுத்த, மூத்த அரசியல்வாதி திவாரி. 2007ஆம் ஆண்டு ஆந்திராவின் ஆளுநரானவர். இவர் தொடர்பான அந்த வீடியோ காட்சிகள் அந்தக் குறிப்பிட்ட சேனலுக்கு மட்டும் எப்படிக் கிடைத்தது? அதன் நம்பகத்தன்மை என்ன? ஆந்திராவைச் சேர்ந்த முக்கிய புள்ளி ஒருவரிடம் இதுபற்றி கிண்டிக் கிளறினோம்.

''தெலுங்கானா காரணமாக ஆந்திரா கடந்த ஒரு மாத காலமாகவே ஆர்ப்பாட்டம், 'பந்த்' என்று அதன் இயல்பு வாழ்க்கையை இழந்துவிட்டது. இந்தப் பிரச்சினைக்கு மத்திய அரசு முடிந்த அளவு விரைவாக முடிவு கட்ட முயன்றபோது, திவாரி அதில் அதிக அக்கறை செலுத்தவில்லை. ஆந்திரத்தில் என்ன நடக்கிறது என்று குடியரசுத் தலைவருக்கு அறிக்கை சமர்ப்பிப்பதில் கூட திவாரி தாமதம் செய்தார் எனத் தகவல்.

இதனால் எரிச்சலின் உச்சத்துக்குப் போன மேலிடம் திவாரியை இராஜினாமா செய்ய வற்புறுத்தியது. திவாரியோ இதற்கு இசையவில்லை. திவாரி ஏற்கெனவே ஒரு 'ஷோக் பேர்வழி' என்பதால், அதற்கான ஆதாரம் எதையாவது உடனே திரட்டி அவரை வீட்டுக்கு அனுப்ப டெல்லி திட்டமிட்டது. அதன்படிதான் திவாரி தொடர்பான 'அந்த' காட்சிகள் திரட்டப்பட்டு, தனியார் சேனலுக்குத் தரப்பட்டது'' என்றார் அந்தப் புள்ளி.

''அதெல்லாம் இல்லை. உண்மையிலேயே ஆளுநர் திவாரி பெண்களோடு உல்லாசமாக இருக்கும் காட்சிகள் வெளிவர ஒரு பெண் தொழிலதிபரே காரணம். அவரது பெயர் ராதிகா என்று ஏ.பி.என். ஆந்திர ஜோதி நெட் ஒர்க் டி.வி. கூட ஒளிபரப்பியிருக்கிறது'' என்கிறார்கள் இன்னும் சிலர்.

பொதுவாக மற்ற செய்தி நிறுவனங்களுக்குக் கிடைக்காத பிரத்தியேகச் செய்தி

**- டி.பா.சேகராஜ் -**

களை 'எக்ஸ்க்ளூசிவ்' என்று வெளியிடுவார்கள். ஆனால் 'எக்ஸ்புளோசிவ்' என்று குறிப்பிடத்தக்க அளவில் வெடிகுண்டாக வெடித்திருக்கும் இந்தக் காட்சிகள் எப்படி ஆந்திர ஜோதிக்குக் கிடைத்தன? அந்த நிறுவனத்தின் முக்கிய நிர்வாகி ஒருவரிடம் இந்தக் கேள்வியை முன் வைத்தோம். முதலில் அதைப்பற்றி எதுவும் சொல்லாமல் முன்கதைச் சுருக்கத்துடன் விளக்கினார் அவர்.

''கடந்த கிறிஸ்மஸ் அன்று எங்கள் ஆந்திர ஜோதி நாளிதழில் முதல் பக்கத்தில், 'கவர்னரின் ராஜ லீலைகள் இன்று காலை ஏ.பி.என். ஆந்திர ஜோதி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிறது. காணத்தவறாதீர்கள்!' என்று விளம்பரம் செய்திருந்தோம். ஆனால் நேரத்தைக் குறிப்பிடவில்லை. அன்று காலை எங்கள் பேப்பர் விற்பனைக்கு வெளிவந்ததுமே எதிர்பார்த்தது போல ஏக பரபரப்பு. காலை ஆறு மணி முதலே ஆந்திரப் பொதுமக்களும், அரசியல் பிரமுகர்களும் தொலைக்காட்சியின் முன்பாக அமர்ந்து எப்போது அந்தக் காட்சி ஒளிபரப்பாகும் என்று ஆவலோடு காத்திருந்தனர்.

அதேவேளையில் ஆந்திர ராஜ்பவனில் எக்கச்சக்கப் பதற்றம். இந்த நேரத்தில் எங்கள் தொலைக்காட்சி சேனலில், 'கவர்னரின் ராஜலீலைகள் பற்றிய வீடியோ ஆதாரக் காட்சிகள் காலை ஏழரை மணிக்கு ஒளிபரப்பாகும்' என்று ஸ்க்ரோல் ஓட விட்டோம். அதில் பரபரப்பு மேலும் பந்தி போட்டுக் கொண்டது'' என்ற அவரிடம், 'அந்த வீடியோ காட்சிகள் எப்படிக் கிடைத்தது?' என்று கிளறினோம். விரிவாக விளக்கத் தொடங்கினார் அவர்.



''என்.டி.திவாரி உத்தரப்பிரதேச முதல்வராக இருந்தபோது, கல்குவாரி நடத்தும் ராதிகா என்ற ஒரு பெண் தொழிலதிபருக்கும் அவருக்கும் நட்பு இருந்திருக்கிறது. குவாரி தொடர்பாக திவாரியிடம் நிறைய உதவிகளை அந்தப்பெண் பெற்றிருக்கிறார். திவாரி, ஆந்திர ஆளுநராக மாறிய பிறகு, ஆந்திராவின் கடப்பா போன்ற பகுதிகளில் குவாரிகள் நடத்த ராதிகா உதவி கேட்டிருக்கிறார். அதற்காக திவாரிக்கு அவர் பல பெண்களை சப்ளை செய்திருக்கிறார். அப்படி சப்ளை செய்யப்பட்ட பெண்கள் அனைவருமே உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

'உத்தரப்பிரதேச அரசில் வேலை வாங்கித் தரப்படும்' என்று சொல்லித்தான் பல பெண்கள் திவாரிக்குத் தின்பண்டமாக அனுப்பப்பட்டிருக்கிறார்கள். திவாரிக்கு இப்படி பெண்கள் சப்ளையாகும் விஷயம் ஆந்திர ராஜ்பவன் வட்டாரம் முழுவதற்குமே தெரிந்திருக்கிறது. அந்தநிலையில், ராஜ்பவன் அதிகாரியான அரவிந்த் சர்மா என்பவரும் சபலப்பட்டு, 'எனக்கும் பெண்களைக் கொடு!' என்று ராதிகாவிடம் கேட்டுத் தொல்லை கொடுத்திருக்கிறார். ஆகவே, அவருக்கும் சப்ளை நடந்திருக்கிறது. கூடுதலாக அவருக்கு கோடிக்கணக்கில் பணமும் அழுதிருக்கிறார் அந்தப் பெண் தொழிலதிபர்.

இந்த நிலையில், திவாரி கடைசிவரை குவாரி குத்தகை எதையும் அந்தப் பெண் தொழிலதிபருக்குப் பெற்றுத் தரவே இல்லை. பெண்களை அனுப்பி, பணத்தையும் கொட்டிக் கொடுத்தபிறகும் தனக்கு குவாரி குத்தகை கிடைக்காமல் போகவே கோபத்தின் உச்சத்துக்குப் போய்விட்டார், அந்தப் பெண் தொழிலதிபர். 'இனிமேலும் சும்மா இருந்தால் வேலைக்கு ஆகாது' என்று முடிவெடுத்த அவர், அதன்பிறகு சில பெண்களை கவர்னர் மாளிகைக்குள் அனுப்பி வைத்து, திவாரியுடன் அவர்கள் உல்லாசமாக இருந்தபோது அவற்றை ரகசிய கேமரா மூலமாகப் பதிவு செய்திருக்கிறார். பதிவு செய்தவற்றை டவுன்லோடு செய்து நான்கு சி.டி.க்களில் ரைட் செய்து வைத்துக்கொண்டு கடந்த மாதம் அவீர் தொலைபேசியில் எங்களிடம் பேசினார்.

'கவர்னர் திவாரி பல பெண்களுடன் படுக்கையைப் பகிர்ந்து கொள்ளும் காட்சிகள் என்னிடம் இருக்கின்றன. அதை உங்கள் சேனலில் ஒளிபரப்புவீர்களா?' என்று எங்களிடம் கேட்டார். யாரோ ஒரு லூசுப் பெண் பேசுகிறார் என்று நினைத்து ஆரம்பத்தில் நாங்கள் அதை அலட்சியம் செய்தோம். ஆனால் அடுத்தடுத்து அந்தப் பெண் மீண்டும் மீண்டும் எங்கள் அலுவலகத்தைத் தொடர்பு கொண்டார். அப்போதும் நாங்கள் நம்பத் தயாராக இல்லை. 'அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? கவர்னர் மாளிகையில் யாரையெல்லாம் உங்களுக்குத் தெரியும்?' என்று கேள்வி எழுப்பினோம்.

அப்போது அந்தப் பெண் ராதிகா, ராஜ்பவனில் உள்ள உயர்பாதுகாப்பு அதிகாரியின் செல்போன் எண் உட்பட கவர்னர் வீட்டு சமையல் பெண் மற்றும் துப்புரவுப் பணியாளர்களின் பெயர்கள் வரைக்கும் சொன்னார். அதை செக் செய்து சரிதான் என்று தெரிந்ததும் நாங்கள் ஆச்சரியமடைந்தோம். அப்போது அந்த ராதிகா, 'நீங்கள் என்னை நம்பவில்லையென்றால் இன்னொரு வேலையும் செய்கிறேன். கவர்னரின் பர்சனல் காரை எடுத்துக்கொண்டு வெளியில் வருகிறேன். அப்போதாவது நம்புவீர்களா?' என்றார். அதன்படியே கவர்னரின் காரில் அந்தப் பெண், சார்மினார் வரை வந்து பொருள்கள் வாங்கிவிட்டு, மீண்டும் ராஜ்பவன் போய்ச் சேர்ந்தார். அப்போதும் கூட நாங்கள் நம்பவில்லை. 'திவாரியின் பர்சனல் கார் நம்பரை இவர் வேறு காரில் பொருத்திக்கொண்டு வந்திருப்பாரோ?' என்று சந்தேகப்பட்டோம்.

அதன்பிறகு அந்தப் பெண், 'உங்களில் யாராவது ஒருவர் கவர்னர் மாளிகைக்கு என்னுடன் வாருங்கள்' என்றார். அதன்படி நிறுவன ஊழியர் ஒருவரை அவருடன் அனுப்பினோம். என்ன ஆச்சரியம்? அனைத்து அதிகாரங் களையும் படைத்தவர் போல ராதிகா, ஆளுநர் மாளிகையின் சமையல்கட்டு, படுக்கையறை வரை எங்கள் ஊழியருக்கு சர்வசுதந்திரமாகச் சுற்றிக் காட்டினார். அப்படிச் சுற்றும்போது ஆளுநர் அலுவலகத்துக்குப் பக்கத்திலேயே உள்ள ரகசிய படுக்கை அறை ஒன்றையும் அவர் தவறாமல் காட்டினார். இதற்கு மேலும் அவரை நாங்கள் சந்தேகப்பட முடியாத நிலையில், அவரிடம் இருந்த அந்த சி.டி.யைப் பெற்றுக் கொண்டோம்.

அதைப் போட்டுப் பார்த்தபோது அதிர்ந்து போனோம். அதன்பிறகே, 'மேற்படி காட்சிகள் சேனலில் ஒளிபரப்பாகும்!' என்று பேப்பரில் விளம்பரம் செய்தோம். சேனலில் ஸ்க்ரோலிங் போட்டோம். உடனே எங்கள் ஐதராபாத் அலுவலகத்துக்கு ஐ.ஜி. எ.கே.சர்மா உள்பட உயர் போலீஸ் அதிகாரிகள் நேரில் வந்துவிட்டனர். 'எந்த மாதிரியான காட்சிகளை வெளியிடப்போகிறீர்கள்?' என்று அவர்கள் கேட்டபோது நாங்கள் சொல்ல மறுத்துவிட்டோம். அதோடு ஆந்திர முதல்வர், சில அமைச்சர்கள், சில மத்திய அமைச்சர்கள் கூட தொலைபேசியில் எங்களைத் தொடர்புகொண்டு, 'கவர்னர் தொடர்பான காட்சிகளை தொலைக்காட்சியில் ஒளிபரப்ப வேண்டாம்' என்று கேட்டுக் கொண்டார்கள்.

இதனால் குறிப்பிட்டபடி ஏழரை மணிக்கு அந்தக் காட்சிகளை ஒளிபரப்ப முடியவில்லை. இருப்பினும் காலை பத்து மணிக்கு அதை ஒளி பரப்பினோம். அதில் கவர்னர் திவாரி, நான்கு பெண்களுடன் உல்லாசமாக இருப்பது, முத்தம் கொடுப்பது, அவருக்கு மசாஜ் நடப்பது போன்ற காட்சி கள் கிட்டத்தட்ட ஒரு மணிநேரம் ஒளி பரப்பாயின.

அப்போதுதான் உயர்நீதிமன்ற தடையுத்தரவு வந்து சேர்ந்தது. அதையடுத்து, திவாரியின் ராஜ லீலை காட்சி ஒளிபரப்பை நிறுத்திவிட்டோம். எங்களுடைய எம்.டி. ஆர்.ராதாகிருஷ்ணா தொலைக்காட்சியில் தோன்றி கவர்னர் பற்றிய காட்சிகளைத் தொடர்ந்து ஒளிபரப்ப முடியாமல் போனதற்காக நேயர்களிடம் வருத்தம் தெரிவித்துக்கொண்டார். அந்தக் காட்சிகளை ஒளிபரப்ப ஆந்திர உயர்நீதிமன்றம் விதித்த தடையை நீக்கக் கோரி மனு தாக்கல் செய்தோம். அந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் அனில் ராஜேஷ் மற்றும் நாகர்ஜுனா ரெட்டி ஆகியோர் விசாரணையை வருகிற 30ஆம் திகதிக்கு ஒத்தி வைத்து உத்தரவிட்டுள்ளனர். இந்த நிலையில் 'டி.வி.யில் ஒளிபரப்பத்தானே தடை? பிரிண்ட் மீடியாவுக்கு நீதிமன்றம் தடை விதிக்கவில்லையே' என்பதால் எங்கள் 'ஆந்திரஜோதி' பத்திரிகையில் ஆளுநரின் அந்தரங்க லீலைகளை படங்களாகப் புட்டுப் புட்டு வைத்தோம். - என்ற அந்த நிர்வாகி, திவாரியின் தீராத விளையாட்டுகள் தொடர்பான பல தகவல்களை நம்மிடம் பகிர்ந்தார்.

**'என்னை சுகப்படுத்து.... நீயும் சுகப்படு!' இதுவே அவரது தாரக – தாராள – மந்திரம்**

என்.டி.திவாரியின் மனைவி பெயர் சுசிலா சர்மா. இவர் கடந்த 84ஆம் ஆண்டு உடல் நலக்குறைவால் அமெரிக்க மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது அங்கு சென்றிருந்த திவாரி, அந்த மருத்துவமனையில் உள்ள நர்ஸுகளிடம் சில்மிஷம் செய்திருக்கிறார்.

அதற்குப் பின்னர் இவர் 'கீப்' ஒருவரை செட் பண்ண, அது இவரது மனைவிக்குத் தெரிய வந்து அந்த 'சைடு' பெண்ணை அடித்து கால்கையையெல்லாம் உடைத்த சம்பவம் நடந்திருக்கிறது. அந்த சைடு பெண்ணுக்குப் பிறந்த ஒருவர், 'திவாரிதான் என் தந்தை' என்று கோர்ட்டுக்குப் போய் இப்போது அந்த வழக்கு நிலுவையில் உள்ளது.

அதேபோல் காங்கிரஸ் கட்சியின் மாநாடு ஒன்று வெலிங்டனில் நடந்தபோது, அதில் கலந்துகொள்ள சைடு செட்டப்போடு சென்றிருக்கிறார் திவாரி. காலையில் காங்கிரஸ் மாநாட்டுக்கு முகமெல்லாம் வீங்கிய நிலையில் அவர் வந்தபோது, பலருக்கு அதிர்ச்சி. என்ன ஏது என்று விசாரித்த போதுதான் உண்மை தெரிந்திருக்கிறது. செட்டப்போடு வெலிங்டனுக்கு வந்த திவாரி, அங்கே இன்னொரு பெண்ணையும் செட்டப் செய்து அனுபவித்துக் கொண்டிருந்திருக்கிறார். அதை முதல் செட்டப் பார்த்து செமசாத்து சாத்தியதில்தான் திவாரிக்கு அந்த முகவீக்கம்.

பி.வி.நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது அவருக்கும் திவாரிக்கும் அவ்வளவாக ஆகாது. இந்த நிலையில், திவாரி திடீரென்று ஒருநாள் காணாமல் போனார். நரசிம்மராவ்தான் அவரைக் கடத்திவிட்டார் எனப் பரபரப்பு கிளம்பிய நிலையில், நரசிம்மராவிடமே இந்தப் பிரச்சினை போனது. 'திவாரியைக் காணவில்லையா? அவர் வேறெங்கும் போயிருக்க மாட்டார். டில்லியில் இருந்து உத்தரப்பிரதேசம் போகிற வழியில் கஜ்வாலா என்ற இடத்தில் பிர்லாவுக்குச் சொந்தமான பெரிய கெஸ்ட் ஹவுஸ் இருக்கிறது. அங்கே போய்ப் பாருங்கள். திவாரி அங்கு உல்லாசமாக இருப்பார்' என்று நரசிம்மராவ் சொல்ல, அது உண்மைதான் என்பது பின்னர் தெரிய வந்தது.

'திவாரியைப் பொறுத்தவரை, ஒரு பெண்ணோடு அவரிடம் போனால் எந்தக் காரியமும் நடக்கும்' என்ற கருத்து டெல்லி அரசியல் புள்ளிகள் மத்தியில் உள்ளது. அப்படி இவர் கைபட்டு பலர் முன்னேறியிருக்கிறார்கள் எனச் சொல்கின்றனர். 'என்னை சுகப்படுத்து... நீயும் சுகப்படு!' என்பதுதான் திவாரியின் தாரக மந்திரம் என்று சொல்கிறார்கள்.

உத்தரப்பிரதேசத்தில் இருந்து பிரிந்த உத்தரகண்ட் மாநிலத்துக்கு திவாரி முதலமைச்சராக இருந்தபோது 23 வயதுடைய ஒரு பெண்ணை செட்டப் செய்திருக்கிறார். அந்தப் பெண்ணின் பெயர் சாரிகா பிரதான்.



நேபாளியான அந்த இளம்பெண்ணுக்கு உத்ராகண்ட் மாநில அமைச்சரவையில் அமைச்சர் அந்தஸ்தை திவாரி ஏற்படுத்திக் கொடுத்து விட்டார் என்றால் பார்த்துக் கொள் ளுங்கள்.

'உட்கார்ந்தால் பெண் வேண்டும், வாக்கிங் போனால் பெண் வேண்டும்' என்று அந்த கிழம் சக்கைப் போடு போட்டிருக்கிறது. ஒருதடவை திவாரி எதிரில் பெண்கள் வந்தேமாதரம் பாடிய போது, பாடியவர்களில் ஒரு பெண் பார்க்க லட்சணமாக இருக்க, திவாரி அந்தப் பெண்ணை உடனே தனது படுக்கைக்குக் கொண்டு போயிருக்கிறார்.

திவாரியின் இதுபோன்ற லீலைகளை உத்தர கண்டைச் சேர்ந்த கவிஞர் ஒருவர் சி.டியாகவே வெளியிட்டு கோடீஸ்வரராகி விட்டார். அவரது பெயர் நரேந்திர சிங் நேகி. திவாரி தொடர்பாக அவர் வெளியிட்ட ஆல்பத்தின் பெயர் 'நல் சாமி நாராயண்.' (கிருஷ்ண லீலைகள் என்பது மாதிரி அர்த்தமாம்) இந்த சி.டி. விற்பனையில் சக்கைப் போடு போட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் எத்தனையோ இன்ப ஆறுகளைக் கடந்து வந்தும், பெரிதாக எந்தச் சுழலிலும் சிக்காத திவாரி, இந்தப் பெண் தொழிலதிபரால் இப்போது தோலுரிக்கப்பட்டுவிட்டார். இப்போது திவாரிக்கு மாற்றாக சட்டீஸ்கர் மாநில ஆளுநர் ஈ.எஸ்.எல். நரசிம்மம் ஆந்திர ஆளுநர் பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளார். உயரிய பதவியில் இருந்த திவாரி, மக்கள் மனதில் களங்கத்தை ஏற்படுத்துகிற விதமாக நடந்துகொண்டிருப்பதை மன்னிக்கக் கூடாது! அவரையும் அவரது கூட்டாளியாக இருந்தவர்களையும் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். அவருக்கு இனிமேல் எந்தப் பதவியையும் தரக் கூடாது என்று ஆந்திர மக்களும் அமைப்புகளும் கோரிக்கை வைத்திருக்கின்றனர். என்ன நடக்கிறது என்பதை உன்னிப்பாகப் பார்க்கலாம் - என்றார் அந்த நிர்வாகி.

தனது 17ஆவது வயதில் சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்ட திவாரி, 1963ஆம் ஆண்டு காங்கிரஸில் இணைந்தார். அதற்குப் பின்னர் நேஷனல் ஹெரால்டு என்கிற பத்திரிகையில் இவர் நிருபராகவும் பணியாற்றி இருக்கிறார். பின்னர் 65ஆம் ஆண்டு இளைஞர் காங்கிரஸின் முக்கியத் தலைவராகவும் இவர் இருந்து, மறைந்த சஞ்சய்காந்தியின் 'குட் புக்கிலும்' இடம் பெற்றிருக்கிறார். அதன் பின்னர் உத்தரப்பிரதேசத்திலும், உத்தரகண்டிலும் முதல்வராக இருந்து, அதற்குப் பின்னரே ஆந்திர கவர்னராக அமர வைக்கப்பட்டார். இப்படி எல்லாம் இருந்தவர் தற்போது தர்மஅடி ரேஞ்சுக்கு வசைகளை வாங்கிக் கொண்டு பறந்து விட்டார்.

திவாரி இப்போது அவர் பிறந்த இடத்துக்கு சவாரி போய்விட்டாலும் அவர் பற்ற வைத்திருக்கும் பரபரப்பு அடங்க நாளாகும்.

நன்றி: 'குமுதம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராஜா கிறீம் ஹவுஸ்

எமது ஸ்தாபனம் 35 வருடங்களை நிறைவு செய்து 36 ஆவது வருடத்தில் கால்பதிக்கும் இந்நேரத்தில் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக.

எமது கிளை நிறுவனமான ராஜா கிறீம் ஹவுஸ் & ஹோட்டல் மீண்டும் புதுப்பொலிவுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.



காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு என்பவற்றை அறுசுவையுடன் உண்டு மகிழ்ந்திட நாடவேண்டிய ஸ்தாபனம்

**ராஜா கிறீம் ஹவுஸ் & ஹோட்டல்**
46 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




## பொ.ஜ.முன்னணியின் அலுவலகம் வரணியில் திறப்பு

தென்மராட்சி கிழக்கு,ஜன.4

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் கால நடவடிக்கைக்காக வரணி பிரதேசத்தில் காரியாலயம் ஒன்று கடந்த புதன் கிழமை திறந்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி செயலக தேர்தல் நடவடிக்கைகள் பொறுப்பாளர் விக்கிரம யாழ்.மாவட்ட பொது ஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் எஸ்.தங்கராசா மற்றும் முன்னணிப் பிரமுகர்களான கிரிதரன், எஸ்.இராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (1-122)

## தவறி வீழ்ந்து குழந்தை காயம்

யாழ்ப்பாணம்,ஜன.4

தொட்டிலிலிருந்து தவறி வீழ்ந்த குழந்தையின் கழுத்தினை பஞ்சாயுதம் வெட்டிக் காயப் படுத்தியது.

இச் சம்பவம் கடந்த வியாழக் கிழமை மீசாலையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ரேணுகன் (வயது 2) என்னும் பாலகன் கழுத்தில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை சிகிச்சை பெற்று வருகிறார். (201-207)


# லீலா

பஞ்சாங்க சித்திரக் கலண்டர் டயறிகள்

சித்திரங்களுடனும் இருவர்ணங்களில் அச்சிடப்பட்டு வெளிவந்து இலங்கையிலும் வெளிநாட்டிலும் துரிதமாக விற்பனையாகின்றன

இதுவரை கிடைக்காத அன்பர்கள், வியாபாரிகள், பாவனையாளர்கள், இன்றே கேட்டுப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

எங்கும் கிடைக்கும் ஒரேயொரு சித்திரக் கலண்டர்

**2010 லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்**

தயாரிப்பாளர்கள் :
**லீலா பிறஸ் பிரைவேட் லிமிட்டட்**
இல. 400, கே. சிறில். சீ பெரேரா மாவத்தை, கொழும்பு - 13.
தொலைபேசி : 2325930, 2325933 பக்ஸ் : 2446077



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1153 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கடகம் 03 37 44 54

01-01-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 2,966,850/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 206,120 | 20/- | 4,122,400/- |
| 2 இலக்கங்கள் | 18,886 | 40/- | 755,440/- |
| 1 இல. + லக்கினம் | 18,780 | 60/- | 1,126,800/- |
| 2 இல. + லக்கினம் | 1,726 | 200/- | 345,200/- |
| 3 இலக்கங்கள் | 514 | 1000/- | 514,000/- |
| 3 இல. + லக்கினம் | 41 | 10,000/- | 410,000/- |
| 4 இலக்கங்கள் | 1 | 200,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,966,850/- | - |
| மொத்தம் | | | 7,473,840/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 246,073 | | 7,973,840/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,887,800/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காக வெற்றியாளர் : பீ.சஜித் தர்ஷன பெர்னாந்து வத்தளை

கைத்தொலைபேசி வெற்றியாளர்: ஏ.எம்.அனுஷிகா குமாரி வீரவில

2010 ஜனவரி 05 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| குருநாகல் | 500840940-3-12 |
| புத்தளம் | 500850275-7-32 |
| பதுளை | 500843084-1-09 |
| பொலன்னறுவை | 500844975-2-46 |
| அம்பாறை | 500848462-2-23 |


# நீங்கா நினைவலைகள்

## 5 ஆம் ஆண்டு

அன்னை மடியில் 14 - 10 - 1931



ஆண்டவன் அடியில் 30 - 12 - 2004

### திருமதி சிவபாக்கியம் சரவணமுத்து
(இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர்)

எம் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
உயிர் மூச்சே!
எம் இதயத் தெய்வமே!
எம்மை இதயத் தெய்வமே!
ஐந்தாண்டுகள் ஆகிவிட்டதம்மா
உம் நினைவலைகள் எம்மைவிட்டு
அகலாது என்றும் உம் பிரிவால் துயரும்

(92065)

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 108 ஆம் நாள்

அன்னை மடியில் 07 - 10 - 1981



ஆண்டவன் அடியில் 19 - 09 - 2009

### இரவி பிரசாத்
(தொலைத் தொடர்பு முன்னாள் உத்தியோகத்தர்)

எம் குடும்ப விளக்கே! மூத்தமகனே பிரசாத் நீ!
எம் இல்லம் நீங்கி பிறமண்ணில்
கால்பதித்தாய் 19ஆம் நாளில்
எம்மைவிட்டு காலனின் காலில் கிடந்தாய் 19ஆம் நாளில்
எம்பொருட்டு வேலை செய்தாய் 9ஆம் மாதத்தில் 19 நாள்கள்
எம் இல்லம் திரும்பினாய் 10ஆம் மாதம் 19ஆம் நாள்
எம் உள்ளம் உடைய உனது உடலை
எம்முன் நீட்டினாய் உனது 28ஆவது
பிறந்தநாளாம் 07.10.2009இல்
எம் இதயங்கள் இடிந்தன இதுதான் விதியா?
உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

தகவல்: Lion செ.சரவணமுத்து J.P. கச்சாய் வீதி, கொடிகாமம்.

உனது அம்மா, அப்பா, அம்மப்பா.

# 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### வல்லிபுரம் இராசமணி
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

தோற்றம்: 27-03-1924
மறைவு: 13.01.1993

திதி: 04.01.2010

ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறிடுமோ எம் நெஞ்சம்

126/4, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (91972)

குடும்பத்தினர்.

# எழுமையும் எம்மனங்களில் சங்கமிக்கும் ஏழாம் ஆண்டு நினைவலைகளாக...

வான் ஒளி நிலவே போலும்
மனம் மொழி மெய்யன்பாகத்
தூய நின் வாழ்க்கைப் பாடம்
தொடர்ந்தும் எம் மனதில் வாழும்
ஆண்டுகள் ஏழோ? - அம்மா!
அருமருந் தன்ன எங்கள்
தாயுமை உள்ளத் தென்றும்
தாங்கி நாம் வாழ்வோம் அம்மா!



அமரர்
### தம்பிப்பிள்ளை இராசமணி

கல்வியே வாழ்வின் நல்ல
கலங்கரை விளக்கம் என்றிறும்
உள்ளமும் நலமே யாக
ஊர்நலம் சிறந்து ஓங்கும்
சிந்தையும் செயலுமாகச்
சிறந்து நாம் வாழும் மார்க்கம்
தந்தெம்மை வாழ்த்தும் அன்புத்
தாயே! நின் நாமம் வாழும்!

"முருகன் இல்லம்"
பழைய வீதி,
கோப்பாய் தெற்கு.

- குடும்பத்தினர் -
04.01.2010

- கல்விச் சமூகத்தினர் -
The Express Institute
Irupalai, Kopay.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

**2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனை புரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களது கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்த உள்ளான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.**



## சியாமளா அன்ரன் ஆனந்தநாதன்

யாழ்.இந்து மகளிர் கல்லூரி

வர்த்தகப்பிரிவு - 2ஏபி மாவட்ட நிலை - 57

நான் எனது ஆரம்பக்கல்வியை திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலையிலும் இடைநிலை கல்வியையும் உயர் தரக் கல்வியையும் இந்து மகளிர் கல்லூரியிலும் கற்றேன்.

நான் வர்த்தகத் துறையை தெரிவுசெய்ய எனது தனிப்பட்ட விருப்பமே காரணமாகும். எனது தந்தை கமத்தொழில் செய்கின்ற போதிலும், எனது கல்விக்காக பெற்றோர்கள் பட்ட துன்பங்களும் துயரங்களும் என்வாழ்நாளில் மறக்க முடியாதவை ஆகும்.

சந்திப்பு: அனுஷ்மன்

நான் இரவில் கல்வி கற்பதையே வழக்கமாக கொண்டவள். எனக்குக் கிடைத்த பாடசாலை ஆசிரியர்கள் மிகவும் எனக்கு உற்சாகம் ஊட்டினார்கள். அவர்களது உற்சாகமே நான் இப்பெறுபேறுபேற்றைப் பெறக் காரணம் என்று கூறவேண்டும்.

எனக்குக் கிடைத்த நண்பர்களும் என்னைப் பல் வேறு வழிகளில் ஊக்கப்படுத்தி எனது வெற்றிக்கு உதவி புரிந்தனர்.

என்னை விட என்னைச் சுற்றியுள்ள சொந்தங்களும், நண்பர்களுமே நான் இப்பெறுபேற்றைப்பெற வேண்டுமென அதிகம் விரும்பியவர்கள் வீட்டில் கல்வி கற்றதால் பாடசாலைக்கு லீவு எடுக்காமல்-வகுப்புக்களைத் தவிர்த்து விடாமல் தொடர்ந்து படிப் பதன் மூலம் நல்ல பெறுபேற்றினை அடைந்து கொள்ளலாம் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

எதிர்காலத்தில் பல்வேறு துறைகளில் மாணவர்கள் மிளிர்வதற்கு வர்த்தகத் துறையானது பற்பல வசதி வாய்ப்புக்களை வழங்கி வருகின்றது.

எனவே வர்த்தகத்துறையைத் தெரிவு செய்வதன் மூலம் பல்வேறு தொழில் வாய்ப்புக் களைப் பெற இலகுவாக இருக்கும் என நான் கருதுகிறேன்.

எனது இவ்வெற்றிக்கு முழுமையான பங்களிப்பை வழங்கிய என் குடும்பத்தினருக்கும் சகோதரர்களுக்கும் நண்பர்களுக்கும் எனது நன்றிகளைக் கூறிக்கொள்வதில் பெருமை அடைகின்றேன். நான் வர்த்தகத்துறையில் மிளிர்ந்து எனது நாட்டிற்குச் சேவை செய்ய விரும்புகின்றேன்.



## சர்மிலா ஜெகதீஸ்வரன்

யாழ்.இந்து மகளிர் கல்லூரி

கலைப்பிரிவு - 2ஏபி மாவட்ட நிலை - 37

எனது ஆரம்பக் கல்வியை நீர்வேலி சி.சி தமிழ்க்கலவன் பாடசாலையில் கற்றேன். பின்னர் 6 தொடக்கம் உயர்தரம் வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கற்று இன்று கலைப்பிரிவில் மாவட்ட நிலை 37ஐ பெற்றதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

நான் தமிழ்த் துறையில் பிரவேசிக்க வேண்டும் என்பதே எனதும் பெற்றோரினதும் கனவு ஆகும். இறைவனின் ஆசியுடன் எனது இலக்கை அடைய முயற்சி செய்கின்றேன். கிடைக்குமானால் இரட்டிப்பு மகிழ்ச்சி.

எனக்கு விளையாட்டுத்துறையிலும், கவிதை, கட்டுரை சம்பந்தமான துறைகளிலும் அதிக நாட்டம் உள்ளது. எனது கல்வியையும் ஏனைய துறைகளையும் ஒரேயடியாக முன்னேற்றச் சாதகமாக இருந்த கடவுளுக்கு நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

எனக்கு ஆரம்பக்கல்வி முதல் இன்றுவரை கல்வி கற்பித்த, வழிகாட்டிய அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

நான் இரவில் கற்பதையே வழக்கமாக கொண்ட எனக்கு எனது அன்னையின் அரவணைப்பைப் பற்றிக் கூற வார்த்தைகள் போதாது. அதைவிட எனது நண்பர்களின் உதவியும் பரீட்சைக் காலத்தில் உறுதுணையாக இருந்தன.

எனது கல்விக்கு உறவினரின் பங்கும் அளப்பரியது. அதேபோல என்அக்காவும் இறுதிவரை எனது வெற்றிக்குப் பக்கபலமாக இருந்தார். எனது அப்பா பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமைபுரிகின்றார்.

தனது வேலைப்பளுக்களுக்கு மத்தியிலும் எனது வெற்றிக்குப் பக்கபலமாக இருந்தமையை எண்ணி நான் பெருமைப்படுகின்றேன். எனது பாடசாலையிலுள்ள அனைத்து மாணவர்களும் பாடசாலையின் பெயரை காப்பாற்றி மேன்மையுறச் செய்யவேண்டும் என விரும்புகின்றேன்.

# புதிய கண்டுபிடிப்புப் போட்டியில் தேசிய ரீதியில் கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வி.மாணவன் சாதனை!



கல்வி அமைச்சு ''மைக்றோ சொப்ற்' நிறுவனத்துடன் இணைந்து தேசிய மட்டத்தில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் 2009ஆம் ஆண்டில் நடத்திய புதிய கண்டுபிடிப்புப் போட்டியில் யாழ்ப்பாணம் கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டியுள்ளது.

இதில் மாணவருக்கான போட்டியில் தில்லைநாதன் கௌ சிகன் ஜி.சீ.ஈ. உயர்தர கலைப்பிரிவில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவருக்கான விருதுகளும் சான்றிதழ்களும் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் வழங்கப்பட்டன.

இதேவேளை இலங்கை சட்டமன்றக் கல்லூரியால் தேசிய மட்டத்தில் 2009இல் நடத்தப்பட்ட இயற்கை அனர்த்த முகாமைத்துவத்தில் பாரம்பரிய முறைகளை இனங்காணும் செயற்றிட்ட முன்மொழிவுக்கான போட்டியில் மூன்றாம் இடத்தை கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலய மாணவன் தில்லைநாதன் கௌசிகன் தலைமையிலான குழுவினர் சாதனை படைத்துள்ளனர். இவர்களுக்கான 15 ஆயிரம் ரூபா பரிசும் சான்றிதழ்களும் இலங்கை சட்டமன்றக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற வருடாந்த விழாவில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 2010 ஆண்டுடன் யாழ்.தேசிய கல்வியற் கல்லூரியில் நாடகமும் அரங்கியலும் பாடநெறிக்கு மூடுவிழா!

## -மாணவர்கள், விரிவுரையாளர்கள் அதிருப்தி-

யாழ்ப்பாணம்,ஜன.4

யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியில் 2010 ஆம் ஆண்டுடன் நாடகமும் அரங்கியலும் பாடத்துக்கான கற்கைநெறி நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் மாணவர்கள், விரிவுரையாளர்கள் அதிருப்திக்குள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது.

யாழ். கல்வியியற் கல்லூரியில் கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டுவரை நாடகமும் அரங்கியலும் பாடத்துக்கான கற்கைநெறிகள் இடம் பெற்று வந்தன. இதில் 7 பிரிவுகளில் மாணவர்கள் கல்விகற்று சுமார் 250 இற்கு மேற்பட்டோர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

இந்நிலையில் நாடகமும் அரங்கியலும் பாடத்துக்கான கற்கை நெறிகள் 2010 ஆம் ஆண்டுடன் நிறுத்தப்பட்டு மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரிக்கு மாற்றம் செய்யப் படவேண்டும் என்று கல்வியமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக நடத்தப்பட்டு வந்த இந்தக் கற்கைநெறி திடீரென நிறுத்தப் பட்டு மட்டக்களப்பு கல்லூரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் மாணவர்கள், விரிவுரையாளர்கள் அதிருப்திக்குள்ளாகியுள்ளனர்.

யாழ்.கல்வியியற் கல்லூரியில் தொடர்ந்தும் நாடகமும் அரங்கியலும் கற்கைநெறி நடத்தப்படவேண்டும் என்று மாணவர்களும் கல்விசார் நலன் விரும்பிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (04-9)

# முதியோர் அடையாள அட்டை பெறுவோர் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரிப்பு

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வருவதையிட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் முதியோர் அடையாள அட்டைக்குப் பிரதேச செயலகங்களில் விண்ணப்பிப்போர் தொகை அதிகரித்து வருகின்றது.

தேசிய அடையாள அட்டை தொலைந்த, இல்லாத, சேதமடைந்த, தெளிவற்ற நிலையில் வைத்திருக்கும் முதியோர் இந்த அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கின்றனர். தேர்தலில் வாக்களிப்பதற்கான அடையாள ஆவணங்களில் ஒன்றாக முதியோர் அடையாள அட்டையும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. பிரதேச செயலகத்தில் முதியோர் அடையாள அட்டைப் படிவத்தைப்பெற்று பூரணப்படுத்தி 2 புகைப்படங்களுடன் கிராம சேவகரிடம் சமர்ப்பித்து அவரின் சிபாரிசின் பின்பு சமூக சேவைகள் உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்து முதியோர் அடையாள அட்டையைப் பெறமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(04-224)

# மக்களின் வங்கித் தேவைகள் தொடர்பான கலந்துரையாடல் பருத்தித்துறை பகுதிகளில் இன்று

வடமராட்சி,ஜன.4

பருத்தித்துறை பிரதேசத்தில் உள்ள பொலிகண்டி கிழக்கு, மந்திகை, கற்கோவளம் ஆகிய மூன்று கிராமங்களைச் சேர்ந்த மக்களுடன் வங்கித் தேவைகள் தொடர்பாக மக்கள் வங்கி உயர் அதிகாரிகள் இன்று 4ஆம் திகதி திங்கட்கிழமை கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர்.

பொலிகண்டி கிழக்கில் முற்பகல் 10 மணிக்கும், மந்திகையில் முற்பகல் 11 மணிக்கும், கற்கோவளத்தில் பிற்பகல் 2 மணிக்கும் இக்கலந்துரையாடல் இடம் பெறும் என பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் மு.சிவநேசன் தெரிவித்தார்.


இக்கலந்துரையாடல்களை நடத்தவென மக்கள் வங்கியின் உயர் அதிகாரிகள் கொண்ட குழு கொழும்பிலிருந்து வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

(04-236)



கலாநிதி மனோன்மணி சண்முகதாஸின் 'செவிநுகர் கனிகள்' நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். பேராசிரியர் அ.சண்முகதாஸின் 70 ஆவது பிறந்த தினத்தையொட்டி 'செவிநுகர் கனிகள்' நூலின் முதல் பிரதியை அவரிடம் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் வழங்குவதையும், பேராசிரியர் சண்முகதாஸிற்கு தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் க.தர்மராஜா பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதையும் முதலிரு படங்களிலும் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஆறு. திருமுருகன் மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் அரசியல் தலைமைத்துவங்களுக்கு!

## தமிழ்ப் புத்திஜீவிகள் சமுதாயம் விடுக்கும் விநயமான வேண்டுகோள்

நீதி, நியாயம், சமவுரிமை, கௌரவ வாழ்வு ஆகியவற்றுக்கான இலங்கைத் தமிழர்களின் வேணவா சிதறடிக்கப்பட்டு, இன்று நமது இனம் பெரும் இக்கட்டில் சிக்கித் தவிக்கையில், ஒரு சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கி நமது மக்களை அரசியல் ரீதியாக வழி நடத்திச் செல்லவேண்டிய பாரிய பொறுப்பு உங்கள் மீது விழுந்துள்ளது என்பதை முதலில் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எமது மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் இந்த ஜனாதிபதித் தேர்தலை தந்திரோபாயமாக எதிர்கொண்டு உரிய உத்திகளையும் வியூகங்களையும் வகுத்துச் செயற்படுவதன் மூலம், எமது மக்களுக்கான தீர்வை நோக்கிய அடுத்த கட்ட நகர்வுக்குச் சரியான அடித்தளத்தை நீங்கள் இடமுடியும். அத்தோடு தமிழர்களின் ஜனநாயக வாக்குப் பலத்தை வெளிப்படுத்தி நமது மக்களுக்கு நம்பிக்கையையும் ஊட்ட முடியும்.

இந்தச் சமயத்தில் உரிய அரசியல் ஈடுபடுதலில் (Political Engagement) சம்பந்தப்படாமல் பகிஷ்கரிப்பு என்ற போக்கில் விலகி நிற்பதோ, அல்லது தனித் தமிழ் வேட்பாளர் என்ற கோஷத்துக்கு அடிபணிந்து தமிழர்களின் வாக்குகளை அரசியல் வலுவிழந்தவையாக்கி அர்த்தமற்றுப் போகவைப்பதோ தமிழ்ப் பேசும் மக்களின் அரசியல் மீட்சிக்கு உதவப் போவதில்லை என்பது தெளிவு. பகிஷ்கரிப்பு என்பது நாங்கள் தேசிய அரசியல் நீரோட்டத்திலிருந்து ஒதுங்கிக்கொள்வதற்கான நியாயமாகிவிடக் கூடாது.

ஆகவே, அதிகாரத்துக்கு வரக்கூடிய தரப்போடு பேரம் பேசுதலுக்கான நல்ல சந்தர்ப்பமாக இந்த வாய்ப்பைப் பயன்படுத்துவதுடன், அதனைத் தீர்க்கதரிசனத் தொலைநோக்கோடும், புத்திசாதுரியத்து டனும் அணுகி, அதற்கேற்ப இத்தேர்தலில் நமது மக்களை உரிய தெரிவைச் செய்யுமாறு வழி நடத்துவது உங்கள் பொறுப்பு. அதை நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என தமிழ்ச் சமூகத்தின் புத்திஜீவிகளான நாங்கள் இந்த மிக முக்கிய காலகட்டத்தில் விநயமாக உங்களைக் கேட்டுக் கொள்கிறோம்

- ★ ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்(நல்லை ஆதீனம், யாழ்ப்பாணம்)
- ★ பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள்(ஆதீனகர்த்தா, திருகோணமலை ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் தேவஸ்தானம்)
- ★ வண.கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் (யாழ். ஆயர்)
- ★ வண.கலாநிதி சு. ஜெபநேசன் (முன்னாள் பேராயர், தென்னிந்தியத் திருச்சபை)
- ★ வண. எஸ்.பி. நேசகுமார்(குருமுதல்வர், யாழ். அத்தியட்சாதீனம், இலங்கைத் திருச்சபை)
- ★ வண. எஸ்.கே. கதிர்காமர்(தலைவர், மெதடிஸ்த திருச்சபை, யாழ். மறைமாவட்டம்)
- ★ பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள்- துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம், தலைவர், சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான யாழ். கவுன்ஸில்)
- ★ பேராசிரியர் கா.சிவத்தம்பி (தகைசார்ந்த ஓய்வுநிலைப் பேராசிரியர்)
- ★ பேராசிரியர் சா. சத்தியசீலன்(பீடாதிபதி, பட்டப்பின் கல்வித்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
- ★ எஸ்.சிவதாஸன் (திட்டமிடல் அமைச்சின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர்)
- ★ சுந்தரம் டிவகலாலா(முன்னாள் செயலாளர், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு)
- ★ கலாநிதி என்.தணிகாசலம்பிள்ளை(முன்னாள் மாகாணக்கல்விப் பணிப்பாளர், வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சு)
- ★ வைத்தியகலாநிதி ஆர். தெய்வேந்திரன்(முன்னாள் தலைவர், செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணம்)
- ★ சு.பரமநாதன்(செயலாளர், இந்து அமைப்புகளின் ஒன்றியம் - யாழ்ப்பாணம்)
- ★ ஷெரீன் சேவியர்(மனித உரிமைகள் இல்லம்)
- ★ கம்பவாரிதி இ.ஜெயராஜ் (அமைப்பாளர், அகில இலங்கைக் கம்பன் கழகம்)
- ★ ஆறு. திருமுருகன்(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்., தெல்லிப்பளை)
- ★ கலாநிதி பி.கே.சுந்தரம் (பிரபல வர்த்தகர்)
- ★ என்.கருணை ஆனந்தன்(வரி மதிப்பு ஆலோசகர்)
- ★ வைத்தியகலாநிதி எஸ்.சிவானந்தராஜா ( யாழ். பல்கலைக்கழக முன்னாள் மூதவை உறுப்பினர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவான பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் என்.சத்தியேந்திரா, ஜே.வி.பி.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சந்திரசேகரன், ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன, நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன், எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகா, எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.க.தலைவருமான ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

*(படங்கள்: பிரபா, தமிழரசன், தமிழினியன், நேசன்)*

## தமிழர்களின் அரசியல் போராட்டத்தை மீண்டும் தூக்கி நிறுத்த ஜனாதிபதித் தேர்தலே ஒரே வாய்ப்பு

### ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.4

தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தை மீண்டும் தூக்கி நிறுத்துவதற்கு இந்த ஜனாதிபதித் தேர்தலை விட்டால் வேறு வழியே கிடையாது.

இவ்வாறு குறிப்பிட்டார் முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்.

நேற்று முன்தினம் எதிர்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் யாழ்ப்பாணத்துக்கு வந்த அவர் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றினார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களைச் சரியாக வழிநடத்த வேண்டும். தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தை மீண்டும் தூக்கி நிறுத்துவதற்கு இதுதான் கடைசிச் சந்தர்ப்பம். இதனை விட்டால் வேறு வழியே இல்லை. எனவே தமிழர்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுவைத் தாக்கல் செய்தபோது எல்லா வேட்பாளர்களும் தேர்தல் ஆணையாளரின் முன்னால் வந்து வேட்பு மனுக்களைக் கையளித்தனர். ஆனால் மகிந்த ராஜபக்ஷ மட்டும் தேர்தல் ஆணையாளருக்கு பக்கவாட்டில் சென்று மனுவைக் கொடுத்தார். இதற்கு என்ன காரணம் என நான் யோசித்தேன். பின்னர் தான் தெரிந்தது. சோதிடர் ஒருவர் அவருக்குச் சொன்னாரம் வடக்கைப் பார்த்துக் கொண்டு மனுவைக் கொடுக்க வேண்டும் என்று. மனுவைக் கொடுத்த நாள் முதல் இன்றுவரை மகிந்த வடக்கைப் பார்த்துக் கொண்டே இருக்கிறார்- என்றார். (50-4)

## யாழ்ப்பாணத்தில் இன்னமும் மின்வெட்டு உள்ளதா?

### அர்ஜூன ரணதுங்கவுக்கு வந்த சந்தேகம்

யாழ்ப்பாணம்,ஜன.4



யாழ்ப்பாணத்தில் இன்னமும் மின்வெட்டு நடைமுறையில் உள்ளதா? எனக் கேள்வி எழுப்பினர் யாழ்ப்பாணம் வந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜூன ரணதுங்க.

எதிர் கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் நேற்று முன்தினம் யாழ்.வந்த அவர் ஞாயிறு மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலும் கலந்து கொண்டார்.

ஊடகவியலாளர் மாநாடு ஆரம்பமாக இருந்தவேளை இரு தடவைகள் மின்தடை ஏற்பட்டது. இதனால் சில நிமிடங்கள் மெழுகுதிரியின் உதவியுடன்தான் ஊடகவியலாளர் மாநாடு நடைபெற்றது.

அப்போது அங்கிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜூன ரணதுங்க யாழ்ப்பாணத்தில் இப்போதும் மின் தடை உள்ளதா? எனக் கேட்டார். இதற்குப் பதிலளித்த மனோ கணேசன் யாழ்ப்பாண மக்களுக்கு இதெல்லாம் சகஜமப்பா என்றார். உடனே அங்கிருந்த எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

## நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்

### அமைச்சர் முரளிதரன் அழைப்பு

கொழும்பு, ஜன.4



நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு அனைத்துப் பிரஜைகளும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்று தேசிய நல்லிணக்க அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

எமது நாட்டை சிறப்பான வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லும் ஆண்டாக, இலங்கையில் வாழ்கின்ற அனைத்து மக்களுக்குரிய தார் மீகப் பொறுப்புக்கள் நிறைந்த ஆண்டாக 2010 உள்ளது.

இனம், மதம், மொழி எல்லாம் கடந்த ஒற்றுமை மிக்க சமூகமாக, இலங்கைத் தாய்நாட்டின் பிள்ளைகளாக நாம் வாழ வேண்டும். கடந்த கால கசப்புணர்வுகள், சங்கடமான நிகழ்வுகளை மறக்க வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் எமது நாடு ஆளப்படுகின்றது. அவரின் உயரிய சிந்தனைக்கு மதிப்பளித்து நாட்டை வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டியமை எமது கடமையாகும்.

எனவே, புதிய ஆண்டில் புதுயுகம் படைக்க அனைத்து மக்களும் ஓரணி திரள வேண்டும். - என்றார். (சி)

## அரசியல் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான மார்க்கமாகத் தேர்தலை பயன்படுத்த வேண்டும்

### தமிழ்ப் பேசும் மக்களிடம் பிள்ளையான் கோரிக்கை



கொழும்பு, ஜன. 4

ஜனாதிபதித் தேர்தலை அவர்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கான சிறந்த வழியாகத் தமிழ் பேசும் மக்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் இந்தச் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ள விடயங்கள் வருமாறு:

மற்றைய வருடங்களை விடவும் இவ் வருடமானது இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு முக்கியமான காலப் பகுதி ஆகும். மக்களின் பெயரால் ஒரு சாராரினால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதவன் முறை முடிவுக்கு வந்துள்ள நிலையில் தமிழ் பேசும் மக்கள் அவர்களின் அரசியல் அபிலாசையைப் பெற்றுக் கொள்வதற்கான அர சியற் பேரம் பேசும் சக்தியின் யதார்த்தத் தைப் புரிந்து கொள்ள வேண்டிய காலம் இதுவாகும். இவ்வேளையில் தான் எமது நாட்டின் முக்கியத்துவம் மிக்க ஜனாதிபதித் தேர்தலும் எதிர்வரும் 26 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

எதிர்காலத் தேர்தல்களின் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாகச் சிறுபான்மை மக்கள் உள்ளமை எமக்குக் கிடைத்திருக்கும் ஓர் மிகப் பெரிய வர்ப்பிரசாதமாகும்.

இடம்பெற உள்ள ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் இரண்டையும் அவர்களின் பேரம் பேசும் சக்தியினூடாக வென்றெடுத்து அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும், அதிகாரப் பகிர்வைப் பெற்றுக் கொள்வதற்கும் சிறந்த திருப்புமுனையாகத் தமிழ் பேசும் மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அனைத்து சிறுபான்மை மக்களின் உள்ளங்களிலும் தெளிவான அரசியற் சிந்தனைகள், கருத்தாடல்கள் நிலைபெற வேண்டும் என்று நான் பிரார்த்திக்கின்றேன்.

அதே போன்று, சிறுபான்மை சமூகங்களின்பால்உள்ளசுயநலம்மிகுந்த கொள்கைப் பிடிப் பாளர்களும் மனம் திருந்தி மக்களுக்காக அவர்களின் அரசியல் பாதையை மாற்றிக் கொள்ளவேண்டும்.-என்றுள்ளது. (சி)

## சுதந்திரமான சூழலை உருவாக்கிய மகிந்தவை கிழக்கு மக்கள் ஒருபோதும் கைவிடமாட்டார்கள்

### அசாத் சாலி சொல்கிறார் இப்படி




கொழும்பு, ஜன. 4

இலங்கையில் எந்தப் பாகத்திலுள்ளவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்காது விட்டாலும் கிழக்கு மாகாண மக்கள் ஒருபோதும் அவரைக் கைவிடமாட்டார்கள். புலிகளின் தொல்லைகள் இன்றி சுதந்திரமான சூழலை உருவாக்கிய மிகப்பெரும் சாதனையை அவர் செய்துள்ளார். ரவூப் ஹக்கீம் உண்மையில் மக்கள் மீது பற்றுள்ளவரென்றால் மஹிந்தவை ஆதரிக்குமாறே பிரசாரம் செய்திருக்க வேண்டும்.

இதேவேளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் நாளை முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டாலும் அதைத் தட்டிக் கேட்கத் தயங்க மாட்டேன் என்று கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கவின் உயர்பீட உறுப்பினராக இருந்த அசாத் சாலி எதிர்வரும் ஜனா திபதித் தேர்[illegible] சேகாவை களத்தில் நிறுத்த ஐ.தே.க உயர்பீடம் எடுத்த தீர்மானத்தை அடுத்து அக் கட்சியுடன் முரண்டு பிடித்துக் கொண்டு நிற்கின்றார்.

இந்நிலையில், அவர் ஐக்கிய மக்கள் கட்சியின் ஏற்பாட்டில் சம கால அரசியல் நிலைமைகள் தொடர்பாக மருதமுனையில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு கூறினார்.

இக்கருத்தரங்குக்கு ஐக்கிய மக்கள் கட்சித் தலைவர் ஏ.எச்.ரகுமான் தலைமை வகித்தார்.

அசாத் சாலி அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''எதிர்கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளரான முன்னாள் இராணுவ தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவிடம் அரசியல் சாணக்கியம் எதுவும் இல்லை. தமிழ் - முஸ்லிம் மக்களை ஆதரிக்கின்ற அரசியல் போக்கு அவரிடம் கிடையாது. இதனால் தான் நாம் அவரை எதிர்க்கின்றோம்.

சிறுபான்மையினர் வந்தேறு குடிகள் என்றும், அவர்களுக்கு எவ்வித உரிமைகளும் இந்நாட்டினில் இல்லை என்றும் கூறிய பொன்சேகாவை நாடாளுமன்றத்தில் காரசாரமாக விமர்ச்சித்த ரவூப் ஹக்கீம், மனோகணேசன் போன்றோருக்கு அவர் மீது பற்று ஏற்படக் காரணம் என்ன? நோர் [illegible] நிரலுக்கேற்ப இவர்கள் வேலை செய்கின்றனர். விரைவில் மக்கள் இவர்களுக்குப் பதில் கொடுப்பர்.

விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் கே.பியைப் பற்றிப் பலவிதமாகப் பேசுகின்றனர். அரசு அவரை வைத்துக்கொண்டு பல்வேறு தகவல்களைப் பெற்றுவருகின்றது. 600 இற்கு மேற்பட்ட கணக்குகள் புலிகளின் வசம் இருப்பதாக அறிய முடிகின்றது. 21 கப்பல்கள் பற்றிய செய்தியும் வெளியாகியுள்ளன. இவை பற்றி கே.பி. மூலமே அறிய முடிந்திருக்கின்றது இது பற்றியெல்லாம் தெரியாமல் ரவூப் ஹக்கீம் கதை அளக்கின்றார்.

பொன்சேகா வந்தால் இராணுவ ஆட்சி தான் நாட்டில் நடக்கும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பாகிஸ்தானுக்கு ஏற்பட்டதொரு நிலை எமது நாட்டிற்கும் ஏற்படாமல் இருக்க மஹிந்தவுக்கு ஆதரவளிக்க வேண்டிய தேவை எமக்கு உண்டு.

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் பொன்சேகாவுக்கு வாக்களிக்கவுள்ளனர் என ஹக்கீம் கூறித் திரிகிறார். இம் மக்களின் வாக்குகள் அவரது வீட்டுச் சொத்தா? மக்கள் தெளிவாகவுள்ளனர். 26 ஆம் திகதி மஹிந்த வெல்வார். இதில் யாரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.''

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இலங்கேஸ்வரன் தேவகி



சூசையப்பர் கோயிலடி கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், யூரன் வோக் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலங்கேஸ்வரன் தேவகி 28.12.2009 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் இராசகிளி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நவாலியூர் பரமு- நாகம்மா தம்பதியரின் மருமகளும், இலங்கேஸ்வரனின் (சிறி, ஜேர்மனி) அன்பு மனைவியும், ஜேர்மனியிலுள்ள துஸ்யந்தன், விதுசன், றிசிதன் ஆகியோரின் அன்புத் தாயும், இராசரத்தினம் (ஜேர்மனி), வணா (ஜேர்மனி), விக்கிரமசிங்கம் (ஜேர்மனி), காலஞ்சென்ற சோதி மற்றும் நந்தகுமார் (சுவிஸ்), ஜெயா, சிவகுமார் (இலங்கை) ஆகியோரின் சகோதரியும், சரஸ்வதி (ஜேர்மனி), கந்தசாமி (ஜேர்மனி), சுதாஜினி (ஜேர்மனி), வசந்தினி (சுவிஸ்), மகேந்திரராசா, ஜெயசித்திரா (இலங்கை), குணசேகரம் (ஜேர்மனி), ஞானசேகரம், சந்திரசேகரம், சறோசாதேவி, உதயசேகரம், மஞ்சுளாதேவி ஆகியோரின் மைத்துனியும், சர்மிளா, பிறேமிளா, ஜெனோவின், கிளவுடின், யக்சன், சினேகா, கரன், சியான், தேனுகா ஆகியோரின் மாமியும், அனுகரன், அனுசியா ஆகியோரின் சிறியதாயும், காலஞ்சென்ற தங்கராசா மற்றும் பத்திமாராணி (கனடா), தெய்வேந்திரம்-சிவந்தி (ஜேர்மனி) ஆகியோரின் மருமகளும், அருமைத்துரை, நிர்மலா (கனடா), காலஞ்சென்றவர்களான செல்லர், நல்லதம்பி, தம்பிஐயா, மற்றும் லீலாவதி ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 04.01.2010 திங்கட்கிழமை ஜேர்மனி யூரன்வோக்கில் நடைபெறும். அன்றைய தினம் அன்னாரின் பிறந்த இடமான கோப்பாய் மத்தி இல்லத்திலும் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சூசையப்பர் கோயிலடி,
கோப்பாய் மத்தி. (93247)

தகவல்:
குடும்பத்தினர்.

## ரெட்ணம் ராசு



இல 07, ஓடக்கரை வீதியைச் சேர்ந்த ரெட்ணம் ராசு 31.12.2009 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் ராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ரெட்ணம்- அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மற்றும் சேசேலி தம்பதியரின் மருமகனும், ஜெகன், ஜோதினி, ஜென்ஸ், ஜெனிவா ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், யூட்பிளேவியனின் பாசமிகு மாமனாரும் யூலியற், குமார், காலஞ்சென்ற ஜெயசீலன், சாந்தி, சறோசா, சூசை, புஷ்பா ஆகியோரின் சகோதரரும் குலம், சேவியர், பாலன், ஏசுக்குட்டி, ராசு, சூரி, குமார், வேவி, அன்ரன், ரவி, வேவி, சின்னத்தம்பி, ரவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பூஞ்சியம்மா, றோஸ்மலர், சாந்தி, லதா, பிறேமா, மரிஸ்ரெலா, சாந்தா, பொன்னம்பலம், செல்வி, ஆகியோரின் அருமைச் சகலரும், மக்லி, டென்ஸ்லி, ஏஞ்சல், ஆகியோரின், பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (04.01.2010) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் இடம் பெறும்.

இல.7 ஓடக்கரை வீதி,
யாழ்ப்பாணம், (93246)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
தொலை.இல. 0774522135




வீட்டுக்கு
மற்றும்
ஹோட்டலுக்கு
டயிடஸ் ஸ்ரோஸ்
2439422



### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், இராசா வீதியில் (முடமாவடிச் சந்திக்கு அருகாமையில்) 2 ¼ பரப்புக் காணியுடன் கூடிய வீடும், 2 ¼ பரப்பு வெற்றுக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: தொ.பேசி 0723516728, 0718676485

(93247)



### WHITE FLOWERS PRE-SCHOOL

வெள்ளைப்பூக்கள் பாலர் பாடசாலை

அனுமதி 2010

3-5 வயதினர் இணைத்துக் கொள்ளப்படுவர்.

தமிழ், ஆங்கிலம், பண்ணிசை, மற்றும் சித்திரக்கலையில் விசேட பயிற்சிகள் வழங்கப்படும்.

அனுமதிகள் 04.01.2010 திங்கள் முதல்...

இல 07,
செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

நிர்வாகி.

(93228)



### பணிப்பெண்தேவை

வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 2377466, 0213007667

56/3, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம். (93244)



### கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA NO-1 புறொயிலர் குஞ்சுகள் 06.01.2010 விநியோகிக்கப்படும் பதிவுகளை மேற்கொள்ளவும்.

றாஜீவ் கால்நடைத் தீவன விற்பனை
ஆனைக்கோட்டைச் சந்தி.
021 222 2867

(93245)


### கல் வீழ்ந்து வயோதிபர் காயம்

தண்ணீர்த் தொட்டிக்கு மேல் வைக்கப்பட்டிருந்த சிமெந்துக் கல் தவறி கீழே நின்றவரின் தலையில் வீழ்ந்து காயப்படுத்தியது.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் இடம் பெற்றது.

இதேஇடத்தைச் சேர்ந்த அரியரத்தினம் (வயது 64) என்பவர் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(201-247)

# கண் பரிசோதனை முகாம்

வடமராட்சிக் கல்வி வலய அதிபர், ஆசிரியர்கள், வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள் கல்விசாரா ஊழியர்கள் ஆகியோருக்கான நடமாடும் கண்பரிசோதனை முகாம் பெப்ரவரி 6ஆம் திகதி மு.ப 10 மணி தொடக்கம் பி.ப 2 மணிவரை வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது கண்ணில் நீர்வடிதல், தலைவலி, தூரப்பார்வை, கிட்டப்பார்வை குறைபாடுடையவர்கள் கணனி மூலம் பரிசோதனை செய்யப்பட்டு மூக்குக்கண்ணாடி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.வ.செல்வராசா அறிவித்துள்ளார். (01)


### அச்சுவேலி பொதுச் சந்தையில்..........

அதிசயம் ஆனால் உண்மை

அச்சுவேலி பொதுச் சந்தையில் கடந்த 10வருடங்களுக்கு மேல் நடைமுறையில் இருந்து வந்த அடாவடித்தனங்கள், சர்வாதிகார நடைமுறைகள் அனைத்தும் முற்றாக நீக்கப்பட்டு பாவனையாளர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு நன்மையளிக்கக் கூடிய புதிய ஒழுங்குகள் 2010.01.01 வெள்ளிக்கிழமை முதல் அமுல் செய்யப் படுகின்றன.

★ விவசாயிகள் தங்களது விளை பொருள்களைத் தமது விருப்பத்துக்கு ஏற்ப சுயேட்சையாக விலை கூறி விற்கலாம். இதில் எந்தவிதமான கையாடலோ, நிறைமோசடியோ, தரகர்களின் நெருக்கடியோ இருக்காது.

★ வாழைக்குலை விற்பனை, தேங்காய் விற்பனை போன்றவற்றில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த தனிமனித சர்வாதிகாரத்துக்கு இடமே இல்லை. விரும்பிய விதத்தில் விலை கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். விலை கூறி விற்றுக்கொள்ளலாம்.

★ ஒரு முறை வந்து பாருங்கள் உங்கள் அபிப்பிராயத்தை நேரடியாகவோ, அபிப்பிராயப் பெட்டியிலோ அறியத்தாருங்கள்.

உங்கள் திருப்தியே எங்கள் சேவை

வீடியோ கலாமினி,
அச்சுவேலி.

(சி/563876)


## துயர் பகிர்கின்றோம்



யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் பண்ணை முகாமையாளராகக் கடமையாற்றும் எஸ்.வி. ஒ்ராக்காஸ் அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி
**யோசேப்பின் சூசன்**

அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினர், உற்றார், உறவினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதிப்பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
விவசாயத்திணைக்களம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (93230)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
04.08.1933

மறைவு
27.12.2007

திதி: சங்கடஹர சதுர்த்தி
(04.01.2010, திங்கட்கிழமை)

நீங்கள் மறைந்து வருடங்கள்
இரண்டாகி விட்டன என்று
சொல்ல மனசு மறுக்கிறது அப்பா
நினைக்க நினைக்க நிமிடம்
கடந்தாலும்
உங்கள் முகத்தோற்றமும் வார்த்தைகளும்
எம் நெஞ்சத்தை விட்டகலாது அப்பா!

குடும்பத்தினர்.
'ஸ்ரீ வைகுந்தம்',
மூளாய் மேற்கு, சுழிபுரம்.

அமரர்
**வாரிக்குட்டி துரைராசா**


### ANGEL INTERNATIONAL SCHOOL

ANGEL INTERNATIONAL SCHOOL MANIPAY — In God we trust — a school with a difference — humedica

**SCHOOL REOPENING**
**On 5th January 2010**

**ADMISSIONS**

**Manipay**
Pre-School 3 to 5 years and other Grades by Admission test and Interviews.
>Mathers Lane, Manipay.
TP. 021 222 9738

**Jaffna Branch**
Pre-school 3 to 5 years.
> Branch -386/1, Hospital Road, Jaffna.
TP. 021 222 9239


## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் ஆசிரியமணி ந.வாதவூரர்
(மாவிலங்கை, அளவெட்டி வடக்கு)

அன்னை மடியில் 10.11.1924
அம்மன் திருவடியில் 27.12.1999

திதி: 04..01.2010

அன்புடன் எமை அரவணைத்து அகில
மதில் உயர வைத்தீர்,
பண்புடனே கல்வி அறிவு பெற பாரினிலே
வழி சமைத்தீர்,
பொன்னும் பொருளும் பெற்று புவி
தனில் புகழ்பெற வைத்தீர்,
தன்னலமற்ற ஆசிரிய சேவையில்
தயாளனாய் திகழ்ந்தீர்,
ஆண்டுகள் பத்து பறந்தோடிவிட்டாலும்
ஆறாது எம் துயரம்.

'மாவிலங்கை'
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி. (93239)

நெஞ்சுகனத்த நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகவை பத்தில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



(யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை, 146 புள்ளிகள்)

'இராஜ உதயம்', அல்வாயைச் சேர்ந்த திரு. திருமதி. இராஜேஸ்வரன் பொன்மதி தம்பதிகளின் புதல்வன் **இ.ஜதீஷன்** பத்தாவது பிறந்த நாளைக் கொண்டாடும் இந் நாளில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றமையினையிட்டு வாழ்த்துவதோடு அவர் கல்வியில் மேன்மேலும் பல சித்திகளைப் பெற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

திருமதி. த.இராஜேஸ்வரி, திரு. திருமதி. பஞ்சலிங்கம், தயாபதி, திரு. திருமதி.நவரத்தினராஜா சத்தியவதி, திரு. திருமதி. செல்லக்குமார் உமா, திரு. திருமதி. இராஜவரோதயன் சந்திரிக்கா, திரு. திருமதி. குலரத்தினம் செல்வமலர், திரு. திருமதி. பத்மகாந்தன் குகமலர், திரு. திருமதி. குகச்சந்திரன் கதிர்விழி, திரு. திருமதி. தர்மலிங்கம் செல்வமதி, திரு. திருமதி. குகேந்திரன் ராஜினி.

(C/503878)

## டெங்கு ஒழிப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.04.

டெங்கு ஒழிப்புத் தொடர்பான, கரவெட்டிப் பிரதேசச் செயலகப் பிரிவுக்குரிய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

கூட்டத்தில் கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், விவசாய சம்மேளனங்கள் ஆகியவற்றில் இருந்து தலா இரண்டு பிரதிநிதிகளும் இந்தப் பிரிவில் இயங்கும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களையும், தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகளையும் கலந்துகொள்ளுமாறு கரவெட்டிப் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஒ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.04.

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட அதிபர்களுக்கான டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வும் அறிவுறுத்தல் கூட்டமும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலி.வலயக்கல்வி அலுவலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் மற்றும் சுகாதாரக் குழுவினர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் வலிகாமம் கல்வி வலய பாடசாலை அதிபர்களைத்தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக்கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.(ஒ-10)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 19 ★ 05 ★ 1965

உதிர்வு 05 ★ 12 ★ 2009

அமரர்

### ஆறுமுகம் ரவிச்சந்திரன்

கடந்த 05.12.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று (04.01. 2010) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லூரி வீதி, ஆத்தியடி,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

(93355)


கணினித்துறையில் அனைவரும் பயனடையும் விதமாக...

விசேட சிறப்பு சலுகை

100% செய்முறைப்பயிற்சி

கணினி & LapTop களினை நீங்களே அமைத்துக் கொள்ள...

தமிழ் மொழி விளக்கங்களிலான முற்றிலும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய

DIPLOMA IN HARDWARE ENGINEERING

Microprocessor, Various Mother Board Handing,All Type of Cards, HDD, FDD, CD ROM Drive, Printers, Installation - of O/S & Software, Assembling upgrading, Configuring, Troubleshooting, Repairing, User Level Networking

Duration 2 Months

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான...
அனைத்து கற்கைநெறிக்குமான புதிய பிரிவுகள்
ஒரு கற்கை நெறிக்கு, பதிவு செய்யும் முதல் 200 மாணவர்களுக்கு நிபந்தனைகள் எதுவுமின்றி Internet E-mail or Hardware Technology Course முற்றிலும் இலவசம் !

4/1/2010 - இன்று
11/1/2010 - திங்கள்
Time 10 a.m

DMI COMPUTER EDUCATION

NO.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021- 222 4403


## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07 ★ 05 ★ 1924

மறைவு 16 ★ 12 ★ 2008

### அமரர் அப்புத்துரை வள்ளிப்பிள்ளை

திதி: சதுர்த்தி

ஆகிவிட்டது ஓராண்டு
ஆறவில்லை எம் துயரம்
எம் துன்பத்தில் கூட இருந்து
ஆறுதல் அளித்தீரே
உம் பிரிவுத்துயரை
எவ்வாறு தாங்குவது?

இல. 07, பென்ரிக்கோஸ் லேன்,
கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுடன்:
மகேந்திரன் சந்திரமாலா
(மகள்)

(93353)

## கண்ணீர் அஞ்சலி



யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி உப அதிபர் திருமதி ந. அனந்தேஸ்வரன் அவர்களின் அன்புத்தந்தையார்

### அமரர் கணபதிப்பிள்ளை நடராசா அவர்கள்

புராணபடனம் செய்து சைவத்தைக் காத்தவரே
திருப்பதிகம் ஓதி திருநிலத்தை வளர்த்தவரே
முத்தாக நான்கு கண்மணிகள் பெற்றுவிட்டீர்
கல்வியினைக் கற்பதற்கு கலங்கரை விளக்காய் நின்றீர்
நன்னெறிகள் காட்டி நானிலத்தில் நாட்டிவிட்டீர்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதலைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/வடமராட்சி,
மத்திய மகளிர் கல்லூரி.

பாடசாலைச் சமூகம்.

## முன்பள்ளி ஆசிரியருக்கு இன்று கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜன.04.

யாழ். கல்வி வலய முன்பள்ளிகளின் அனைத்து ஆசிரியர்களுக்கும் "டெங்கு ஒழிப்பு" பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-07)

## வரணிச் சந்தை இயங்குகின்றது

தென்மராட்சி கிழக்கு, ஜன.04

வரணிப் பொதுச் சந்தை, கடைத் தொகுதிகள் சில தற்சமயம் இயங்கத் தொடங்கியுள்ளன. இருந்தும் அவை முழுமையாக இயங்கத் தொடங்கவில்லை. 2006இல் இடம்பெற்ற யுத்த மோதல்களை அடுத்து இப் பிரதேசம் பெரும் பாதிப்புக்குள்ளாகியது. அதைத் தொடர்ந்து பொதுமக்கள் பலர் அங்கிருந்து இடம் பெயர்ந்தனர். இதனால் சந்தை, கடைத் தொகுதிகள் 3 வருடங்களுக்குமேலாக இயங்கவில்லை.

தற்சமயம் ஏற்பட்டுள்ள சூழ்நிலையைத் தொடர்ந்து பொதுமக்கள் சிலர் மீளக்குடியமர ஆரம்பித்துள்ளனர். அதை அடுத்தே சில கடைகள் இயங்கத்தொடங்கியுள்ளன. சந்தையும் குறிப்பிட்ட சில வியாபாரிகளுடன் [illegible] (ஒ-122)

## மரண அறிவித்தல்



### வென்சஸ்லொஸ் பெர்ணபேத் (அன்னமணி)

பாஷையூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வென்சஸ்லொஸ் பெர்ணபேத் நேற்று (03.01.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொனிபாஸ்-கமலம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலம் சென்றவர்களான சின்னப்பு-திரேசம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், எட்மன் ஸ்பாட்டகஸ், அலாயஸ் (ஜேர்மனி), யுலாயஸ் (பிரான்ஸ்), தாசன் (ஜேர்மனி) ஜெனிங்ஸ் (உடற்கல்வி டிப்ளோமா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற கனகமணி மற்றும், பிலிப், ஞானதாஸ், அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் டியூலா, செல்வம், றீசா, நிதிலா, மயூரா, அமொறின் (வலயக் கல்வி அலுவலகம், தீவகம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பெலிக்ஸ் (வவுனியா கல்வியியற் கல்லூரி), கலிஸ்ரர், அரோன், அனுசியா, புறூனோ, யுஸ்ரினோ, அலெக்ஸ்னோ, சகானா, எட்விசா, அபிஷா, றொஸ்னி, எரிக்கா, மரிஷா, மெலிற்றா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று (04.01.2010) திங்கட்கிழமை பி.ப. 4 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

10, 03 ஆம் குறுக்குத்தெரு,
பாஷையூர், யாழ்ப்பாணம்.

(93361)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சுப்பையா செல்வராசா (குழந்தைத்தம்பி)



சுதுமலை தெற்கு, மானிப்பாயைப் (எச்சாட்டி வைரவர் கோயிலடி) பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா செல்வராசா (குழந்தைத்தம்பி) 02.01.2010 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் கௌசலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பையா - ஆச்சிமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, தில்லையம்பலம் மற்றும் தம்பிராசா, ராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விக்கினேஸ்வரன் (சுவிஸ்), நளாயினி, பாமினி (பிரான்ஸ்), தர்மினி ஆகியோரின் தந்தையும், ரகுதாஸ் (தபாலக ஊழியர், பண்டத்தரிப்பு), ரமணி (சுவிஸ்), சுதாகரன் (பிரான்ஸ்), விஜயகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிராமி, கீர்த்தனா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஐங்கரன், கபிலன் (சுவிஸ்), மீரா, அஜே (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (06.01.2010) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(93356)

தொ.பே: 021-7902115.

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்தடுத்து 3 ரயில் விபத்துகள்
# 10 பயணிகள் பலி; 39 பேர் காயம்!
## உத்தரப் பிரதேசத்தில் கடும் பனிப் பொழிவின் பாதிப்பு

லக்னோ, ஜன. 04

உத்தரப்பிரதேசத்தில் கடுமையான பனிப்பொழிவு காரணமாக மூன்று வெவ்வேறு இடங்களில் ஐந்து கடுகதி ரயில்கள் மோதின. அந்த விபத்துகளில் 10 பேர் பலியாகினர். மேலும், ரயில் சாரதி உட்பட 39 பேர் படுகாயமடைந்தனர்.

உத்தரப் பிரதேசம், புதுடில்லி உள்ளிட்ட வட மாநிலங்களில் கடுமையாக பனிப் பொழிவு ஏற்பட்டுள்ளது. அதனால், காலை நேரங்களில் எதிரில் நிற்பவரைக் கூடக் காண முடியாத அளவுக்கு நிலைமை இருக்கிறது. இத்தகைய மோசமான சூழ்நிலையால், உத்தரப் பிரதேச மாநிலத்தில் நேற்றுமுன் தினம் அடுத்தடுத்து மூன்று பெரிய ரயில் விபத்துகள் ஏற்பட்டன.

மிகவும் சங்கடியாக இருக்கும் 'டில்லி - கான்பூர் கிராண்ட் டிரங்க்' ரயில் பாதையில் இந்த விபத்துகள் நடந்ததால் ரயில் போக்குவரத்து கடுமையாகப் பாதிப்புக்குள்ளானது. உத்தரப் பிரதேச மாநிலம் எடாவா அருகில் உள்ள சராய் பொபாத் என்ற ரயில் நிலையத்தில் முதல் விபத்து நடந்தது.

பீகார் மாநிலத்தில் இருந்து புதுடில்லி நோக்கிச் சென்ற 'லிச்சாவி எக்ஸ்பிரஸ் ரயில்', நேற்றுமுன்தினம் காலை மகாத் என்ற ரயில் நிலையத்துக்கு வந்தது. அந்த ரயில் வந்த பாதையிலேயே, 'மகாத் எக்ஸ்பிரஸ்' ரயில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. கடுமையாகப் பனிப்பொழிவு இருந்ததால் அந்த ரயில் நிற்பதை 'லிச்சாவி எக்ஸ்பிரஸ்' ரயில் சாரதியால் பார்க்க முடியவில்லை.

எனவே, நின்று கொண்டு இருந்த ரயில் மீது 'லிச்சாவி எக்ஸ்பிரஸ்' கடுமையாக மோதியது. அந்த ரயிலில் இருந்த 12 பயணிகளும் படுகாயமடைந்தனர். இதனால், அந்த ரயில் நிலையமே பரபரப்பாக இருந்தது.

அதே நேரத்தில், கான்பூர் மாவட்டத்தில் உள்ள பாங்கி ரயில் நிலையத்தில் மிகப்பெரிய ரயில் விபத்து நடந்தது.

இதன்போது 7 ஆண்களும் 3 பெண்களும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேலும், ரயிலில் பயணம் செய்த 26 பயணிகள் பலத்த காயம் அடைந்தனர். சேதமடைந்த ரயில் பெட்டியை 'கியாஸ் கட்டர்' மூலமாக அறுத்து பயணிகள் மீட்கப்பட்டனர். காயமடைந்தவர்களில் 15 பேருடைய நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இதற்கிடையே, உத்தரபிரதேச மாநிலத்திலேயே பிரதாப்கார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணி அளவில் மூன்றாவது ரயில் விபத்து ஏற்பட்டது. இதன்போது யாருக்கும் காயம் ஏற்படவில்லை.



விபத்தின்போது சேதமடைந்த ரயிலைப்படத்தில் காணலாம்..

## கடும் குளிரால் இதுவரை 56 பேர் பலி

அலகாபாத், ஜன. 04

உத்தரப் பிரதேச மாநிலத்தில் கடுமையான பனிப்பொழிவு நிலவுகிறது. நேற்று முன்தினம் மிகக் குறைந்த அளவாக 5 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை மட்டுமே பதிவாகியிருந்தது. இதனால் கடும் குளிருக்கு நேற்றுமுன்தினம் ஒரே நாளில் மட்டும் 17 பேர் உயிரிழந்தனர். அதிகபட்சமாக அலகாபாத் நகரில் மட்டும் 4 பேர் பலியாகினர்.

இதையடுத்து குளிர் காரணமாக இறந்தோரின் எண்ணிக்கை 56 ஆக உயர்ந்துள்ளது. அலகாபாத் மாவட்டத்தில் வழக்கத்திற்கு மாறாக இரவு நேரங்களில் கடும் குளிர் நிலவுகிறது. இதனால் நேற்றுமுன்தினம் பலியான 17 பேரையும் சேர்த்து அந்த மாவட்டத்தில் குளிர் காரணமாக இறந்தோரின் எண்ணிக்கை 56 ஆக உயர்ந்துள்ளது. இதனிடையே மேலும் 2 நாட்களுக்கு கடும் பனிப்பொழிவு இருக்கும் என்று அந்த மாநில வானிலை ஆய்வுத்துறை தெரிவித்துள்ளது.

# தனித் தெலுங்கானாவை எதிர்த்து ஆந்திராவில் இன்று முழு அடைப்பு
## 5 ஆம் திகதி ரயில் மறியல் போராட்டம்

விஜயவாடா, ஜன. 04

ஐக்கிய ஆந்திராவை வலியுறுத்தியும், தெலுங்கானா விவகாரம் தொடர்பாக மத்திய அரசு 5ஆம் திகதி கூட்டியுள்ள அனைத்துக் கட்சி ஆலோசனைக் கூட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கடலோர ஆந்திரா, ராயலசீமா பகுதிகளில் இன்று (திங்கட்கிழமை) முழு அடைப்புப் போராட்டம் நடக்கிறது. 13 மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் கூட்டு நடவடிக்கை குழு இந்த முழு அடைப்புக்கு அழைப்பு விடுத்திருக்கிறது. இதேபோல் 5 ஆம் திகதி ரயில் மறியல் போராட்டமும் நடக்கிறது.

14 பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவ அமைப்புகளும், கடலோர ஆந்திரா, ராயல சீமா பகுதி காங்கிரஸ், தெலுங்கு தேசம், பிரஜா ராஜ்ஜியம் கட்சிகளும், ஒருங்கிணைந்த ஆந்திரா பாதுகாப்பு சமிதி அமைப்பும் இதில் கலந்துகொள்கின்றன.

இதனால் இன்று தமிழ் நாடு - ஆந்திரா மற்றும் ஆந்திரா வில் இருந்து பிற மாநிலங்களுக்கு இடையே வாகனப் போக்குவரத்தும், நாளை ரயில் போக்குவரத்தும் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

# 3 பாக். தீவிரவாதிகள் தப்பியோட்டம் புதுடில்லியில் பொலிஸார் தேடுதல்

புதுடில்லி, ஜன. 04

நாடு கடத்தப்பட வேண்டிய 3 பாகிஸ்தானியத் தீவிரவாதிகள் பொலிஸாரிடமிருந்து தப்பியோடியதை தொடர்ந்து தலைநகர் புதுடில்லி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் உஷார்படுத்தப்பட்டு பொலிஸார் தீவிர தேடுதலிலும் கண்காணிப்பிலும் ஈடுபட்டு உள்ளனர்.

கடந்த 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் புதுடில்லி செங்கோட்டை அருகே குண்டுவெடிப்புகள் நடத்திய வழக்கில் ரபகத் அலி, அப்துல் ரசாக், முகமது சாதிக் என்ற 3 பாகிஸ்தானியத் தீவிரவாதிகள் மேலும் 5 பேருடன் சேர்த்து கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் மூவரும் அண்மையில் தங்கள் சிறை வாசத்தை முடித்திருந்தனர். நாடு கடத்தப்படுவதற்காக லாம்பூர் தடுப்பு மையத்தில் அடைத்து வைக்கப்பட்டிருந்த இந்த 3 பாகிஸ்தான் தீவிரவாதிகளும் நேற்றுமுன்தினம் புதுடில்லியின் கோட்வாலியில் பொலிஸ் காவலில் இருந்து தப்பிவிட்டனர். மருத்துவ சிகிச்சைக்காக ஒரு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு திரும்பி வரும் வழியில் இவர்கள் பொலிஸாரிடம் இருந்து தப்பிவிட்டனர். பொலிஸார் வழக்குப்பதிவு செய்து மூவரையும் தேடி வருகின்றனர். அவர்கள் மூவரும் பொலிஸ் காவலில் இல்லை. அவர்கள் நாடு கடத்தப்படும் வரை அதற்கான அலுவலகத்தின் கீழ்தான் இங்கு இருந்தனர் என்று பொலிஸார் இதுபற்றி விளக்கம் அளித்தனர்.

ஆனால் இதனை மறுத்துள்ள வெளிநாட்டினருக்கான பிராந்திய பதிவு அலுவலகம் கூறுகையில், அவர்கள் மூவரும் தங்கள் காவலில் இல்லை. டில்லி பொலிஸ் சிறப்புப் பிரிவின் காவலில்தான் அவர்கள்



இருந்தனர் என்று தெரிவித்துள்ளது. 3 பாகிஸ்தான் தீவிரவாதிகளும் தப்பிவிட்டதைத் தொடர்ந்து தலைநகர் புதுடில்லியில் பொலிஸார் உஷார்படுத்தப்பட்டு அவர்கள் தீவிர கண்காணிப்பிலும், தேடுதல் வேட்டையிலும் ஈடுபட்டுள்ளனர்.

## இந்தியச் செய்திகள்

# ஆந்திரா – தெலுங்கானாவின் பொதுத்தலைநகரம் ஐதராபாத்
## மத்திய அரசு பரிசீலிப்பு

புதுடில்லி, ஜன. 04

தெலுங்கானா தனி மாநிலம் அமைப்பதற்கு முட்டுக்கட்டையாக உள்ள ஐதராபாத்தை தெலுங்கானா மற்றும் ஆந்திராவின் தலைநகரமாக மாற்றும் திட்டத்தை மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

தெலுங்கானா தனி மாநிலம் அமைப்பதற்கு ஐதராபாத் நகரம் பெரிய முட்டுக்கட்டையாக இருக்கிறது.


ஐதராபாத்தின் வளர்ச்சிக்கு நாங்களும் பெரிய பங்கு ஆற்றி இருப்பதால், தெலுங்கானவுக்கு அதை விட்டுக் கொடுக்க முடியாது என்று கடலோர ஆந்திரா, ராயலசீமா பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கூறி வருகின்றனர். அதே நேரம், வரலாற்று ரீதியாகப் பார்த்தால் தெலுங்கானாவுடன் ஐதராபாத் இணைந்தே வந்துள்ளது. அதை விட்டுக் கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை. ஐதராபாத் இல்லாத தெலுங்கானா மாநிலம், தலை இல்லாத உடம்பு போன்றதாகி விடும் என்கிறார் டி.ஆர்.எஸ். தலைவர் சந்திரசேகர ராவ்.

ஐதராபாத் நகரம் ஒட்டுமொத்த ஆந்திராவுக்கும் சொந்தமானது. அதன் வளர்ச்சிக்கு எல்லாரும் பணம் போட்டு இருக்கிறார்கள். அதை தெலுங்கானாவுக்கு மட்டுமே சொந்தமாக்க முடியாது என்று ராயலசீமா பகுதியின் மூத்த காங்கிரஸ் தலைவரான திவாகர் ரெட்டி கூறியிருக்கிறார்.

ஆனால், தெலுங்கானாவை அமைப்பதற்கு ஒரே வழி, ஐதராபாத்தை தெலுங்கானா, ஆந்திர மாநிலங்களின் பொதுவான தலைநகரமாக மாற்றுவதுதான் என்று மத்திய அரசு கருதுகிறது.

அரியானா, பஞ்சாப் மாநிலங்களின் ஒரே தலைநகரமாக சண்டிகர் இருக்கிறது. அதேபோல், ஐதராபாத் விவகாரத்திலும் இந்தத் திட்டம் பரிசீலிக்கப்படுகிறது. டில்லியில் நாளை நடக்கும் அனைத்துக் கட்சி கூட்டத்தில் பிரதமர் இந்த திட்டத்தை முன் வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழகத்தை குறிவைக்கிறார் மாயா
# 14 கட்சிகளின் கூட்டணிக்குத் திட்டம்



சென்னை, ஜன. 04

இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தக மையமாக வளர்ந்து வரும் தமிழகத்தின் மீது, அனைத்து மாநில அரசியல்வாதிகளும் கண் வைத்துள்ளனர். குறிப்பாக, உத்தரப் பிரதேச மாநில முதல்வர் மாயாவதிக்கு தமிழகத்தில் தனது பகுஜன் சமாஜ் கட்சியை பலப்படுத்த வேண்டும் என்ற ஆசையுள்ளது.

பூங்காக்கள் மற்றும் சிலைகள் அமைப்பு சர்ச்சையில் சிக்கியதால் சமீப காலமாக மாநில அரசியலில் மட்டுமே அவர் ஆர்வம் காட்டி வந்தார். இப்போது மீண்டும் பழைய பாணியில் தேசிய அரசியலில் அவர் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளார். கட்சியை பலப்படுத்தும் பணியைத் தீவிரமாக்கியுள்ளார். இதற்கு அச்சாரமாகக் கடந்த டிசெம்பர் 29 ஆம் திகதி உ.பி. தலைநகர் லக்னோவில், கட்சியின் அகில இந்திய அளவிலான நிர்வாகிகள் கூட்டம் நடந்தது. இதில், அக்கட்சியின் தமிழக நிர்வாகிகள் பலரும் பங்கேற்றனர்.

இக்கூட்டத்திற்குப் பின்னர் தமிழகத்தில் பகுஜன் சமாஜ் கட்சியை வளர்ப்பது குறித்தும், சட்டசபை பொதுத்தேர்தலை சந்திப்பது குறித்தும் மாயாவதி தீவிர ஆலோசனை நடத்தினார். அப்போது மாயாவதியிடம், 'தமிழகத்தில் 14 ஜாதிக் கட்சிகளை ஒருங்கிணைத்து கூட்டணி அமைக்கலாம் [illegible]' அதுதொடர்பான [illegible] மாயாவதி ஆர்வமாகக் கேட்டறிந்தார்.

இதைத் தொடர்ந்து, அக்கட்சியின் தமிழக தலைவர் செல்வப் பெருந்தகைக்கு மாயாவதி, பல்வேறு ஆலோசனைகளை வழங்கியுள்ளார். தமிழகத்தில் 14 ஜாதிக் கட்சிகள் இணைந்து புதிய கூட்டணி அமைத்தால் பெரிய கட்சிகளின் பலம் நிச்சயம் குறையும் என நம்பியுள்ளார்.

14 கட்சித் தலைவர்களிடமும் பேச்சு நடத்துங்கள். நமது கட்சியின் யானை சின்னத்தில் அனைவரும் போட்டியிடலாம். தேர்தலுக்கான செலவுகள் குறித்த விவரங்களை அவர்களிடம் சேகரித்து [illegible] அனுப்புங்கள்' என மாயாவதி கூறியுள்ளார் எனத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்னவை ஆதரித்து நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சுரேந்திர அஜித் ரூபசிங்க மற்றும் இடதுசாரி முன்னணியின் பொதுவேட்பாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: சுகந்தன்)

### யாழ்ப்பாணத் தேர்தல் கூட்டத்தில் விக்கிரமபாகு:

# தமிழர்களின் பூர்வீக வளங்களை வெளிநாட்டவருக்கு வாரி வழங்குவதும் அரசின் நிகழ்ச்சி நிரலில் உண்டு

## வெண்ணிற ஆடையுடன் வந்திருப்பவர் மக்களுக்காக உழைப்பார் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

யாழ்ப்பாணம், ஜன. 4

தமிழர்களின் படுகொலைகள் மட்டும் அரசின் யுத்த நிகழ்ச்சி நிரலில் அடங்கவில்லை. தமிழர்களின் பூர்வீக வளங்களை வெளிநாட்டவர்களுக்கு வாரிவழங்குவதும் அரசின் நிகழ்ச்சி நிரலில் இப்போதும் அடங்கியுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் இடதுசாரி முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன.

ஜனாதிபதி வேட்பாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னவை ஆதரித்து நேற்று மாலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இன்று இரு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களும் ஒருவரை ஒருவர் மாறிமாறி குற்றஞ்சாட்டுகின்றனர். தான் நாட்டில் இல்லாத வேளை வெள்ளைக்கொடியுடன் சரணடைய வந்த புலிகளின் மூத்த தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என்று மஹிந்தவை நோக்கிகை நீட்டுகிறார் சரத் பொன்சேகா.

ஆனால் சரத்பொன்சேகா கூறுவதற்கு முன்னர் புலிகளின் ஆதரவு ஊடகங்கள் மூலம் இந்த விடயம் வெளிவந்திருந்தது.

சரத் பொன்சேகாவின் இக்கூற்றை ஏற்று மஹிந்த ராஜபக்ஷ இது தவறாக நடந்துவிட்டது என மன்னிப்புக் கேட்பதை விடுத்து பொன்சேகா ஒரு துரோகி என்கிறார்.

மஹிந்த குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து கட்டளையிட்டார். ஆனால் நானே களத்தில் இறங்கிப் போராடினேன். ஆகவே நான்தான் யுத்தத்தை வென்றவன் - என்று சரத் பொன்சேகா சொல்கிறார்.

எனவே இன்று தமது ஆடைகளைக் களைந்து வெள்ளை உடையணிந்து வந்துள்ள இவர் எதிர்காலத்தில் மக்களுக்காகச் செயற்படுவார் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

யுத்தம் நிறைவடைந்துவிட்டது. அபிவிருத்தி தான் தனது அடுத்ததிட்டம். எனவே ஒரு புறம் பெருந்தெருக்கள் அமைப்பதாகவும் மறுபுறம் பாரிய விமான நிலையங்கள் நிர்மாணிப்பதாகவும் மஹிந்த ராஜபக்ஷ கூறுகிறார்.

தமிழரின் படுகொலைகள் மட்டும் அரசின் யுத்த நிகழ்ச்சி நிரலில் அடங்கவில்லை. தமிழர்களின் பிரதேசங்களின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்றுவிடுவதும் அரசின் நிகழ்ச்சி நிரலில் அடங்கியுள்ளது. அத்தகைய சந்தர்ப்பத்தில் தனது நோக்கங்களை இருவரும் இணைந்தே மேற்கொள்வர் என கை தட்டி மகிழ்ந்திருந்தது இந்தியா.

மலையக தொழிலாளர் 500 ரூபா சம்பள உயர்வு கோரிப் போராடியது எல்லோருக்கும் தெரியும். துறைமுக ஊழியர்கள், மின்சார சபை ஊழியர்கள், பெற்றோலியத் திணைக்கள ஊழியர்கள், வேலையற்ற பட்டதாரிகள் வேலைகேட்டுப் பேராடினர். ஆனால் இதற்கானதீர்வுகள் அரசால் முன்வைக்கப்படவில்லை.

முகாம்களில் அடைக்கப்பட்டவர்களை விடுதலை செய்வேன். தமிழர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பேன் என்று பொன்சேகா இப்போது கூறுகிறார். இவரது உறுதி மொழிகளைக் கேட்டால் நான் இவ்வாறான உறுதி மொழிகளைக் கூற மறந்துவிட்டேனோ என எண்ணத் தோன்றுகிறது! ஆனால் ஒன்று, பிரபாகரன் இன்று உயிருடன் இருந்தால் பொன்சேகாவின் வாக்குறுதிகளைக் கேட்டு வெட்கப்பட்டிருப்பார்.

தென் ஆசியாவிலே கல்வி அறிவு கூடியவர்கள் வாழும் பிரதேசம் யாழ்ப்பாணம் எனக் கூறப்படுகிறது. யாழ்.பொது நூலகம் எரிக்கப்பட்டதன் மூலம் குடாநாட்டு மக்களின் கலை, கலாசாரம் என்பன அழிக்கப்பட்டன. இவற்றை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

நீங்கள் எமக்கு வாக்களிப்பதன் மூலம் பிரதான வேட்பாளர்கள் ஐம்பது சதவீதத்துக்கு மேல் வாக்குகளைப் பெறுவதைத் தடுக்க முடியும். நாங்கள் மக்கள் இயக்கம் உருவாக்கி எமது உரிமைகளுக்கான போராட்டங்களை முன்னெடுக்கமுடியும் - என்று கூறினார்.

நேற்றைய கூட்டத்தில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சுரேந்திர அஜித் ரூபசிங்கா, இடதுசாரிகள் சார்பான சிங்கள ஊடகவியலாளர் ஒருவர் மற்றும் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும் பேசினர். (அ-16)

# டெங்கு கட்டுப்பாட்டு வாரம் பிரகடனம்; இன்று முதல் தீவிர நடவடிக்கைகள்

## இதுவரை 400 பேர் பாதிப்பு; 7 பேர் மரணம்

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய் தொடர்ந்து வேகமாகப் பரவி வருகிறது. இதுவரை 400 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், ஏழு இறப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

டெங்கு நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க யாழ். அரச அதிபர் கே. கணேஷ் தலைமையில் மாவட்ட டெங்கு நோய் கட்டுப்பாட்டுக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றச் செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், சுகாதாரப் பணிப்பாளர், சுகாதாரத் திணைக்கள உயரதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், பாதுகாப்புப் படைப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக டெங்கு நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்த இன்று திங்கட்கிழமை முதல் யாழ். மாவட்டத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு வாராமாகப் பிரகடனப்படுத்தப்படுகின்றது. இவ்வாரத்தில் பின்வரும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட வேண்டும் என்று நேற்றைய கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

* பிரதேச மட்டத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க பிரதேச டெங்குநோய் கட்டுப்பாட்டு ஒருங்கிணைப்புக் கூட்டம் பிரதேச செய லரால் ஒழுங்கு செய்யப்படும்.
* ஒவ்வொரு பாடசாலையிலும் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட முதல் நாளே (இன்றே) சிரமதானப் பணி மூலம் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் அழிக்கப்பட வேண்டும்.
* ஒவ்வொரு நிறுவனத்திலும், திணைக்களத்திலும் ஊழியர்களின் பங் களிப்புடன் சிரமதானப் பணி இடம்பெற வேண்டும்.
* ஒவ்வொரு தனியார் கல்வி நிலையமும் உரிமையாளர்களால் உடனடியாகத் துப்புரவு செய்யப்பட வேண்டும்.
* பொது இடங்கள் உள்ளூராட்சி மன்றங்களால் உடனடியாக கிரமமாக துப்புரவு செய்யப்பட வேண்டும்.
* மத வணக்கத் தலங்கள் சம்பந்தப்பட்ட பரிபாலன சபையினரால் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் துப்புரவு செய்யப்பட வேண்டும்.
* கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் தத்தமது கிராம மட்டத்தில் சிரமதானப் பணிமூலம் சுத்திகரிப்புப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.
* உள்ளூராட்சி மன்றங்கள் திண்மக் கழிவுகளைக் கிரமமாக அகற்றி, சரியான முறையில் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.
* கழிவு நீர் வடிகால்கள் நீர் தேங்காதவாறு தினமும் சுத்திகரிக்கப்பட வேண்டும்.
* வீதியோரங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களால் உடனடியாகத் துப்புரவு செய்யப்பட வேண்டும்.
* ஒவ்வொரு நிறுவன மட்டத்திலும் டெங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அதற்கு உரிய உதவிகளைச் சுகாதார வைத்திய அதிகாரிகள் / பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வழங்குவார்கள்.
* கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் கிராம மட்டத்தில் டெங்கு விழிப் புணர்வுக் கருத்தரங்குகளைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் உதவியுடன் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.
* ஒவ்வொரு வீட்டு உரிமையாளரும் / குடியிருப்பாளரும் தத்தமது வீட்டு வளாகத்தில் சுத்திகரிப்புப் பணி மூலம் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழிக்க வேண்டும்.

இந்தச் செயற்பாடுகளை அடுத்த ஒரு வார காலத்திற்குள் முன்னெடுத்து டெங்கு நோயைக் கட்டுப்படுத்த அனைவரையும் ஒத்துழைக்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ)

## தேர்தலைப் பகிஷ்கரிப்பதோ,.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிவித்தலில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

நீதி, நியாயம், சமவுரிமை, கௌரவ வாழ்வு ஆகியவற்றுக்கான இலங்கைத் தமிழர்களின் வேணவா சிதறடிக்கப்பட்டு, இன்று நமது இனம் பெரும் இக்கட்டில் சிக்கித் தவிக்கையில், ஒரு சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கி நமது மக்களை அரசியல் ரீதியாக வழி நடத்திச் செல்லவேண்டிய பாரிய பொறுப்பு உங்கள் மீது விழுந்துள்ளது என்பதை முத லில் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகி றோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எமது மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் இந்த ஜனாதிபதித் தேர்தலை தந்திரோபாயமாக எதிர்கொண்டு உரிய உத்திகளையும் வியூகங்களையும் வகுத்துச் செயற்படுவதன் மூலம், எமது மக்களுக்கான தீர்வை நோக்கிய அடுத்த கட்ட நகர்வுக்குச் சரியான அடித்தளத்தை நீங்கள் இடமுடியும். அத்தோடு தமிழர்களின் ஜனநாயக வாக்குப் பலத்தை வெளிப்படுத்தி நமது மக்களுக்கு நம்பிக்கையையும் ஊட்ட முடியும்.

இந்தச் சமயத்தில் உரிய அரசியல் ஈடுபடுதலில் (Political Engagement) சம்பந்தப்படாமல் பகிஷ்கரிப்பு என்ற போக்கில் விலகி நிற்பதோ அல்லது தனித் தமிழ் வேட்பாளர் என்ற கோஷத்துக்கு அடிபணிந்து தமிழர்களின் வாக்குகளை அரசியல் வலுவிழந்தவையாக்கி அர்த்தமற்றுப் போகவைப்பதோ தமிழ் பேசும் மக்களின் அரசியல் மீட்சிக்கு உதவப் போவதில்லை என்பது தெளிவு. பகிஷ்கரிப்பு என்பது நாங்கள் தேசிய அரசியல் நீரோட்டத்திலிருந்து ஒதுங்கிக்கொள்வதற்கான நியாயமாகி விடக் கூடாது.

### பேரம்பேசுதலுக்குரிய நல்ல சந்தர்ப்பம்

ஆகவே, அதிகாரத்துக்கு வரக்கூடிய தரப்போடு பேரம் பேசுதலுக்கான நல்ல சந்தர்ப்பமாக இந்த வாய்ப்பைப் பயன்படுத்துவதுடன், அதனைத் தீர்க்கதரிசனத் தொலை நோக்கோடும், புத்திசாதுரியத்துடனும் அணுகி, அதற்கேற்ப தேர்தலில் நமது மக்களை உரிய தெரிவைச் செய்யுமாறு வழி நடத்துவது உங்கள் பொறுப்பு. அதை நீங்கள் நிறைவேற்ற வேண்டும் எனத் தமிழ்ச் சமூகத்தின் புத்திஜீவிகளான நாங்கள் இந்த மிக முக்கிய காலகட்டத்தில் விநயமாக உங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் அரசியல் தலைமைத்துவங்களுக்கு! தமிழ்ப் புத்திஜீவிகள் சமுதாயம் விடுக்கும் விநயமான வேண்டுகோள் இது.- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்(நல்லை ஆதீனம், யாழ்ப்பாணம்), பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள் (ஆதீனகர்த்தா, திருகோணமலை ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் தேவஸ்தானம்), வண. கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் (யாழ். ஆயர்), வண.கலாநிதி சு. ஜெபநேசன் (முன்னாள் பேராயர், தென்னிந்தியத் திருச்சபை), வண. எஸ்.பி. நேசகுமார்(குருமுதல்வர், யாழ். அத்தியட்சாதீனம், இலங்கைத் திருச்சபை), வண. எஸ்.கே. கதிர்காமர்(தலைவர், மெதடிஸ்த திருச்சபை, யாழ். மறைமாவட்டம்), பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம், தலைவர்,சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான யாழ். கவுன்ஸில்), பேராசிரியர் கா.சிவத்தம்பி (தகைசார்ந்த ஓய்வுநிலைப் பேராசிரியர்), பேராசிரியர் சா. சத்தியசீலன்(பீடாதிபதி, பட்டப்பின் கல்வித்துறை, யாழ். பல்கலைக் கழகம்), எஸ்.சிவதாஸன் (திட்டமிடல் அமைச்சின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர்), சுந்தரம் டிவகலாலா(முன்னாள் செயலாளர், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு), கலாநிதி என்.தணிகாசலம் பிள்ளை(முன்னாள் மாகாணக்கல்விப் பணிப்பாளர், வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சு), வைத்தியகலாநிதி ஆர். தெய்வேந்திரன்(முன்னாள் தலைவர், செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணம்), சு.பரமநாதன் (செயலாளர், இந்து அமைப்புகளின் ஒன்றியம் - யாழ்ப்பாணம்),ஷெரீன் சேவியர் (மனித உரிமைகள் இல்லம்), கம்பவாரிதி இ.ஜெயராஜ் (அமைப்பாளர், அகில இலங்கைக் கம்பன் கழகம்), ஆறு. திருமுருகன் (தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்., தெல்லிப்பளை), கலாநிதி பி.கே.சுந்தரம் (பிரபல வர்த்தகர்), என்.கருணை ஆனந்தன் (வரி மதிப்பு ஆலோசகர்), வைத்தியகலாநிதி எஸ்.சிவானந்தராஜா (யாழ். பல்கலைக் கழக முன்னாள் மூதவை உறுப்பினர்) ஆகியோர் அடங்கிய குழு வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் சந்திரசேகரனின் இறுதிக் கிரியை இன்று மாலை

## தலவாக்கலை நகரசபை விளையாட்டு மைதானத்தில்

கொழும்பு, ஜன. 04

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் சமுதாய அபிவிருத்தி மற்றும் சமூக அநீதி ஒழிப்பு அமைச்சருமான பெரியசாமி சந்திரசேகரனின் இறுதிக்கிரியைகள் இன்று தலவாக்கலையில் நடைபெறும்.

மாரடைப்பால் வெள்ளிக்கிழமை அதிகாலை காலமான அமைச்சரின் பூதவுடல் அன்னாரின் தலவாக்கலை இல்லத்தில் இன்று மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ள மலையக மக்கள் முன்னணி வட்டாரங்கள், ஒருமணியளவில் அமைச்சரின் பூதவுடல் ஊர்வலமாகத் தலவாக்கலை நகரசபை விளையாட்டு மைதானத்திற்கு எடுத்துச்செல்லப்படவுள்ளது எனவும் அங்கு பூரண அரச மரியாதையுடன் இறுதிக்கிரியைகள் நடைபெறும் எனவும் தெரிவித்துள்ளன.

நேற்று லிந்துல நகரசபை மண்டபத்தில் அமைச்சரின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்தது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு சென்று தனது இறுதி மரியாதையைச் செலுத்தினார்.

லிந்துல நகரசபையில் வைக்கப்பட்டிருந்த அமைச்சரின் பூதவுடலுக்கு அரசியல் பிரமுகர்கள், சர்வ மதத் தலைவர்கள், பொதுமக்கள் என அனைவரும் அணிதிரண்டு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

மேலும் இந்திய அரசியல் தலைவர்கள் பலரும் தொலைபேசி மூலம் மலையக மக்கள் முன்னணியின் பிரதிநிதிகளைத் தொடர்பு கொண்டு தமது அனுதாபத்தைத் தெரிவித்து வருகின்றனர்.

முன்னதாக சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் அமைச்சரின் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த வேளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட அரசியல் தலைவர்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

### முல்லைத்தீவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் 1,200 பேர் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சேதமடைந்த அரச கட்டடங்கள் மற்றும் வீடுகளை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. புனரமைக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் கட்டம் கட்டமாக மீளக்குடியமர்த்தப்படுவார்கள் - என்றார். (அ-சி)

### ஆயுத ஊழல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினரும் பொன்சேகாவின் பேச்சாளருமான விஜித ஹேரத்.

அவர் அங்கு கூறியவை வருமாறு:-

அரசு முடிந்தால் ஆயுத ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பாக சரத் பொன்சேகாவை நீதிமன்றம் வரை கொண்டு சென்று பார்க்கட்டும்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக எந்த நேரத்திலும் விவாதிக்க அவர் தயாராக உள்ளார். விமல் வீரவன்ஸ எம்.பி. தெரிவித்துள்ள ஆயுத ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாகவிவாதிக்கவும் நாம் தயார். - என்றார் அவர்.

### நேரடி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற ஆயுதக் கொள்வனவு விவகாரம் தொடர்பில் விவாதமொன்றை நடத்துவதற்கு ஜே.என்.பியின் தலைவர் விமல் வீரவன்ஸ தயாராக இருக்கின்றார் என சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பல்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ளார் எனவும், இதனால் நேரடி விவாதங்களில் பங்கேற்கக் கூடிய சாத்தியம் கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேரடி விவாதமொன்றில் கலந்துகொள்ளுமாறு ஜெனரல் சரத் பொன்சேகாவின் ஊடகப் பேச் சாளர்களான அனுரகுமார திஸாநாயக்க மற்றும் மங்கள சமர வீர ஆகியோர் ஜனா திபதிக்கு எழுத்து மூல கோரிக்கை விடுத்திருந்தனர் எனத் தெரிவிக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### டெங்கு நோயைக் கட்டுப்படுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சுகாதாரத் திணைக்களம் பல்வேறு விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வரும் அதே சமயம் கொழும்பில் இருந்து விசேட மருத்துவக் குழுவையும் இங்கு அழைத்துள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி வருகைதரும் இந்தக் குழுவினர் யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவக் குழுவினருடனும், சுகாதாரத் திணைக்களத்தின் வைத்தியர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எனப்பல்வேறு துறைசார் அதிகாரிகளைச் சந்தித்து டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தவுள்ளனர் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஒ-04-09)

### தமிழ்த்தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் 17 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே இன்றைய கூட்டம் பற்றிய அறிவித்தல்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன எனக் கூறப்பட்டது.

ஜெயானந்தமூர்த்தி எம்.பி. வெளிநாட்டில் உள்ளார். கனகரட்ணம் எம்.பி. தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றார். சிவநாதன் கிஷோர், சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா ஆகியோரும் இக்கூட்டத்துக்கு அழைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்தமுறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூடிய போதும் இந்த ஐவரும் அழைக்கப்படவில்லை என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

''ஸ்ரீகாந்தாவும், சிவாஜிலிங்கமும் அவர்கள் சார்ந்த ரெலோ கட்சியிலிருந்து விலகிவிட்டனர் என அக்கட்சித் தலைமையே தெரிவித்துள்ள நிலையில் அவர்களை அழைக்கவேண்டிய கேள்வி எழவில்லை.'' - எனக் கூட்டமைப்பின் தலைவர் ஒருவர் குறிப்பிட்டார்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களை எப்படி வழி நடத்துவது என்பது குறித்து இன்றைய கூட்டத்தில் கூட்டமைப்பு எம்.பிக்கள் விரிவாக ஆராய்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தத் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களுடனும் தாம் நடத்திய பேச்சுகளின் விவரத்தை நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் இன்றைய கூட்டத்தில் விளக்குவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையில் -

இந்தத் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் எனக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஒருதலைப்பட்சமாக எடுத்துள்ள தீர்மானமும் இன்றைய கூட்டத்தில் காரசாரமாக விவாதிக்கப்படும் என எதிர்வு கூறப்படுகின்றது.

இதேசமயம், இந்த விவகாரங்கள் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டாலும் கூட, ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி என்ன தீர்மானம் எடுப்பது என்ற பொறுப்பு பெரும்பாலும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தவைர்களிடம் ஒப்படைக்கப்படும் விதத்தில் அங்கு முடிவு எட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான இரா. சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராஜா, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோவின் செயலதிபர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரிடம் இவ்விடயத்தில் முடிவெடுக்கும் கூட்டுப் பொறுப்பு ஒப்படைக்கப்படலாம் என சில வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (அ-சி)

### வேட்பாளர்களுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என மேலதிக தேர்தல் ஆணையாளர் டபிள்யூ. பீ.சுமணஸ்ரீ தெரிவித்துள்ளார்.

தேர்தல் வன்முறைகள் மற்றும் சுதந்திரமானதும், நீதியானதுமானதொரு தேர்தலை நடத்துவது ஆகியன குறித்து இக்கலந்துரையாடலில் ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (சி)

### அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் ஜே.வி.பி. ஆதரவாளர்கள் மீது பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவின் ஆதரவாளர்கள் தாக்குதலை மேற்கொண்ட வேளையே இந்த மோதல் வெடித் துள்ளது என சில செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

அமைச்சரின் ஆதரவாளர்கள் தடிகள், போத்தல்களுடன் எதிர்க்கட்சிகளின் பிரசாரத்தைக் குழப்ப முயன்ற வேளை அவர்கள் மீது திருப்பித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த மோதல் காரணமாகப் பல வாகனங்கள் சேதமடைந்ததுடன், வீதிப் போக்குவரத்தும் சிலமணி நேரங்களாகப் பாதிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அப்பகுதிக்கு மேலதிக பொலிஸார் அனுப்பப்பட்டனர். அவர்கள் மோதலில் ஈடுபட்டவர்களைக் கலைப்பதற்காக கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தை மேற்கொண்டதுடன் நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர் என்று கூறப்பட்டது. (அ-சி)


கார் விற்பனைக்கு
Nissar Exsaloon Model FB15 Year of Registration 2004
விபரங்களுக்கு: 0777776004

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna
நிலையியல் PHYSICS A/L 2011
ஆரம்பம் : 05.01.2010
செவ். வியா : 6.30 - 7.30 a.m
By: K.Selvan B Sc (Hons)

இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையம் நடத்தும் மாபெரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி 2010
I.P.L CRICKET TOURNEMENT - 2010
இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையம் நடத்தும் மாபெரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
விண்ணப்ப முடிவுத் திகதி - 28.01.2010
1st Prize - வெற்றிக்கிண்ணத்துடன் 10,000 ரூபா காசோலை
2nd Prize - வெற்றிக்கிண்ணத்துடன் 5,000 ரூபா காசோலை
விண்ணப்பப்படிவங்கள் பெறும் இடங்கள்
1) இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையம் - 0212227743, 0775256780
2) கஜாங்கனி பிறின்டேர்ஸ் (கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்)
3) லிங்கம் கொமினிகேஷன் (பரவிப்பாய் வீதி, இணுவில் - 0212225942)
4) Modern pcs System (70,18, K.K.S Road Chunnakam - 0772396818)
5) Keep in touch phone shop (Manipay Road, Anaikoddai)
6) Ahiezer suppliers (No 289, Kalatty junction, Jaffna - 0776947601)

DMI
A/L 2012
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஜனவரி -09
காலை 9.00 மணி
D.Sam, சந்திரசேகர், ஜெகதீஸ்வரன், பாபு, இளங்கோ, பவன், மங்களேஸ், பத்மன், திலகை, ரமேஸ், செந்தூர், மதி, தவசேகர், சிறி, பரீத்

ஆரம்பம்: 09.01.2010 சனி
A/L 2012
கலை, வர்த்தகம்
(93240) யூனிவேர்சல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)

SUBRA(14)
சித்தன்கேணி வட்டுக்கோட்டை
இரு இடங்களிலும் 15.01.2010 A/L மாலை 4.30
* 2009 A/L 7 மாணவர் 3A பெறுபேறு, 49 பேர் பல்கலைக்கழக அனுமதி.
* நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு அனுமதி முற்றிலும் இலவசம்.
* தரம் 1 முதல் O/L வரை புதிய பிரிவு 05.01.2010 இல் 4.30 இற்கு ஆரம்பமாகின்றது.
Spoken English- BY: Britto
புதிய பிரிவு செவ்., வியா., 8 - 9 மணி - 05.01.2010

நியூ கேம்பிறிச் (அளவெட்டி)
புதிய நிர்வாகம் புதிய ஆண்டு புதிய உதயம்
* தரம் 1- O/L புதிய ஆசிரியர் குழாமின் ஒன்றிணைந்த சேவை.
* நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு அனுமதி முற்றிலும் இலவசம்
* சிறப்பு வகுப்பு தரம் 5
''ஆசிரியர் அன்பழகனின் வழிகாட்டலில் பரீட்சை''

நிறை குடம் தழம்பாது
விக்னா கல்வி நிறுவனம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
34 ஆவது வருட சேவையில் தனித்துவமான ஆசிரியர் குழுவின் ஒன்றிணைந்த சேவை
கலை, வர்த்தக வகுப்புகள்
A/L 2012
ஆரம்பம்: 10.01.2010 காலை 8 மணி.
அனுமதிகளை இன்று முதல் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தொழிற்பயிற்சிகள்
* Mobile Phone Repairing.
* ஏயர் கொண்டிசனிங்.
* எலக்ரிக்கல் வயறிங், றீவைண்டிங்
* றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்.
* Motor bycycle Repairing.
சகல பயிற்சிகளும் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
பயிற்சிகள் ஆரம்பம் : 06/01/10 (கிழமை நாள்கள்)
03/01/10 (சனி, ஞாயிறு)
விவரங்களிற்கு,
JAFFNA TECHNICAL INSTITUTE
இல.46, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 0718561654, 0779254078.
(இ/563806)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org